பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 01 திங்கட்கிழமை (18.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 326

## ஜனாதிபதி தலைமையில் வவுனியாவில் நடக்கும்

# வடக்கு அபிவிருத்திக் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை

## குற்றஞ்சாட்டுகின்றார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு,ஒக்ரோபர்18

வட மாகாண அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் வவுனியாவில் நாளை நடைபெற உள்ள கூட்டத்துக்கு, வட மாகாணத்தில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று கடுமையாகக் குற்றம்சாட்டி உள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அரசு இவ்வாறு நடந்து கொள்வது தமிழ் மக்களைப் புறக்கணிப்பதற்கு ஒப்பானது எனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா கூட்டுப்படைத் தலைமையகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள், மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தொடர்பான விடயங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது என வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.என். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பும் பொறுப்பு

(24 ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமொன்று நேற்று கொழும்பு பம்பலப்பிட்டி, ரீட் அவெனியூவில் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அலுவலகத்தைத் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் கலந்துகொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோருடன் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## அரச அபிவிருத்திக் கூட்டங்களுக்கு கூட்டமைப்பினரை அழைக்காதது ஏன்?

### அவர்களின் மாற்றுக் கருத்துக்கள் தான் காரணம் என்கிறார் அமைச்சர் ரிஷாத்

வவுனியா, ஒக். 18

எதிர்க்கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்பதாலேயே மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் போன்ற அரச அபிவிருத்திக் கூட்டங்களுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை அழைப்பதில்லை என்று தெரிவித்தார் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

''வன்னி மக்களின் அவலங்களுக்கு முடிவுகாண நடத்தப்படும் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டால், முரண்பாடுகள் ஏற்படும். மக்களுக்குரிய தேவைகள் பூர்த்தி செய்யப்படமாட்டாது. இதன் காரணமாகவே கூட்டமைப்பின் பங்களிப்பு இன்றி மக்களுக்குத் தேவையான உதவிகளை அரசு வழங்கி வருகின்றது'' - என்றார் ரிசாத் பதியுதீன்.

வவுனியா மாவட்டத்துக்கான இணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வவுனியா செயலகத்தில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அமைச்சர் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் வன்முறையை எதிர்த்து ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

### நாளை லிப்டன் சுற்றுவட்டத்தில்

கொழும்பு, ஒக்.18

பொலிஸாருக்கு எதிரான ஊடகவியலாளர்களின் ஆர்ப்பாட்டம் நாளை பகல் 12.00 மணிக்கு லிப்டன் சுற்று வட்டாரத்தில் இடம்பெறும். ஐந்து ஊடக அமைப்புகள் கூட்டாக இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களில் சிலர் பொலிஸாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தம் குறித்து கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி

கொழும்பு, ஒக்.18

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தத்தினால் உத்தேச சிறுபான்மைக் கட்சிகளுக்கு நன்மை இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை தெரிவித்துள்ளன.

இருந்தும் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான உத்தேச திருத்தத்துக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து கூட்டமைப்பு இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் உத்தேச திருத்தங்களில் நல்ல அம்சங்கள் காணப்படுகின்ற போதும் நாட்டுக்கும் சிறுபான்மை சமூகங்களும் பாதகமான பல அம்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ், அவற்றை சீர்செய்யும் வரை அடுத்த வருடம் நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை இப்போதுள்ள விகிதாசார முறைப்படி நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது. (சி)

உள்ளே

வெளிநாடுகளில் அணிதிரள முயற்சி - கோத்தபாயா — பக்கம் 03

சரணடைந்து காணாமற்போனோர் விவரம் அமெரிக்காவிடம் — பக்கம் 11

பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு — பக்கம் 02

### கல்விச் சுடர்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான கணிதம் பகுதி I,II வினாத்தாள்கள்

உள்ளே

## இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகை பிற்போடப்பட்டது

கொழும்பு, ஒக். 18

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இந்த மாதம் மேற்கொள்ளவிருந்த இலங்கைப் பயணம் அடுத்த மாதம் 25 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டு ள்ளது. அவர் நவம்பர் 28ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார் என இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெறும் இலங்கை - இந்திய இணை ஆணைக்குழுக் கூட்டத்துக்கு அவர்

(24 ஆம் பக்கம் பார்க்க)

சதவீதம் வரையில்

ஆகக்குறைந்த வட்டி!

உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது, 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுனுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வினின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

LISVIN
LISVIN INVESTMENTS LIMITED

லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web: www.lisvin.com | E-mail: lisvin@lisvin.com

குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு*

அங்கீகாரம் பெற்ற விசேடமான நிதிக் குத்தகை நிறுவனம், 2000 ஆம் ஆண்டு 56 ம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*நிபந்தனைகள் உள்ளடங்கும்

# எந்தவொரு தீவிரவாத அமைப்புக்கும் இலங்கையில் பயிற்சி முகாம் இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

லஷ்கர் இ தொய்பா உட்பட எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்கும் இலங்கையில் பயிற்சி முகாம் இல்லை - என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவிடம் தெரிவித்துள்ளார்.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா' ஆங்கில தினசரிப் பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அதைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானியப் பயங்கரவாத அமைப்பான லஷ்கர் இ தொய்பா உட்பட எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்கும் இலங்கையில் பயிற்சி முகாம் இல்லை என்பதை பாதுகாப்பமைச்சு உறுதிப்படுத்தி உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாத இயக்கங்களுக்குப் பயிற்சி முகாங்கள் உள்ளன என்பது எல்லாம் பொய் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் பூனே நகரத்தில் அமைந்திருந்த ஜேர்மனிய பேக்கரி ஒன்றில் கடந்த பெப்ரவரி மாதம் வெடிகுண்டு வைக்கப்பட்டது.

இக்குண்டு வெடிப்புச் சம்பந்தமாக அம்மாநிலப் பொலிஸாரால் கடந்த மாதம் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், கொழும்பில் உள்ள பயிற்சி முகாம் ஒன்றில் தான் பயிற்சிகளைப் பெற்றிருந்தார் என்று பொலிஸாருக்கு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## 4000 பேர் விடுதலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 4000 பேர் அவர்களது குடும்பங்களுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 6000 பேர் வரையிலானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர் - என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# குடாநாட்டில் 5 லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 18

ஐந்து லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யும் திட்டம் யாழ். மாவட்டத்தின் பிரதேச செயலக ரீதியாகத் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் எம்.பி.லோகநாதன் ''உதயன்''க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொதுமுகாமையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் எவ்வளவு பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன என்பது தொடர்பாகப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளோம்.

அந்தப் பட்டியலின்படி நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 25 ஆயிரம் பனம் விதைகள், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 40 ஆயிரம் பனம் விதைகள், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 50 ஆயிரம் பனம் விதைகள், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 25 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

அதேபோன்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரம், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 50 ஆயிரம், சண்டிலிப்பாய் பிரிவில் 40 ஆயிரம், தெல்லிப்பழையில் 50 ஆயிரம், உடுவிலில் ஆயிரம் -

கோப்பாயில் 40 ஆயிரம், கரவெட்டியில் 40 ஆயிரம், பருத்தித்துறையில் 30 ஆயிரம், மருதங்கேணியில் 50 ஆயிரம், சாவகச்சேரியில் 40 ஆயிரம் எனப் பனம் விதைகள் நடுகை செய்யத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் 5 லட்சம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டத்தைப் பூர்த்திசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.(ஒ-14-135)

# பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 18

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவிற்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரபுக்களை விடவும் கூடுதலான பாதுகாப்பு ஒழுங்குகள் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்துறை வரலாற்றில் இவ்வாறு அதிகளவு பாதுகாப்பு வேறும் எந்தவொரு பொலிஸ் மா அதிபருக்கும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெற்ற காலத்தில் கூட பொலிஸ் மா அதிபர்களுக்கு இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 180 உத்தியோகத்தர்கள் தற்போதைய பொலிஸ் மா அதிபரின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், 19 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வன்னியில் மீட்கப்பட்ட நிலக்கண்ணிகள் பாக்., அமெ. தயாரிப்பாம்

வன்னியில் மீட்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கண்ணி வெடி அகற்றும் இணைப்பு அதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தனர்.

# பொன்சேகாவுக்கான தண்டனை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

## மஹிந்த சமரசிங்க கூறியது பொய் என்கிறார் ஜயலத்

கொழும்பு, ஒக். 18

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறைத் தண்டனை தொடர்பாக ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்த முறைப்பாடு அந்த ஆணைக்குழுவால் தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜயலத் ஜயவர்த்தனவே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா மீதான அரசியல் பழிவாங்கல், அவருக்கு எதிரான அடிப்படை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எமது கட்சியின் சார்பில் நான் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இம் மாதம் இரண்டாம் திகதி முறைப்பாடு ஒன்றைச் செய்தேன்.

அம்முறைப்பாட்டை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன்படி நான் செயற்பட்டேன்.

ஒக்டோபர் 5ஆம் திகதி அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த சமரசிங்க ஆகியோர் இலங்கையின் சார்பில் விளக்கம் ஒன்றை முன்வைத்தனர். நான் சமர்ப்பித்த முறைப்பாடு ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்று மஹிந்த சமரசிங்க பின்னர் ஊடகங்களுக்குக் கூறினார். எனது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது என்று கூறப்படுவது முற்றிலும் பொய். அது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளது. விசாரணையின் பின்பு தீர்ப்பை ஆணைக்குழு வெளியிடும்.

மஹிந்த சமரசிங்கவின் கூற்று தொடர்பாக நான் ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்துக்கு முறைப்பாடு செய்தேன். நான் சமர்ப்பித்த பொன்சேகா தொடர்பான முறைப்பாடு எந்த மட்டத்தில் உள்ளது என்று அறிவிக்குமாறு செயலாளர் நாயகத்திடம் கேட்டுக்கொண்டேன். அதன்படி, ''அந்த முறைப்பாடு நிராகரிக்கப்படவில்லை. அது விசார ணைக்குட்படுத்தப்படுகின்றது'' என்று செயலாளர் நாயகம் எழுத்துமூலம் எனக்கு அறிவித்தார்.

இதுதொடர்பாகப் பொய் கூறியமைக்காக மஹிந்த சமரசிங்க இந்நாட்டு மக்களிடமும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் மன்னிப்புக் கோர வேண்டும். - என்றார். (சி)

எதிர்க்கட்சித் தலைவரின்

## ரணில் நேற்று லண்டன் புறப்பாடு

கொழும்பு, ஒக். 18

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இலங்கை அரசு இழைத்துள்ள அநீதிகள் குறித்து, பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றக் குழுவினருக்கு விளக்கமளிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிற்றுக்கிழமை லண்டன் சென்றுள்ளார்.

இரண்டு வார விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ள இவர் பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவினரைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், வெளிவிவ்கார அமைச்சர் வில்லியம் ஹக் மற்றும் கொன்சவேட்டிவ் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, லண்டனுக்கான விஜயத்தை நிறைவு செய்த தன் பின்னர், ரணில் விக்கிரமசிங்க நோர்வே நாட்டுக்குச் செல்லவுள்ளார்.

நோர்வே ஹெய்தின்போது அவர், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் எரிக் சொல் ஹேய்மையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (சி)

# கம்பஹாவில் கோஷ்டி மோதல்; இருவர் பலி; இருவர் காயம்!

கம்பஹா, மினிறுவன்கம பகுதியில் நேற்று அதிகாலை இரு கோஷ்டிக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் இருவ்ர் படுகாயமடைந்த நிலையில் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றை பார்வையிடுவதற்கு வந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலினாலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)



யாழ். வண்ணை காளியம்பாள் ஆலயத்தின் மானம்பூ திருவிழாவை முன்னிட்டு அம்பாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி நேற்றிரவு வீதியுலா வந்த வேளை எடுக்கப்பட்ட படம் (ஒ-16)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 'எயர்ரெல்' 30 சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.18

'எயர்ரெல்' நிறுவனத்தின் அனுசரணையுடன், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 30 சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம், யாழ்.வணிகர் கழகத்திடம் விடுத்திருந்த கோரிக்கையின் பயனாகவே வணிகர் கழகத்தின் முயற்சியால் இந்தச் சக்கர நாற்காலிகள் அன்பளிப்பாக வழங்கப்படவிருக்கின்றன.

இந்த நிகழ்வின் போது 'எயர்ரெல்' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் இவை கையளிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தனது கிளையை 'எயர்ரெல்' நிறுவனம் ஆரம்பிப்பதை ஒட்டியே இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெறுகின்றது. (ஒ-14)

# ஐம்பது மில்லியன் ரூபா கப்பம் கேட்ட இராணுவ மேஜரும் 2 சகாக்களும் கைது

## கொட்டாஞ்சேனையில் சம்பவம்

கொழும்பு,ஒக்.18

தமிழ் நகை வியாபாரி ஒருவரைக் கடத்தி அவரிடமிருந்து 50 மில்லியன் ரூபாவை கப்பமாகப் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு ராணுவ மேஜரையும் அவருக்கு உதவி புரிந்தவர்களான இரு நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நகை வியாபாரி ஏற்கனவே இதே சந்தேக நபர்களால் கடத்தப்பட்டவர் என்றும் 20 மில்லியன் ரூபாவை அவர் செலுத்தியதன் பேரில் விடுவிக்கப்பட்டவர் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் தமது மகனை பாடசாலைக்கு காரில் கொண்டு சென்றபோது இதே குழுவினரால் கடத்தப்பட்டார் என்றும் பின்னர் சிறுவனை விடுவித்த அவர்கள் நகைக்கடை உரிமையாளரை வீட்டாருக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்து பணயப் பணம் பற்றி அறிவிக்கும்படியும் கேட்டிருக்கிறார்கள். தாம் வியாபார நிலையத்தில் இல்லாத நிலையில் அவ்வளவு பெரிய தொகையைத் திரட்டுவது சாத்தியமில்லையென்றும் தம்மை விடுவித்தால் அடுத்த நாளில் பணத்தை செலுத்துவதாகவும் அவர் உறுதியளித்ததன் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கடத்தல் விவகாரம் பற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தால் கொலை செய்யப்படுவார் என்ற அச்சுறுத்தலுடன் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் நகை வியாபாரி பிரபல தனியார் மருத்துவமனையொன்றிலிருந்து கடத்தல் கும்பலுடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற்றுக்கொள்ள அங்கு வரும்படியும் கூறியுள்ளார்.

இதேசமயம் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சாதாரண உடையில் அங்கு காத்திருந்துள்ளார்கள். கடத்தல் கும்பலைச் சேர்ந்த மேஜர் மருத்துவமனையின் மேல்மாடி ஒன்றில் வைத்து நகை வியாபாரியிடம் பணத்தையும் பெற்றுக்கொண்டு திரும்புகையில் கைது செய்யப்பட்டார். கீழ் மாடியில் காத்திருந்த அவரது இரண்டு உதவியாளர்களும் கைது செய்யப்பட்டனர். மருத்துவமனைக்கு வெளியில் வாகனம் ஒன்றில் காத்திருந்தார்கள் என்று கூறப்படும் இருவரையும் தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# மோசமான நிலையில் பண்ணை வீதி; போக்குவரத்தில் அல்லற்படும் தீவக மக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்.நகரையும் தீவுப்பகுதிகளையும் இணைக்கும் பண்ணை வீதி சீரற்ற நிலையில் இருப்பதால் தீவக மக்கள் போக்குவரத்தின் போது பல இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். இந்த வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் வாகனப் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

தற்போது மழை ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியின் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. தற்போது இந்த வீதி புனரமைக்கப்பட்டபோதும் 50 வீதமான பகுதியே புனரமைக்கப்பட்டுள்ளது.

அகலம் குறைவான இந்த வீதியால் சதாரண காலங்களில் வீதி சீராக இருக்கும் போதே பயணிப்பது கடினம் எனக் கூறும் இப்பகுதி மக்கள் மழைகாலத்தில் எதிரேவரும் வாகனங்களுக்கு விலகி வழி விடும் போது வாகனங்கள் புதையுண்டு போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான லொறி ஒன்று புதைந்து நீண்டநேரம் போக்கு வரத்து தடைப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் விபத்துக்களும் அதிகரித்துள்ளன.

எனவே இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த வீதியை விரைவாக புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தவிர நிஷா புயலினால் சேதமடைந்த இந்த வீதி மூன்று வருடங்களாகியும் புனரமைக்கப்படவில்லை.

இனிவரப்போகும் பெருமழையினாலும் கடல் கொந்தளிப்பாலும் மிகவும் சேதமடைந்திருக்கும் இவ்வீதி கடலினால் அழிக்கப்பட்டு விடலாம் என்று தெரிவித்த மக்கள் இதனால் தாம் படகில் பயணிக்க வேண்டிய நிலை உருவாகினால் மிகுந்த சிரமம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

எனவே நீண்டகால எமது பயண அவலத்தை முடிவுக்கு கொண்டுவர பண்ணையில் இருந்து மண்டைதீவு வரையான வீதியையாவது புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6-325)

## நிறைவு தினமும் பரிசளிப்பும்

ஊர்காவற்றுறை கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய ஸ்தாபகர் மகாதேவா சுவாமிகள் நிறைவு தினமும் வருடாந்த பரிசளிப்பு வைபவமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய சர்வானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் கே.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினும் சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.கமலேந்திரனும் கலந்துகொள்வர். (ஐ-16)

# யாழ்.ஆஸ்பத்திரியில் சுடுதண்ணீர் பெறுவதில் நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக். 18

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர்கள் தமக்குத் தேவையான சுடுதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போதனாவைத்தியசாலையில் உள்ள தேநீர்ச்சாலையில் தமக்குத் தேவையான சுடுதண்ணீரைத் தேவையான வேளைகளில் பெற முடியாத நிலை உள்ளதாகவும், இதனால் தாம் வைத்தியசாலை வளாகத்தைவிட்டு வெளியே வந்து அதனைப் பெறுவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் உள்ள தேநீர்ச்சாலையில் சுடுதண்ணீர் பெறுவதற்கு நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளதாகவும், நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் கடந்து சுடுதண்ணீர் பெற அங்கு நிற்க வேண்டி ஏற்படுவதாகவும் இவ்வாறு சுடு தண்ணீரைப் பெற்றுக் கொண்டு விடுதிகளுக்குச் செல்லும் போது தாம் பாதுகாப்பு ஊழியர்களால் தடுக்கப்படுவதாகவும் நோயாளர்களைப் பார்வையிட வருவோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நோயாளர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-288)

# சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட்டாலே நாட்டை விரைவில் அபிவிருத்தி செய்யமுடியும்

## மகாநாயக்கருடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமானால் சர்வதேசத்துடன் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாளைய உலகை வெற்றி கொள்ளக்கூடிய வகையில் மொழித் திறமையுடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்க சிறந்த வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெலிகம நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை தென் மாகாண மகாநாயக்கருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மேலும் கூறுகையில் -

சமூகம் எதிர்கொண்டுள்ள பிரதான சவாலான போதைப்பொருள் பாவனையில் இருந்து எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பதற்கு மகாநாயக்கர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

அரசு எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கு சிறந்த ஒழுக்கமுள்ள சந்ததியினர் அவசியம் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அறிவுடைய சந்ததியினரை உருவாக்குவது அவசியம் - என்று கூறினார்.

இதேவேளை, சுமார் 7 கோடி ரூபா செலவில் வெலிகம நகரில் அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதியையும் ஜனாதிபதி திறந்து வைத்தார்.(சி)

## வெளிநாடுகளில் புலிகள் அணிதிரள முயற்சி

# அகதிகள் விடயத்தில் ஆஸி. கண்டிப்புடன் செயற்படவேண்டும் என்கிறார் கோத்தபாய

கொழும்பு, ஒக். 18

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அகதி அந்தஸ்து கோரி வருவோர் தொடர்பாக அவுஸ்திரேலியா மிகவும் கண்டிப்புடன் செயற்படவேண்டும் - என்று இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டு அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் 'த அவுஸ்திரேலியன்' பத்திரிகைக்கு வழங் கியுள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையிலிருந்து இருந்து படகுகள் மூலம் அவுஸ்திரேலியா நோக்கி அகதிகள் செல்வதை இலங்கைக் கடற்படையினரும் பொலிஸாரும் தடுத்து நிறுத்தியுள்ளனர். இங்கிருந்து படகு மூலம் அகதிகள் அடைக்கலம் தேடிச் சென்ற ஒரு சம்பவம் கூட அண்மைக் காலத்தில் இடம் பெறவில்லை.

தற்போது மூன்றாவது நாடு ஒன் றுக்கு விமானம் மூலம் சென்று அங்கிருந்து அவர்கள் புறப்படு கின்றனர். அவர்கள் இலங்கையில் இருந்து செல்வதற்குக் கார ணம் ஏதும் இல்லை. இலங்கையில் தற்போது எந்தப் பயமும் இல்லாத நிலையில் எதற்காக அவர்கள் வெளியே செல்ல வேண்டும்?

அவர்கள் எந்தவொரு இடத்திலும் சுதந்திரமாக வாழ முடிகிறது. குறிப்பிட்ட நாடுகள் அனுதாபம் காட்டி அகதி அந்தஸ்து கொடுக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டே இங்கு அவர்கள் வருகிறார்கள். இதைத் தடுப்பது மிகவும் சிக்கலானது.

அவுஸ்திரேலிய அரசு அகதி அந்தஸ்து வழங்கும் விடயத்தில் மிகவும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும், அகதி அந்தஸ்து வழங்குவதை நிறுத்தினால் மிகவும் சுலபமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் போரின் இறுதிக்கட்டத்தில் தப்பியுள்ளனர். சில குழுக்கள் வேறொரு அமைப்பின் கீழ் தொடர்ந்து போராட முனைகின்றனர். அவர்கள் ஏனைய நாடுகளில் மீள அணிசேரக் கூடும். இது குறித்து ஆஸ்திரேலிய அரசு மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

ஆகவே இவ்விவகாரம் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசு தமது நாட்டுப் புலனாய்வுத் துறையினரை ஈடுபடுத்தி மிக அவதானத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

அவுஸ்திரேலியாவுடன் இலங்கை மிகவும் நெருக்கமாகச் செயற்படுகிறது. முக்கியமாக ஆள் கடத்தல் விவகாரங்களில் நெருக்கமாகச் செயற்படுகிறோம்.

இதற்காக அவுஸ்திரேலியா காவல் துறை, கடற்படை அதிகாரிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இப்படி அவர் தெரிவித்தார்.

## யாழ். பல்கலையில் விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.மாவட்டத்தின் கட்டிளம் பருவத்தினருக்கும் வளர்ந்தோருக்குமான இனப்பெருக்க சுகாதாரத் தேவைகள் எனும் கருப்பொருளிலான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 'ஏ' பிரிவின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

இதில் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.விஞ்ஞனச் சங்கத்தின் 'ஏ'பிரிவின் செயலாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுத மூர்த்தி கேட்டுள்ளார். (ஒ-16)




கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற யாழ். இந்து பழைய மாணவர் சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. ஈ.சரவணபவன் பெற்றுக் கொள்கிறார்.

# சிகிச்சைக்குச் சென்ற மூதாட்டி தங்க நகையைப் பறி கொடுத்தார்

## யாழ்.ஆஸ்பத்திரியில் சம்பவம்

சிகிச்சை பெறச் சென்ற மூதாட்டியின் தங்க நகையைச் சாதுரியமாக அபகரித்துச் சென்றான் திருடன். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-


வைத்தியசாலையில் மருந்து எடுப்பதற்காக காத்திருந்த மூதாட்டி சிறுநீர் கழிப்பதற்காக வைத்தியசாலையின் மலசல கூடத்துக்குச் சென்றுள்ளார். மலசல கூடத்தின் அருகே நின்றிருந்த ஒருவர் 'உள்ளே செல்வதானால் நகைகளை அணிந்து செல்லக் கூடாது. தவறி உள்ளே விழுந்துவிடும். ஆகையால் உங்கள் நகைகளைக் கழற்றி என்னிடம் தந்துவிட்டுச் செல்லுங்கள்' எனக் கூறியுள்ளான்.

மூதாட்டியும் தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் ஒரு சோடி காப்பையும் கழற்றி அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே சென்று திரும்பி வந்துள்ளார். பின்னர் இருவரும் மருந்து எடுக்கும் இடத்துக்குச் செல்ல திருடன் 'உங்கள் மருந்துச் சிட்டையைத் தாருங்கள் நான் மருந்து எடுத்து வருகின்றேன்' எனக்கூறி மருந்துச் சிட்டையைப் பெற்றுச் சென்றுள்ளான்.

நகைகளை மீண்டும் பெறுவதற்கு மறந்துவிட்ட மூதாட்டி மருந்துச்சிட்டையை அவனிடம் கொடுத்துள்ளார். நகையுடனும் மருந்துச் சிட்டையுடனும் சென்றவன் சன நெரிசலுக்குள் புகுந்து மறைந்து தலைமறைவாகி விட்டான். தனது நகைகளுடனும் மருந்துகளுடனும் வருவான் என நீண்ட நேரம் காத்திருந்த மூதாட்டி பின்னரே தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்.

நகைகளையும் இழந்து நோய்க்கு மருந்தையும் பெறாமல் அவர் வீடு திரும்பினார். இவ்வாறான ஏமாற்றுச் சம்பவங்கள் வைத்தியசாலையில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - வைத்தியசாலைக்கு வருபவர்கள் நகைகளை அணிந்து வரவேண்டாம் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (த-6-26)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நவராத்திரி விழா நேற்று கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கல்லூரியின் உப அதிபர் பொ.ஞானதேசிகன் சிறுமி ஒருவருக்கு ஏடு தொடக்குவதையும் பழைய மாணவர் சங்கத் தலைவர் கப்டன் நா.சோமசுந்தரம் மாணவன் ஒருவனுக்கு பதக்கம் சூட்டுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: டிலீப்)

# இந்தியப் பயணத்தின் போது அதிக நாள்கள் அங்கு தங்குவதற்கு அமெரிக்க அதிபர் முடிவு

## ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிப்பு

வாஷிங்டன், ஒக். 18

அடுத்த மாதம் இந்தியா வரவுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்தியாவில் அதிக நாள்கள் தங்கியிருக்க முடிவு செய்துள்ளார். ''இது, இந்தியாவுடனான நட்புறவைப் பலப்படுத்துவதற்கு அமெரிக்க அதிக ஆர்வம் காட்டுவதை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது'' என அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். ஐந்து நாள்கள் வரை அவர் இங்கு தங்கியிருக்கக் கூடும் எனத் தெரிகிறது. அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதிலிருந்து, ஒபாமா, இத்தனை அதிக நாள்கள் வேறு எந்த ஒரு வெளிநாட்டிலும் தங்கியது இல்லை என அமெரிக்க ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுடனான நட்பைப் பலப்படுத்துவதற்கு, அமெரிக்கா அதிக ஆர்வமுடன் இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது என அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் மும்பை, அமிர்தசரஸ், டில்லி ஆகியவை உள்ளிட்ட நகரங்களில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒபாமா பங்கேற்கவுள்ளார். மும்பையில் கடந்த 2008 இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் நினைவு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

இது குறித்து தெற்காசியாவுக்கான அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் ரொபர்ட் பிளேக் குறிப்பிடுகையில், ''ஜனாதிபதியின் இந்திய சுற்றுப் பயணத்துக்கான அட்டவணை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இருந்தாலும், அமெரிக்க ஜனாதிபதியின் இந்திய சுற்றுப்பயணம், உறவை மேலும் பலப்படுத்தும்'' என்றார்.


### வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ்.
பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு
கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு,
நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0783251872


# அஜ்மல் கசாப்பிடம் விசாரணை நடத்தாமல் 6 பேர் மீதான வழக்குகளை தொடர முடியாது

## பாகிஸ்தான் நீதிமன்றம் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக். 18

''அஜ்மல் கசாப்பிடம் விசாரணை நடத்தாமல், மும்பைத் தாக்குதல் வழக்கில் தொடர்புடையவர்கள் மீதான வழக்கு விசாரணையை தொடர்ந்து நடத்த முடியாது'' என பாகிஸ்தான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மும்பையில் 2008 நவம்பர் 26ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த வழக்குத் தொடர்பாக இந்தியா கொடுத்த ஆதாரங்கள் அடிப்படையில், லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஜாகிர் ரகுமான் லக்வி உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராகப் பாகிஸ்தான் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு ராவல்பிண்டியிலுள்ள பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. வழக்கு விசாரணை சனிக்கிழமை நடந்தபோது, நீதிபதி மாலிக் முகமது அக்ரம் குறிப்பிடுகையில், ''மும்பைத் தாக்குதல் வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் அஜ்மல் கசாபுக்கு இந்திய நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளித்துள்ளது.

அஜ்மல் கசாப், தற்போது மும்பை சிறையில் உள்ளார். கசாப்பை கைது செய்வதற்கு இந்த நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது. கசாப்பிடம் விசாரிக்க பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு இந்திய அரசு அனுமதி அளிக்கவில்லை. இதனால், கசாப்பிடம் விசாரணை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மும்பைத் தாக்குதல் வழக்கில் தொடர்புடைய மற்றொரு குற்றவாளி பாகிம் அன்சாரியிடமும் விசாரணை நடத்த முடியவில்லை. இவர்கள் இருவரிடமும் விசாரணை நடத்தாமல், மும்பைத் தாக்குதல் வழக்கில் தொடர்புடையதாகக் கருதப்படும் ஜாகிர் ரகுமான் லக்வி உள்ளிட்ட ஆறு பேர் மீதான வழக்குகளைத் தொடர்ந்து விசாரிக்க முடியாது -இவ்வாறு நீதிபதி தெரிவித்துள்ளார்.






# வீடு வாங்குவதற்கு சீன அரசு அதிரடி நடவடிக்கை

ஷாங்காய், ஒக். 18

வீடு உள்ளிட்ட அசையா சொத்துகளின் விலை ரொக்கெட் வேகத்தில் அதிகரித்து வருவதை தடுக்க சீன அரசு அதிரடியான உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதுதான் அந்தத் திட்டம். ஷாங்காய் நகரில் இனி, 'குடும்பத்துக்கு ஒரு வீடு' என்ற நடைமுறை பின்பற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவிலுள்ள மிகப் பெரிய நகரங்களில் ஷாங்காயும் ஒன்று. வர்த்தக நகரமான ஷாங்காயில் நாளுக்கு நாள் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. இதனாலேயே சீனா இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளது. அனைத்து நகரங்களிலும் இத்திட்டம் படிப்படியாக அமுல்படுத்தப்படவுள்ளது.

# இன்னொரு பூமி வேண்டும்; விஞ்ஞானிகள் தெரிவிப்பு

உலக மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இன்னொரு பூமி தேவைப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இத்தகைய சூழ்நிலை இன்னும் 20 ஆண்டுகளுக்குள் ஏற்படும். பூமியிலுள்ள வளங்களை மிகவும் அதிகளவில் மனிதர்கள் பயன்படுத்துகின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் இயற்கை வளங்களின் நுகர்வு இரு மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் பூமியின் வளம் குன்றிவிட்டது.

தற்போதைய நிலை தொடருமானால் 2030 ஆம் ஆண்டிற்குள் மேலும் ஒரு பூமி மனிதனுக்குத் தேவைப்படும். வெப்பமண்டல நாடுகளில் வன விலங்குகளின் வாழ்க்கைச் சூழல் கேள்விக்குறியாகியுள்ளது. இவற்றின் எண்ணிக்கை கடந்த 30 ஆண்டுகளில் 60 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

## உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 571
திகதி 2010/10/16

சுப்பர் இலக்கம்: 14
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 33 40 46 50

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| [illegible] பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 32,038,217.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 306 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 598 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 15,330 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 8,789 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 220,345 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 35,252 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.9,906,500.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். [illegible]

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 32,446,956.00

தேசிய லொத்தர் சபை
இணையதளம்: www.nlb.lk

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரத்தினம் இராஜேஸ்வரி



யாழ்ப்பாணம், இணுவில் தெற்கு பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராஜேஸ்வரி 15.10.2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற திரு. திருமதி நாகமுத்து - பொன்னு தம்பதியரின் அன்பு மருமகளும் லோட்டஸ் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் சற்குணலிங்கம், ஜெயபாலசிங்கம், யோகேஸ்வரி (பொன்னான்), சிவபாலசிங்கம் (புலி), சிவகலாதேவி, மகராஜசிங்கம் (மகான்), செகராஜசிங்கம் (ஜெகான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், குணரத்தினம், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நவரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் றஞ்சனேஸ்வரி (சுவிஸ்), ரமணி (சுவிஸ்), ரதினி (கனடா), ரஜிதரன் (யாழ்ப்பாணம்), துளசிதாஸ் (யாழ்ப்பாணம்), ரவிதரன் (பிரித்தானியா), ரமேஜினி (கனடா), ரஜிந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (கனடா), நிருஷா (கனடா), ஜெனித்தா (யாழ்ப்பாணம்), லக்சிக்கா (பிரித்தானியா), குகராஜன் (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ரதீனா, ரதீபன், நவர்ணா, நதீர்ணா, நதீர்ணன், விதுனா, விபூசன், திஷாந், வேணன், தீரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை, இணுவில் தெற்கு.

தகவல் : கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(104803)

## சுப்பிரமணியம் கந்தசாமி

கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வளாக வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தசாமி நேற்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சண்முகவடிவேல் மற்றும் கோபாலகிருஷ்ணன், ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, நாகேஸ்வரி, சிந்தாமணி ஆகியோரின் மைத்துனரும் தவசீலன், மதியழகன், சத்தியசீலன், இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவரஜனி, மேரி அனுலா, வசந்தமலர், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கனா, பிறேமலக்ஷன், யதுர்ஷனா, கிருஷிகன், சிந்து, கலைநிலா, நிலாவினி, கானநிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/16, வளாக வீதி, திருநெல்வேலி.

(சி/572015)

தகவல் : மனைவி, பிள்ளைகள்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## புதி நிலைநாடி உழைப்போமா?

★இரத்தம் தோய்ந்த கரங்களுடனேயே உங்களை வரவேற்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. இங்குள்ள ஒவ்வொருவரது மனதிலும் காயங்கள் இருக்கின்றன.

★சமயங்கள் அனைத்தும் அன்பையே போதிக்கின்றன. இந்த அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டிருந்தால் எமது நாட்டில் யுத்தம் தோன்றியிருக்க முடியாது.

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் யாழ்ப்பாணக் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் பி.நேசகுமார் அடிகளார் இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்.

மனிதன் பிறக்கும்போது மனிதனாகவே - எதுவும் அறியாத, புரியாத சிசுவாகவே - பிறக்கின்றான். அப்போது தெய்வமாக அவதரிப்பவன் மெல்ல மெல்ல மனிதனாக அன்றி, பகுத்தறியும் தனது இயல்பை இழந்து, ஐந்தறிவு கொண்ட மிருகங்களையும் விடக் கேவல நிலையை அடைந்துவிடுவது உலகளாவிய ரீதியில் ஒரு சாபக்கேடாகிவிட்டது.

இந்த மாற்றத்தின் பின்னணி அல்லது பின்புலம் அவன் வாழும் மண்ணிலேயே மனிதர்களாலேயே தோற்றுவிக்கப்படுகிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நிலை மனிதர்களாலேயே மாற்றப்படுகின்றது. மதங்கள் பலவாக இருப்பினும் அவற்றின் ஆன்மீக இலக்கும் போக்கும் ஓர் ஒத்த தன்மையை கொண்டனவாகவே உள்ளன. இருப்பினும், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்குப் பதிலாக, பலவகைகளிலும் வழிகளிலும், ஒற்றுமையும் சகோதரத்துவமும் சகிப்புத்தன்மையும் மேன்மைத்துவமும் அற்றுப்போக, மனிதத்தை அழிப்பதே இக்கால இயல்பாக, ஒவ்வாத நடைமுறையாகி வருகிறது.

நல்லவற்றை போதிப்பதற்கும், அறிவூட்டுவதற்கும் நேர் எதிராக மதங்கள் செயற்படும் தன்மை மலினமுற்று வருகிறது. அதனால் மனித வாழ்க்கை பலப்பல அற்ப ஆசைகள், ஆதிக்கவெறிகளால் சீர்கெட்டு அதன் மகத்துவத்தை இழந்து பகைமை வெறியும் மற்றவர்களை அடக்கி ஒடுக்கவேண்டும் என்ற வேகமும் உன்மத்தமும் உலகில் மலிந்துவிடுகின்றன.

வெவ்வேறு மதங்கள் தமக்குள் முரண்பட்டும், வேற்றுமையை வளர்த்தும் மக்களை பிரித்து வைக்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை காணும் நல்வழி அடைக்கப்பட்டு, மக்கள் தவறான வழியில் இட்டுச் செல்லப்படுகிறார்கள். இவையே இன்றைய வாழ்வியல், அரசியல் பேதங்களுக்கு பிரதான ஊற்றுக்கண்களாக விளங்குகின்றன.

இவற்றின் விளைவுகளே, உலகளாவிய மட்டத்திலும் தேச மட்டத்திலும் எழுந்துள்ள வேற்றுமைகள் அரசியல் போட்டிகள், ஏகாதிபத்தியங்கள், அடக்குமுறைகள், போர்க் கொடுமைகள் போன்ற மனித வாழ்வை சீரழிக்கும் செயற்பாடுகளுக்குக் காரணங்களாகின்றன. தனித்தனி நாடுகளிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானம் கேள்விக்குறியாகி கோணிக் குறுகி நிற்பதற்கு காரணமாகின்றன.

இவற்றை ஏற்றுக்கொள்வது போன்று, ஆதரிப்பது போன்று கருத்துத் தெரிவித்திருக்கிறார், இதே நிகழ்வில் பங்குபற்றிய சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் தலைவர் வண. பென்வில்ல விமலரத்தின தேரர்.

கடந்த காலங்களில் சமயங்களுக்கிடையில் பிரச்சினைகள் நிலவியது உண்மைதான். சமயங்கள் ஒன்றுசேர்ந்து எவ்வாறு செயற்படலாம் என்று இப்போது புத்திஜீவிகள் சிந்திக்கிறார்கள். மக்களிடையே ஒற்றுமையை, சகோதரத்துவத்தை ஏற்படுத்தவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இந்த அமைப்பு உலகளாவிய ரீதியிலும் செயற்படுகிறது. என்றும் வண. தேரர் தெரிவித்திருக்கிறார்.

சமயத் தலைவர்கள் தத்தமது மதங்கள் போதிக்கும் வாழ்வியலின் அத்தியாவசியத் தேவையான சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, சமாதான வாழ்வு என்ற மனிதப்பிறப்பின் மாண்புமிக்க கோட்பாடுகளை, தத்தம் மதங்களைச் சார்ந்து ஊன்றிவிதைத்திருந்தால் - குருமுதல்வர் பி.நேசகுமார் கூறியதுபோன்று, இரத்தம் தோய்ந்த கரங்களுடன் வரவேற்கும் துர்ப்பாக்கிய சந்தர்ப்பம் இருக்கமாட்டாது.

இலங்கையைப் பொறுத்த வரையில், சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்தில், இங்கு வாழும் மூன்று இனங்களிடையேயும் பிளவுகளையும் வேற்றுமைகளையும் வளர்ப்பதில் வணக்கத்திற்குரிய பௌத்த குருமாருக்கு பெரும் பங்குண்டு என்பது வரலாற்றுப் பதிவுகள். இந்த நிலையை மாற்றுறவதற்கு, மேற்குறிப்பிட்ட இலங்கைப் பேரவை, இதயசுத்தியுடன் செயற்பட்டால், எமது நாட்டில் ஆக்கபூர்வமான மாற்றங்களை உருவாக்கி புதியநிலைநாடி மறுமலர்ச்சியை உண்டாக்க வழி பிறக்கும். அதனை நல்மனதுடன் எல்லோரும் எதிர்பார்ப்போமாக, அதனை நாடி உழைப்போமாக.

# ஜனாதிபதியின் இரண்டாம் தவணை பதவியேற்பை நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு

*நேற்று 17.10.2010 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இங்கே.*

வரும் நவம்பர் 19 ஆம் திகதி ஒரு சுப முகூர்த்த வேளையில் பேர்சி மஹிந்த ராஜபக்ஷ கோட்டையிலுள்ள பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன் னால் உள்ள புல்வெளியில் இலங்கையின் ஜனாதிபதியாக இரண் டாவது முறையாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளத்திட்ட மிடப்பட்டுள்ளது.

இந்த இடம் பல காரணங்களால் முக்கியம் பெறுகின்றது. ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் காலனித் துவச் சின்னமாக விளங்கியது. பின்னர் சட்டசபையின் கட்டடமாகவும், முதலாவது நாடாளுமன்றமாகவும் விளங்கியது. 1977 ஆம் ஆண்டு நாடாளு மன்றம் சிறிஜயவர்த்தனபுரவுக்கு நகர்த்தப்பட்டதன் பின்னர் இக் கட்டடம் ஜனாதிபதியின் செயலகமாக மாற்றப்பட்டது.

ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் செய்வதற்கு இவ்விடயம் தெரிவு செய்யப்பட்டமைக்கு அதன் முக்கியத் துவம் அல்ல காரணம். இந்த வைபவத்தை தேசிய ரீதியில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ய உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் குழு மீது இராணுவத்தின் செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டிருப்பதே காரணம் என்று கூறப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டு முதல் தடவையாக அவர் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டபோது இராணுவத்தினால் அவருக்கு மரியாதை ஏதும் செலுத்த முடியாமல் போய்விட்டது..எனவே புலிகளைத் தோற்கடித் தமைக்காக ராணுவம் தனது தலைவருக்கு இந்தமுறை தனது முறையான கௌரவத்தைச் செலுத்த விரும்புகின்றது.

நாடுதழுவிய கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்யும் அமைச் சரவைக் குழுவானது முன்னாள் பிரதம மந்திரி ரத்னசிறி விக்கிரமநாயக தலைமையில் செயல்படுகின்றது. அதில் மைத்திரிபால சிறிசேனா, சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச மற்றும் டல்லஸ் அழகபெரும ஆகியவர்கள் இடம்பெற்றுள்ளார்கள். நாடு முழுவதுமான கொண்டாட்டங்கள் நவம்பர் 15 ஆம் திகதி தொடங்கி 21 ஆம் திகதி முடிவடையும்.

இந்த நிகழ்ச்சிகளில் முக்கியமான ஒன்று என்னவென்றால் ஒரு கப்ப லில் மகாசங்கத்தினர் அமர்ந்து பிரித் ஓதுவார்கள்.(பாதுகாப்புக்கான பௌத்த சுலோகங்கள்) இக் கப்பல் நாட்டை சுற்றிவலம் வரும். வடக்கில் பாக்குநீரிணையில் இருந்து ஆரம் பித்து இந்தக் கப்பல் நாட்டைச் சுற்றி வலம் வரும் என்று தெரிகின்றது.

தனியார் துறையின் ஆதரவில் ஜனாதிபதியின் அரசியல் வாழ்வை சித்திரிக்கும் கண்காட்சிகள் இடம் பெறும். அவரதும் அவரது அரசினதும் சாதனைகளும் கண்காட்சியில் இடம் பெறும்.

பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ளும் வகையில் களியாட்ட நிகழ்வுகளும் இடம் பெறும். நாடு முழுவதும் மரம் நடும் வைபவங்களும் நடத்தப்படவிருக்கின்றன.

### புதிய பட்ஜெட்டை சமர்ப்பிப்பார்

புதிதாக பதவியேற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி நவம்பர் 22 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அரசு துறையினருக்கு சம்பள உயர்வு ஒன்று அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்தும்படியாகத் தனியார் துறையினரும் கேட்டுக்கொள்ளப்படுவர் என்று தெரிகின்றது.

ராஜபக்ஷ நாட்டின் அரசமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து உறுதி எடுத்துக் கொள்ளும் அதே சமயத்தில் முதலாவது கப்பல் ஹம்பாந்தோட்டை (மகாம்புர) துறைமுகத்துக்குள் நுழையும் என்று எதிர்ப்பார்க் கப்படுகின்றது.

இந்தப் புதிய தென்துறைமுகமானது சர்வதேச விமான நிலையம், சர்வதேச மகாநாட்டு மண்டபம் சர்வ தேச விளையாட்டு அரங்கம் மற்றும் புதிய உள்கட்டமைப்புகளுடன் கூடிய நகரமாக வளரப்போகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக இது அமையும் என்று கூறலாம்.

நவம்பர் 19 ஆம் திகதி ஜனாதிபதி இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாணம் செய்து கொள்வதையடுத்து அரசமைப்பின் பிர

## உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை உத்தேசித்து ராஜபக்ஷ வியூகம்

காரம் சகல அமைச்சர்களும் அவர்களின் செயலாளர்களும் பதவி இழந்துவிடுவார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் நியமிக்கப்படுவார்கள். ஆனால் சில ஆச்சரியங்கள் வெளிப்படலாம் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு சிலர் கைவிடப் படலாம் புதியவர்கள் நியமனம் பெறலாம் என்கிறார்கள் அவர்கள்.

சகல மாவட்டங்களிலும் ஜனாதிபதியின் பதவி ஏற்பு தொடர்பான கொண்டாட்டங்களை ஒருவாரம் முழுவதும் கொண்டாடப்படவிருப்பதற்கான வேறு ஒரு காரணமும் இருக்கின்றது. அதுதான் மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு வரப்போகின்ற தேர்தலாகும். இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடைசியாக 2006 ஆம் ஆண்டில் தேர்தல்கள் இடம் பெற்றன. அடுத்து 2010 ஆம் ஆண்டில் நடை பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவைகளுக்கு ஓர் ஆண்டு நீடிப்பு வழங்கப்பட்டது. இத்தவணை அடுத்த வருடம் பெப்ரவரியில் முடிவடையும். அடுத்த வருடம் மார்ச்சில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்து வதற்கு அரசு திட்டமிட்டு வருகின்றது.

ஜனாதிபதியின் இன்னொரு முக்கிய செயற்பாடு என்னவென்றால் மாவட்டங்கள் அனைத்துக்கும்அங்குள்ள அபிவிருத்திக் குழுக்களின் கூட்டங்களுக்கும் விஜயம் செய்ய அவர் திட்டமிட்டிருக்கிறார். அவர் ஏற்கனவே இரத்தினபுரி, கிளிநொச்சி, பொலனறுவ, அனுராதபுரம், திருகோண மலை மற்றும் களுத்துறை ஆகியவற்றுக்கு அவ்வாறு விஜயம் செய்துள்ளார்.

இந்தப் பயணங்களின் போது அந்தந்த பகுதிகளின் வளர்ச்சி, முன் னேற்றம் போன்றவை தொடர்பாக எம்.பிக்கள் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளோடும் விவாதங்கள் நடத்தியுள்ளார். சமூகப் பிரச்சினைகள் பற்றியும் அவர்களுடன் விவாதங்கள் நடத்தி தீர்வுகள் பற்றியும் ஆலோசனைகள் நடத்தியுள்ளார். இந்த வகையில் உள்ளூராட்சி தேர்தலுக்கான பிரசாரத்தை அவர் முன் கூட்டியே சரியாக ஆரம்பித்து விட்டார் என்று கூற வேண்டும்.

### உள்ளூராட்சி தொடர்பான இரண்டு மசோதாக்கள்

இதுதொடர்பான முக்கிய அம்சம் என்னவென்றால் உள்ளூராட்சி சபை கள் தொடர்பாக அரசு இரண்டு புதிய மசோதாக்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவிருக்கின்றது.

இவைகளில் ஒன்று மாநகர சபை கள் சட்டம், நகரசபைகள் சட்டம், பிரதேச சபைகள் சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கான உள்ளூராட்சி அதி காரசபைகள்(விசேட விதிகள்) சட்ட மாகும். மற்றது உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான மசோதாவாகும்.

இந்த மசோதாக்கள் ஏற்கனவே மாகாண சபைகளுக்கு அனுப்பப் பட் டுள்ளன. இந்த மசோதாக்களை ஆராய்ந்து தமது முடிவுகளை அரசுக்கு அறிவிக்கும்படியாக ஒரு மாத கால அவகாசம் அவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் ஐ.தே.கவும் இவைகள் தொடர்பாக விரிவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. இருந்தாலும் இன்னும் சில விடயங்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் மசோதா (சிறப்பு விதிகள்) மசோதாவானது மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அமைப்பு முறையில் விரிவான மாற்றங்களைக் கொண்டுவர விழைகின்றது. தற்போதைய நடை முறையின்படி அத்துறைக்கு பொறுப்பான அமைச்சரானவர் குறித்த சபைகளுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பார். புதிய மசோதாவின்படி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 30வீதத்துக்கு அதிகமாக இருக்காத நிலையில் மற்ற உறுப்பினர்களை அமைச்சர் தீர்மானிப்பார். சபையில் தங்கள் சார்பில் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய முடியாது போன வாக்காளர்களுக்கு நியாயம் செய்வதற்காக இந்த ஏற்பாடு. இந்த இரு சபைகளிலும் பெண்களுக்கு அதிக இடம் கிடைக்க உறுதி செய்வதாகும் இந்த ஏற்பாடு.

இந்த விடயத்தில் அரசும் ஐ.தே.கவும் முரண்பட்டு நிற்கின்றன. அரசு இந்த பொறுப்பினை அமைச்சரிடம் விட்டுவிட யோசிக்கிறது. ஆனால் ஐ.தே.கட்சி இந்த விடயம் உத்தேச எல்லை நிர்ணய குழுவின் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்று கருது கின்றது.

இந்த சபைகளின் மேயர்கள் அல்லது தலைவர்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்கள் இரண்டு வாரங்களுக்குள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படாவிட் டால் அவர்கள் பதவிகளை இழந்தவர் களாவார்கள் என்ற அம்சம் புதிய சட்ட வரைவில் இடம்பெறுவதாயிருக்கும்.

**தமிழில்: கோகுலன்**

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 02 | | 19.10.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | துவாதசி பி.இ 02.38 வரை |
| நட்சத்திரம் | : | சதயம் பி.இ. 02.40 வரை |
| சுபநேரம் | : | 10.32-12.02 வரை |
| ராகுகாலம் | : | 03.02-04.32 வரை |

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.18

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆட்டங்களில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 3 ஆம் இடத்திற்கான ஆட்டமும் இறுதியாட்டமும் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டிகளில் மோத வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

13 வயதுப் பிரிவு

மூன்றாம் இடத்துக்கான போட் டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன்பாடசாலை அணி மோதும். இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மோதும்.

16 வயதுப் பிரிவு

3 ஆம் இடத்துக்கான போட்டி யில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மோதும்.

இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி மோதும்.

18 வயதுப் பிரிவு

3 ஆம் இடத்துக்கான போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை எதிர்த்து வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி மோதும்.

இறுதிப் போட்டியில் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி மோதும். (த-86)

* * *

வலி. வடக்கு, ஒக்,18

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் இன்று திங்கட்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

16 வயதுப் பிரிவு

* மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம் எதிர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி.

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

18 வயதுப் பிரிவு

* வயாவிளான் மத்திய மகா வித்தியாலம் எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. (த-86)


## யாழ். ரெஸ்ட் இன்

எமது ஹோட்டலுக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

1. சமையலாளர் (சகல உணவு வகைகளும்)
2. Room boy

நேர்முகத் தெரிவு 19.10.2010 முற்பகல் 10.30 மணிக்கு கீழ்வரும் முகவரியில் இடம் பெறும். தகுதியானவர்கள் சமுகமளிக்கவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**யாழ்.ரெஸ்ட் இன்,**
337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
தொ.பே. 021 222 1011



## வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்
## மேசன், தச்சு பயிற்சி நெறிக்கான பயிற்றுவிப்பாளர் தேவை

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 4 மாதகால மேசன், தச்சு பயிற்சி நெறியை பயிற்றுவிப்பதற்குப் பயிற்றுவிப்பாளர் தேவை. இதற்குத் தேவையான தகைமைகள்...

*1.அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது3 மாதம் மேசன் அல்லது தச்சு பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

*2.குறைந்தது 3 வருடம் மேசன் அல்லது தச்சு வேலையில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.*

மேற்குறிப்பிட்ட தகைமையுடையவர்கள் கீழ்குறிப்பிட்ட விலாசத்துக்கு 7 நாள்களுக்குள் உங்கள் சுயவிவரத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து விண்ணப்பிக்கவும்.

**திட்டப்பணிப்பாளர்,**
**வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்,**
**68/4 A, மக்கேசியர் அடைவீதி,**
**உவர்மலை,**
C/572006 **திருகோணமலை.**


## திருத்தம்

*கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை உதயன் பத்திரிகையின் 3 ஆம் பக்கத்தில் வெளியான, இந்தியத் தூதுவர் அசோக் காந்த் பாடசாலை களுக்கு பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு தொடர்பான ஒளிப்படத்தின் விளக்கத் தில் தவறு நேர்ந்துள்ளது. தூதுவரின் அருகில் நிற்பவர் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆவார்.*

*எனினும் பட விளக்கத்தில் பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சித்ரூபானந்தா என்று தவறுதலாகப் பிரசுரமாகி உள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம்.*

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 18

கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தின் பெருந் திருவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட சைவசமயப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மணி மண்டபத்தில் ப.சதீஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் கலந்து கொள்வார். நிகழ்வில் எஸ்.சத்தியதாசனின் வில்லிசைக் கச்சேரியும் இடம் பெறும். (ஒ-14)


## நினைவிலகலாத 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### முத்துச்சாமி சிவகணேசன்
(முரளி, ஆதவன்)

தோற்றம்: 12.03.1975 மறைவு: 18.10.2000

காங்கேசன்துறை, காட்டடைப்பு ஆலய வீதியை சேர்ந்த முத்துச்சாமி - செல்வபாக்கியம் தம்பதியரின் செல்வப் புதல்வனின்

10ஆம் ஆண்டு நினைவுதினமான இன்று (18.10.2010) திங்கட்கிழமை பருத்தித்துறைச் சிவன்கோயிலில் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மோட்ச அர்ச்சனையும் நடத்த உள்ளோம். இந் நிகழ்வில் உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்மா இறையடி சேரப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவகாமி நிலையம்,
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்,
பிள்ளைகள்.



## O/L மாதிரி வினாத்தாள்

*20.10.2010 முதல் கண்டி வலம்*

தேசிய ரீதியில் புகழ்பெற்ற உதயன் கல்விச்சுடர் வளவாளர்களின் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!

*20.10.2010 முதல் வெளிவரவுள்ள கண்டி மாவட்ட வலத்தில் இடம்பெறுபவை:*

| | |
|---|---|
| தமிழ்மொழி | திருமதி குணசீலன் அனுஷா |
| க/தெல்/மகாபெரியதென்ன த.ம.வித்தியாலயம். கண்டி வெளிவரும் திகதி: 20.10.2010 | |
| வரலாறு | யூ.எல்.எம்.பஷீர் |
| ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், வத்தேகம வலயம். வெளிவரும் திகதி: 21.10.2010 | |
| விஞ்ஞானம் | திரு.எம்.சுதர்ஷன் |
| E.T.I கல்வி நிலையம். வெளிவரும் திகதி: 22.10.2010 | |
| கணிதம் | திரு.எம்.சீ.பிரகாஷ் |
| E.T.I கல்வி நிலையம். வெளிவரும் திகதி: 23.10.2010 | |
| ஆங்கிலம் | திரு.ஜே.சீ.டீ.சுந்தர்சிங் |
| க/பாரதி தமிழ் மகா வித்தியாலயம். கண்டி. வெளிவரும் திகதி: 25.10.2010 | |



## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் க.மதியழகன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்,
உடுவில்.

C/572007



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### செபமாலை ஜேசுதாஸ்

*மலர்வு: 20.10.1949*

*உதிர்வு:18.10.2007*

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
அப்பா நீங்கள் விண்ணுலகம் அடைந்து
பெற்றெடுத்த பிள்ளைகளோ
ஏழுதானப்பா
உன்னைச் சுற்றி உள்ள
பிள்ளைகளோஅதிகம் தானப்பா
அத்தனை உள்ளங்களும் வாடித் துடித்திடவே
விண்ணுலகம் தான் சென்றாயப்பா
அன்பான மனைவியை விட்டு

பண்பான சகோதரங்களை விட்டு
பாசத்தின் குழந்தைகளை விட்டு
இரு பேரன்பு பேரபிள்ளைகளை
உடன் கொண்டு
ஏன் இந்தப் பிரிவைத் தந்தீரப்பா?
எங்கள் வழி காட்டும் ஒளியாய் எம்
விழியாய் இருந்தவர் நீரே!
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
உன் நினைவுகள் என்றும் சுமந்தபடி...

இல.03, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். (104794)

**மனைவி, பிள்ளைகள்,**
**உறவுகள், நண்பர்கள்.**



## மரண அறிவித்தல்

### பரமசாமி ஜெயேந்திரன்



நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி ஜெயேந்திரன் நேற்று முன்தினம் (16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி மற்றும் தவமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தனலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் நளாயினியின் அன்பு கணவரும் சிந்துஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மாணவன்), காஞ்சனா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தநாயகி (நுணாவில் G.T.M.S - அதிபர்), செல்வமணி (சுவிஸ்), தர்மேந்திரன் (பரமராஜா ரான்ஸ்போட் சேர்விஸ், உரிமையாளர்), காலஞ்சென்ற அருள்மணி மற்றும் கிரிஜா (கனடா), சிவனேந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலேஸ்வரன், தர்மேந்திரன் (சுவிஸ்), நற்குணராஜா (கனடா), சச்சிதானந்தன், ஜசிந்தா (நோர்வே), ஆகியோரின் மைத்துனரும் பரம்சோதிநாதனின் (கனடா) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நுணாவில் மேற்கு காராளம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**190 ஆம் கட்டை,**
**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.** (சி/572008)

**தகவல்:**
குடும்பத்தினர்.
தொ.பே:0776621740,
0778987910

# இலங்கைக் கடற்பிரதேசத்தில் இந்திய இழுவைப் படகுகள் அனுமதிக்கப்பட்டால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுவர்

## இலங்கை- இந்திய எல்லையில் அவர்கள் தொழில் செய்வதே சிறந்தது

குருநகர்,ஒக்.18

பாலைதீவு, இரணைதீவு, மன்னார் ஆகிய கடற்பிரதேசத்தில் மன்னார், வலைப்பாடு, பள்ளிக்குடா, குருநகர், மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் செய்து வருகிறார்கள். எனவே மேற்குறிப்பிட்ட இலங்கையின் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் கொண்டு மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டால் எமது பிரதேச மீனவர்கள் முழுமையாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்திய இழுவைப்படகுகள் இலங்கை - இந்திய கடல் எல்லைப் பகுதியில் நின்று தொழில் செய்வதே விரும்பத்தக்கது எனக் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்திற்கு அனுப்பி வைத்துள்ள முன்மொழிவுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மீன்வளத்துறை சார்ந்த பிரதிநிதிகள் இந்திய மீன்வளத்துறை சார்ந்த பிரதிநிதிகளை இந்தியாவில் கடந்த ஒகஸ்ட் 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இதன் பின்னர் இலங்கைக் குழு பரிசீலித்து சமர்ப்பித்த அறிக்கையில் வெளியிடப்பட்ட முன்மொழிவுகளை குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் பரிசீலனை செய்தனர். இதன் போது தெரிவிக்கப்பட்ட முன்மொழிவுகளை அவர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ஜே.சகாயராஜா தெரிவித்தார்.

இம்முன்மொழிவுகளில் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் பின்வருமாறு:-

✱ 1990 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் இந்திய இழுவைப்படகுகள் இலங்கைக் கடல் எல்லைப் பகுதிக்கப்பால் நின்றே இழுவைப் படகுத் தொழிலில் ஈடுபட்டிருந்தன.

✱ இந்திய மீனவர்கள் எமது கடற்பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு வாய்ப்பளித்துள்ள தங்கள் முன்மொழிவுகளில் எமது மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைகளில் எதுவரை சென்று தொழில் செய்யலாம் என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

✱ தாங்கள் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகள் ஒரு தலைப் பட்சமானதாகவும், இந்திய நலன்களைப் பேணுவதாகவும், எமது கடல் வளங்களை இந்திய மீனவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதாகவுமே அமைந்துள்ளன.

✱ இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நமது நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்தியப் படகுகள் பெறுமதிமிக்க எமது கடல் வளங்களை அபகரித்துச் சென்றுள்ளன. அது இன்றுவரை தொடர்வது மிகவும் வருந்தத்தக்கது.

✱ கரையோரப் பிரதேசம் பாதுகாக்கப்பட்டால் மாத்திரம் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே தங்கள் முன்மொழிவுகள் அமைந்துள்ளனவே தவிர எமது அடிப்படைப் பிரச்சினைகள் உள்வாங்கப்படவில்லை என்பது கண்கூடு.

✱ கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக இழுவைப் படகுகள், தங்கூசி வலைத் தொழில் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படும் போது எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் எழுபது நாள்கள் தொழில் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட வேண்டும்.

✱ தற்போது 1500 க்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் எமது கடற்பிரதேசத்தில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு 70 நாள்கள் தொழில் செய்ய அனுமதி வழங்கப்படுமானால் அவர்களின் பெருந்தொகையான இழுவைப் படகுகளால் இலங்கைக் கரையோரப் பிரதேசத்திலுள்ள கடல் வளங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டுவிடும் சாத்தியம் உண்டு என்பதனையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

✱ எமது கடற்பிரதேசத்திற்குள் இந்தியப் படகுகள் தொழில் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டு அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல்படுத்தப்படும் போது நாம் எமது இழுவைப் படகுத் தொழிலினை முற்றாக நிறுத்துவதற்கு உடன்படுவோம் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

✱ இலங்கை - இந்திய மீன்வளத்துறை சார்ந்த பிரதிநிதிகள் அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது இழுவைப் படகுத் தொழிலிலீடுபட்டுள்ள யாழ். பிரதேச பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்வதன்மூலம் அர்த்தமுள்ள முடிவுகளை எடுக்க முடியும் என நம்புகிறோம்.

மேற்படி முன்மொழிவுகள் தொடர்பாக கடற்றொழில் திணைக்களம், நீரியல் வளத்துறை அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளையும் ஒன்றுகூட்டி முன்மொழிவுகளை மீள்பரிசீலனை செய்து முடிவுகளை மேற்கொள்வதே மேலானது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-51)



உலக கை கழுவுதல் தினத்தையொட்டி பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவர்கள் பருத்தித்துறை நகரில் நடத்திய விழிப்புணர்வுப் பேரணியைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

# மரநடுகைத் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் 1,925 பயனாளிகளுக்கு பழமரங்கள்

வலி.வடக்கு.ஒக்.18

யாழ்.மாவட்டத்தில் மர நடுகைத் திட்டத்தின் கீழ் 1,925 பயனாளிகளுக்கு பயன்தரு பழ மரங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன. பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் இதனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராம அலுவலர்கள் விவசாயக் குழுக்களின் சிபார்சுகளுடன் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பயனுள்ள பழ மரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

சங்கானை, காரைநகர், தென்மராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், நல்லூர் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தலா 100 குடும்பங்களுக்கும் -

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 125 குடும்பங்களுக்கும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 350 குடும்பங்களுக்கும்-

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முறையே 250, 200 பயனாளிகளுக்கும் பயனுள்ள மரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (6-86)

## பிரயாணக் கொடுப்பனவு

நாவற்குழி,ஒக்.18

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் இடாப்புக்களை மீளாய்வு செய்யும் பணியை மேற்கொண்ட கிராம அலுவலர்களுக்குபிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தேர்தல் திணைக்களம் இது தொடர்பான சுற்று நிருபத்தையும், உரிய படிவங்களையும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பியுள்ளது.

பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்களிடம் பிரயாணக் கொடுப்பனவுக் கோரிக்கைகளைப் பெற்று அனுப்பும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த-121)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஆயுள் வேத நடமாடும் மருத்துவ முகாம் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.18

வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையால் ஆயுள்வேத நடமாடும் மருத்துவ முகாம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

மேற்படி நடமாடும் மருத்துவ முகாமில் சகல நோய்களுக்குமான மருத்துவப் பரிசோதனை இடம்பெற்று மருந்துகளும் வழங்கப்படவுள்ளன. எனவே புத்தூர் மேற்கு, வடக்கு, நவக்கிரி, சிறுப்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் மேற்படி மருத்துவ முகாமில் கலந்து பயன் பெறுமாறு புத்தூர் கலைமதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இந்த நடமாடும் மருத்துவ முகாமுக்கு வலி.கிழக்கு பிரதேச செயலகம் மேற்படி பிரதேச சபை, கலைமதி சனசமூக நிலையம் என்பன அனுசரணை வழங்குகின்றன. (201)

# யாழ்.மாணவர்கள் குறுகிய காலத்தில் விளையாட்டுத் துறையில் முன்னேற்றம்

## அது கல்வித் துறையிலும் வேண்டுமென்கிறார் அமைச்சின் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.மாவட்ட மாணவர்கள் விளையாட்டுத்துறையில் குறுகிய காலத்தில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளனர். அதே போன்று தேசிய மட்டத்தில் கல்வியில் பின்தங்கி நிற்கும் இவர்கள் விரைவில் முன்னுக்கு வரவேண்டும்- இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:

இன்று மாறிவரும் அபிவிருத்திக்கு ஏற்றவாறு எமது கல்விச் சூழல் இல்லை. இதனை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் உண்டு. நாம் வெற்றிபெற வேண்டுமானால் கல்வி வலையமைப்பை சகல மட்டங்களிலும் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்தப் பாடசாலையில் கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்க வேண்டும். இன்றைய (கடந்த வெள்ளிக்கிழமை) பத்திரிகை ஒன்றில் தற்போதைய அதிபரின் தங்கிய பிரதேச மாணவனுக்கு அனுமதி அளித்திருப்பதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மிகவும் பாராட்டத்தக்க விடயம். இந்துக் கல்லூரியில் அனைத்து மாணவர்களும் கற்று முன்னேற வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் வீ.கணேசராசா, வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் எமது பாடசாலையில் 3 மாடிக் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 9.5 மில்லியனில் முதலாவது மாடி கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய ஏனைய மாடிகளையும் கட்டுவதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்தார். (6-15)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்ததனால் ட்ராக்டர் உணவகத்துக்குள் புகுந்தது

## பணியாளர் காயமடைந்தார்

தென்மராட்சி,ஒக்.18

வேகக் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் உணவகத்தினுள் புகுந்தது. இதனால் கடை முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், கடை முன்னால் வைக்கப்பட்டிருந்த சோடாப் போத்தல்கள் ஆகியவை சேதமடைந்தன.

அந்தக் கடையில் கொத்து ரொட்டி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நபருக்கு முன்னால் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கண்ணாடி உடைந்து கையை வெட்டிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த உணவகத்தின் உரிமையாளர் மூர்ச்சையுற்றார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது.

கடை ஊழியரான சிமிரீயான் டானியல் (வயது 44) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (6-207)



அண்மையில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் திருநெல்வேலி லயன்ஸ் கழகமும் இணைந்து கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோரை அடையாளம் காணும் பொருட்டு அளவெட்டி அலுக்கை புனித செபஸ்தியான் தேவாலயத்தில் நடத்திய கண் பரிசோதனை முகாமில் எடுக்கப்பட்ட படம்.

கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் பயனாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும் மற்றும் இலங்கை மாவட்டம் 306பி1 உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா , பிராந்தியத் தலைவர் லயன் செபராசா மேற்படி கழகங்களின் தலைவர்களான லயன் இதயராஜா, லயன் ரமேஷ் மற்றும் கழக உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

## காணவில்லை

ஜேசி பசு பிறவுண் நிறம். கடந்த இரு வாரங்களாகக் காணவில்லை. இதனைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். க.ஙந்காந்தகுமார், 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. தொ.பே: 0774120656


## அக்குப்பஞ்சர் சிகிச்சை முகாம் நவாலியில்

நவாலி,ஒக்.18

டியான்சி நிறுவனத்தினரால் நவீன கருவிகளின் மூலம் நவாலி சென்.பீற்றேஸ் சனசமூக நிலையத்தில் இலவச அக்கு பஞ்சர் சிகிச்சை மருத்துவ முகாமொன்று கடந்தவாரம் நடத்தப் பட்டது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்கள் பங்கு பற்றிச் சிகிச்சை பெற்றுச் சென்றனர். (ற-100)

## புனர்வாழ்வு உதவியாளர் வடக்கில் நியமனம்

நாவற்குழி,ஒக்.18

சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு ஒவ்வொரு புனர் வாழ்வு உதவியாளர்களை நியமித்துள்ளது.

அவ்வாறு நியமனம் பெற்றோர் விபரம் வருமாறு யாழ்ப் பாணம் - கே.கோபிராஜ், கிளிநொச்சி - மு.கயோதரன், முல்லைத் தீவு - எஸ்.கணேஷ்.

இதே பதவிக்குச் சென்ற வருடம் வவு னியா மாவட்டத்திற்கு யுனைட், மன்னார் மாவட்டத்திற்கு சாஜகான் ஆகியோர் நிய மிக்கப்பட்டனர்.

பட்டதாரிகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத் தப்பட்டு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சின் பணிகளை முன்னெடுக்க ஒப்பந்த அடிப்படையில் இந் நியமனம் வழங்கப்பட்டதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-121)


## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவைச் சேர்ந்தவரும்
நெழுவினியானின் அடியவரும்
எனது அன்பரும் மைத்துனரும்
காணி அபிவிருத்தி
உத்தியோகத்தருமாகிய

இராமலிங்கம் கந்தையா

அவர்களின் மறைவையொட்டி
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல தில்லைக் கூத்தப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

65/6, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (104789)

வே.சுந்தரலிங்கம்J.P. குடும்பத்தினர்.



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 . 02 . 1999



உதிர்வு 10 . 10 . 2008

### செல்வி ரவிச்சந்திரன் வைதேகி

(4 ஆம் ஆண்டு மாணவி, கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி)

அன்பு வைதேகிக் குட்டியே
வேர்பரப்பி விழுது விட்டு விருட்சமாய்
எங்கள் கனவுகள் ஒரு
நொடிப் பொழுதில் உடைந்து போனது
எங்கள் பிரியமான வையாவே
உம் உருவமதை தொங்கும் படத்திலே
தினம் பார்த்து எம் கண்கள் எல்லாம்
கண்ணீரால் கரைகின்றனவே
எம் செல்வமே! எம்மை விட்டு ஏன் பிரிந்தாய்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம் வையா

இல. 185, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி (104788)

அப்பம்மா, அப்பா, அம்மா, தங்கை, தம்பி, அத்தை, மாமா, மச்சாள்மார், மச்சான்



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2165 திகதி 16 – 10 – 2010

ஆங்கில எழுத்திற்கும் U

வெற்றி எண்கள் 10 27 45 67

போனஸ் இல: 29

ஜக்பொட் பரிசு ரூ. 17,935,725/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 190190 | 20/- | 3,803,800/- |
| 2 இல | 13522 | 100/- | 1,352,200/- |
| 3 இல | 284 | 1,000/- | 284,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7496 | 40/- | 299,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 646 | 1,000/- | 646,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,935,725/- | - |
| 1 இல + போனஸ் இல | 9027 | 100/- | 902,700/- |
| 2 இல + போனஸ் இல | 429 | 500/- | 214,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 372 | 200/- | 74,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 27 | 1,500/- | 40,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,117,940/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 222018 | | 9,717,940/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 302430049-5-37 |
| புத்தளம் | 302426186-4-11 |
| கம்பஹா | 302429736-5-09 |
| மாத்தளை | 302427969-5-03 |
| காலி | 302432741-9-30 |
| அம்பாறை | 302431420-0-38 |
| பொலன்னறுவை | 302429854-9-39 |
| கொழும்பு | 302429979-7-39 |
| திருகோணமலை | 302428680-5-20 |
| மாத்தறை | 302426933-9-16 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 18,454,700/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## இராசபாதையில் திருடர் நடமாட்டம்

கோப்பாய்,ஒக்.18

கோப்பாய் இராசவீதிப் பகுதியில் இரவு வேளையில் திருடர் நடமாட்டம் அதி கரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வீதியில் பயணிப்போரிடம் வழிப்பறி யில் ஈடுபட பல சந்தர்ப்பங்களில் முயற்சி நடந்துள்ளதாகவும் எதுவும் கைகூடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் இரவு 8.30 மணியளவில் இவ்வீதியில், மோட்டார் சைக்கிளில் பய ணம் செய்த குடும்பத்தினர்களை கரந்தன் சந்திப் பகுதியில் நடுவீதியில் நின்று ஒரு வர் மறிக்க முற்பட்டபோது எதிரேவேறொரு வாகனம் வருவதை அவதானித்ததைத் தொடர்ந்து அவரின் முயற்சி கைகூடாது அகன்று விட்டார்.

இவ்வீதியில் போக்குவரத்துக்கள் அதி கரித்துள்ளதால் இவ்வாறான முயற்சிகள் கைகூடாத போதிலும் திருட்டு நோக்கத் தோடு பலர் நடமாடுவதாகப் பிரதேச மக் கள் தெரிவிக்கின்றனர். (ஜ-72)

## விளக்கம்

கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பத்திரிகையின் 5ஆம் பக்கத்தில் வெளி யான 'பருத்தித்துறை நவீன சந்தையில் பூர்த்தியடைந்த 33 கடைகள் வாட கைக்கு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பில் பருத்தித்துறை நகர சபை செயலாளர் விளக்கமளித்துள்ளார்.

''யுத்தத்தால் அழிவடைந்த நவீன சந்தைக்கடை கட்டடத்தின் கடைகளை வைத்திருந்தவர்களும் தற்போதுள்ள மரக்கறிச் சந்தையில் கடை வைத்திருப் பவரும் கடை தேவைப்படின் நாளை பிற் பகல் 3 மணிக்கு முன்னர் கேள்விப் படி வம் பெற்று விண்ணப்பித்தே கடைகளைப் பெற வேண்டும்'' - என செயலர் தெரிவித் துள்ளார். (உ)


# ஒரு நற்செய்தி

# ORAL AND DENTAL WING OF McLEOD HOSPITAL, INUVIL



## இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பகுதி

### (இணுவில் வைத்தியசாலை)

அமெரிக்க வைத்திய நிபுணர்களால் 1898ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த மிகவும் புகழ்பெற்ற இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பகுதி மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றது. அதி நவீன உபகரணங்கள், வசதிகள் கொண்ட இப் பகுதியில் எல்லாவிதமான சிகிச்சைகளும், ஆலோசனைகளும் தினந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றதென்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்வதோடு, தேவையானவர்கள் இச் சிகிச்சைப் பகுதிக்கு வருகை தந்து, நல்ல பலன் அடையலாம் என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன். கொழும்பிலிருந்து அதி உன்னத நிபுணத்துவம் வாய்ந்த வாய், பல் வைத்திய நிபுணர்களையும் இச்சிகிச்சைப் பகுதிக்கு வரவழைத்து அதி உன்னத தொழில் நுட்பம் வாய்ந்த சிகிச்சை அளிப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

சிகிச்சை அளிக்கும் நேரம்

1. திங்கள் தொடக்கம் - சனிவரை -பி.ப. 4 மணி - 7 மணி
2. ஞாயிறு - காலை 8 மணி - மதியம் 12 மணி (தேவையேற்படின் முழுநாள் சேவையாகவும் இருக்கலாம்)
3. ஏதாவது கிழமைநாள் அல்லது சனிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருக்கும் பட்சத்தில் - காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை தேவையேற்படின் முழுநாள் சேவையாகவும் இருக்கலாம்.

DR.R.விசாகரூபன், பல்வைத்திய நிபுணர் அவர்களால் தினந்தோறும் சிகிச்சை அளிக்கப்படும்.

ORAL HEALTH IS TOTAL HEALTH

வாய் ஆரோக்கியம் முழு உடல் ஆரோக்கியமே

நன்றி

Medical Superintendent

வைத்திய மேலதிகாரி.

தொ.பே.: 077 9080787, 021 2227669, 077 6171451






## காணி விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் நல்லூருக்கும் இடைப் பட்ட பலாலி வீதி ஆலடிச் சந்திக்கு அருகில் உடையார் லேனில் 2 வீடுகள் கட்ட க்கூடிய 2 ½ பரப்பு காணி விற் பனைக்கு உண்டு. அரைவாசி பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:-0774414238, 021-2223620

## தவறிவிட்டது

ஒரு கோர்வைத் திறப்பு, மக்கள் வங்கிப் புத் தகம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய ஒரு கறுப்புநிற பாக் 16.10.2010 இரவு சிவன் கோயி லடி அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆதித்தா பார்மஸி, கே.கே.எஸ்.வீதி என்னும் முகவரிக்கோ, 0771532446 என்ற தொ.பே.இலக் கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

## பானை விற்பனைக்கு

நாறல்பாக்கு, ஆசவம், அரிஷ்டம் போடக் கூடிய பானைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம், 29, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P:0773535516 (104790)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சு கள் 20.10.2010 விநியோகிக்கப்ப டும். பதிவுகளை முன் கூட்டியே மேற் கொள்ளவும்.

- ★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.
- ★ ஜென்சி பாம், முதலாம் கட்டை பருத்தித்துறை.
- ★ P.ரவி, சாவகச்சேரி.

தொ.பே.இல: 0212222867, 0776090926

# 'இளைஞர்க்கான நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான செயலமர்வுகள் கிளிநொச்சியில்

கிளிநொச்சி,ஒக்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த சாதாரணதர வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கான செயலமர்வுகள் கடந்த 14,ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெற்றுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான 'இளைஞர்க்கான நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் இந் தச் செயலமர்வுகள் நடைபெற்றன.

கல்விக்கான சமசந்தர்ப்பம் திட்டத்தின் கீழ் 'நாளை உலகை வெற்றி கொள்ள அறிவு ஞானத்தை வளர்ப்போம்' என்னும் தொனிப்பொருளின் கீழ் இந்தச் செயலமர்வுகள் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 828 மாணவர்களும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த 307 மாணவர்களும், முழங்காவில் மகாவித்தியாலயத்தில் 5 பாடசாலைகளைச் சேர்ந்த 281 மாணவர்களும், பூநகரி மகாவித்தியாலயத்தில் 4 பாடசாலைகளைச் சேர்ந்த 175 மாணவர்களும் என மொத்தமாக 2252 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் 14 ஆம் திகதி தமிழ், ஆங்கிலப் பாடங்களுக்கும், 15 ஆம் திகதி கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் செயலமர்வுகள் நடைபெற்றன. (க-405)

# தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மன்னாரில் கைப்பற்றப்பட்டுள்ளன

மன்னார்,ஒக்.18

மன்னாரில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை விற்பனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் சிலவகை மீன்பிடி வலைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறித் தடை செய்யப்பட்ட இந்த வலைகளை விற்பனை செய்தவர்கள் மீன்பிடிப் பரிசோதகர்களின் தேடுதல் வேட்டையின்போது அகப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை திடீர் தேடுதல்களை மேற்கொண்ட மீன்பிடிப் பரிசோதகர்கள் மன்னாரில் 3 கடைகளில் விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைக் கைப்பற்றியுள்ளார்கள். இது தொடர்பாக பொலிஸார் மூவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

இந்த வலைகள் 33 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தரம்-4 மாணவர்களுக்கான நிலையறி பரீட்சை

கிளிநொச்சி,ஒக்.18

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம் - 4 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான நிலையறி பரீட்சை இன்று குறித்த பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 2011 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைத் தயார்ப்படுத்தும் விதத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்கான மேற்பார்வையாளர்கள் அயற்பாடசாலைகளில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளதுடன் வினாத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகள் நாளை மறுதினம் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறும். அதில் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா அறிவித்துள்ளார். இது தொடர்பான கடிதங்கள் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-405)

# சமாதானப் பேரவையின் ஒருநாள் கருத்தரங்கு மன்னார் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில்

மன்னார்,ஒக்.18

'இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிப்பாட்டினூடாக மனித நேயத் தீர்வுகளைக் சாத்தியமாக்கல்' என்னும் தொனிப்பொருளில் கருத்தரங்கொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை மன்னார் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கை இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஒழுங்கு செய்திருந்தது. இதற்கான அனுசரணையை மன்னார் சமாதானத்திற்கும் மீளிணக்கத்திற்குமான வளங்கள் நிறுவனம் வழங்கியது.

பெருமளவிலான பொதுமக்களும் மதத் தலைவர்களும், அரசசாரா நிறுவனப் பிரதிநிதிக ளும் கலந்துகொண்ட இச்செயலமர்வில் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஆர்.பி.ஆர். நிறுவனத்தின் செயலாளர் அருட்பணி வின்ஸன் பற்றிக் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்த தொடர்ந்து சர்வமதக் குருமாரின் ஆசியுரைகள் இடம்பெற்றன. பின்னர் இதில் பங்குபற்றியோரின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. மக்கள் காதர், சில்வா உட்பட பலர் தமது கருத்துக்களை முன் வைத்தனர். நிர்வாகஸ்தர்கள் தெரிவும் அன்று நடைபெற்றது.

மேற்படி நிகழ்வுக்கான சகல ஒழுங்குகளையும் மன்னார் ஆர்.பி.ஆர்.நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் இராமலிங்கம் சிறப்பாகச் செய்திருந்தார். (க-80)

# மத்திய கல்லூரியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஒக்.18

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்றும் இன்று திங்கட்கிழமை 12 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் அறிவித்துள்ளார்.

இம்மாணவர்கள் இடப்பெயர்வு காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் வசிப்பதனால் அவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

# தேசிய மட்டப் போட்டியொன்றில் கிளிநொச்சி மாணவனுக்கு இரண்டாமிடம்

கிளிநொச்சி,ஒக்.18

கல்வி அமைச்சின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நடாத்தப்பட்ட போட்டியொன்றில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் இந்தப் போதைப் பொருள் ஒழிப்புக்கான ஆக்கப்போட்டி நடைபெற்றது. இதில் கனிஷ்ட பிரிவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவனான தி.கலைச்செல்வன் என்பவரே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் போது இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க-405)



போதைப்பொருள் ஒழிப்பு ஆக்கப் போட்டியில் இரண்டாவது இடத்தைப்பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவனான தி.கலைச்செல்வன் கல்லூரியின் பிரதி அதிபர்கள், நெறிப்படுத்திய ஆசிரியர் ஆகியோருடன் படத்தில் காணப்படுகின்றார்.

# ஒட்டுசுட்டானில் கசிப்பின் ஆதிக்கம்

ஒட்டுசுட்டான்,ஒக்.18

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அமோகமாக நடைபெறுகின்றது.

மக்கள் மீள்குடியேறிய ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் பாவனையாளர் தொகையும் அதிகரித்துள்ளது. இதனால் மீள்குடியேறிய மக்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகளும் கூட கசிப்புக்குத் தாரைவார்க்கப்பட்டு பல குடும்பங்கள் சீரழியும் நிலை காணப்படுகின்றது.

பொலிஸார் இதில் தலையிட்டு கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் முற்றாக ஒழிக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-341)

# சரஸ்வதி முன்பள்ளியின் திருத்தப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளியின் திருத்தப் பணிகளுக்காக ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவினை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளது.

இந்நிதியின் மூலம் முன்பள்ளியின் திருத்தப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (க-313)

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா பற்றி தமிழ்நேசன் அடிகளார் தகவல் தெரிவிப்பு

மன்னார்,ஒக்.18

மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரான அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் அறிவித்துள்ளார்.

விழாவின் தொடக்க நாளான 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் பாலத்தில் இருந்து பண்பாட்டுப் பேரணி ஆரம்பமாகும். இப்பேரணி மன்னார் நகர மண்டபத்தை அடைந்ததும் அங்கே தொடக்க விழா நிகழ்வுகள் இடம்பெறும். அன்று பி.ப.3 மணிக்கு இசை விழா இடம்பெறும்.

தொடர்ந்து 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு முதலாவது இலக்கிய விழாவும் மாலை 3 மணிக்கு நாட்டிய விழாவும் அடுத்த நாள் 25ஆம் திகதி காலையில் இரண்டாவது இலக்கிய விழாவும் மாலையில் நாடக விழாவும் இடம்பெறவுள்ளன. 25ஆம் திகதி மாலை 3 மணிக்கு நிறைவுவிழா இடம் பெறும்.

இவ்வரங்க நிகழ்வுகள் நடைபெறும் அதேவேளையில் 23 ஆம், 24ஆம்,25ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் இலக்கிய ஆய்வரங்குகள் இடம்பெறும். இதிலே இலங்கையில் உள்ள பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் பங்கேற்கின்றனர். உயர்தர தமிழ்பாட மாணவர்கள், ஆசிரியர்கள், இலக்கியவாதிகள், தமிழ் ஆர்வலர்கள் என 400 பேர் அளவில் ஒவ்வொரு நாளும் இதில் பங்கேற்பார்கள்.

மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறும் ஏழு அரங்க நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக மன்னார் மாவட்டத்தின் பல்வேறு அரச அதிகாரிகள், சமயத் தலைவர்கள், கல்வியாளர்கள், கலை இலக்கியவாதிகள் போன்றோரும் இன்னும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பேராசிரியர்கள், கலை இலக்கியவாதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வரங்க நிகழ்வுகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கலை இலக்கியவாதிகள் இயல், இசை, நாடக நிகழ்வுகளை மேற்கொள்கின்றனர்.

மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், கல்வி வலயங்கள், பாடசாலைகள் மற்றும் அரச, அரசசார்பற்ற, மத அமைப்புகள் போன்ற அனைவருடைய ஆதரவையும்பெற்ற மக்கள் மயப்படுத்தப்பட்ட விழாவாக இச் செம்மொழி விழா இடம்பெறவுள்ளது. 'மக்களிடமிருந்து மக்களுக்காக' என்ற கொள்கையின் அடிப்படையில் மக்களிடமிருந்து நிதிப் பங்களிப்பைப் பெற்று இவ்விழா நடைபெறுகின்றது என மன்னார் தமிழ்ச்சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவ்விழாவில் பேராளர்களாகக் கலந்துகொள்ள விண்ணப்பித்த அனைவருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. விண்ணப்பித்த அனைவரும் தங்கள் வரவை உறுதிப்படுத்தும்படி கேட்கப்படுகின்றனர். செம்மொழி விழாவையொட்டி மேற்கொள்ளப்பட்ட அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்புத் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய சீட்டிழுப்புத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி என மன்னார் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் திரு.தோமஸ் மரியதாஸ் அறிவித்துள்ளார். (க)




# பிரதேச சபைக்கு புதிய கட்டடம்

நாவற்குழி,ஒக்.18

மன்னார், நானாட்டான் பிரதேச சபையின் அலுவலகக் கட்டடம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்களை வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவித் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இந்தக் கட்டடத்திற்கான மொத்த மதிப்பீடு 21 மில்லியன் ரூபாவெனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர் வரும் நவம்பர் 2 ஆம் திகதி வரையும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென வடக்கு மாகாண சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

# கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

கிளிநொச்சி,ஒக்.18

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்பகுதி இராணுவத்தினருடன் சுகாதாரத் திணைக்களப் பணியாளர்கள் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வைத்தியசாலைகள், கோவில்கள், பாடசாலைகள், மயானங்கள், பொதுவிடங்கள் அனைத்திலும் துப்புரவுப் பணிகள் கடந்த 7 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இதனால் அந்தப் பகுதி முழுவதும் சுத்தம் செய்யப்பட்டதுடன் நீர் தேங்கி நிற்கக் கூடிய பல இடங்களும் கண்டறியப்பட்டுள்ளன. புதிதாக நீர் வழிந்தோடும்படியாக வாய்க்கால்கள் அமைக்கப்பட்டதால் நீர் தேங்கி நிற்பது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் டெங்கு நோயை உருவாக்கும் நுளம்புகளின் பெருக்கமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பிளாஸ்ரிக் பொருள்கள், தகரப் பேணிகள், கோயில் பகுதிகளில் காணப்படும் தேங்காய்க் கோம்பைகள், சிரட்டைகள் அனைத்தும் பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் உழவு இயந்திரங்கள் மூலம் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகளில் சுகாதாரத் திணைக்களப் பணியாளர்களுடன் இராணுவத்தினரும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். (க-440)

# கட்டாக்காலிகளால் விவசாயிகள் பாதிப்பு காரைநகரில் நடவடிக்கைக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.18

காரைநகர் பிரதேசத்தின் வயல்களில் கட்டாக்காலி கால்நடைகள் நெற்பயிர்களை அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

காரைநகர் பிரதேசத்தில் நெற்பயிற்ச் செய்கை மேற்கொள்ளப்படும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காததால் அவை நெற்பயிர்களை வகை தொகையின்றி அழித்து வருகின்றன.

கடந்த வருடங்களில் காரைநகரில் ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவந்த போதிலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லையால் இவ்வாண்டு குறிப்பிட்டளவு விவசாயிகளே நெற்செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

நெல்லின் விலை வீழ்ச்சி, கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் பயிரழிவு, அதிகரித்த விவசாயக் கூலி போன்றவற்றினால் இம்முறை நெற்செய்கையில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை.

எனினும் பெருமளவு செலவில் குறிப்பிட்டளவிலானோர் மேற்கொண்ட நெற்செய்கையினையும் கால் நடைகள் அழித்து வருவதனால் கவலை அடைந்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கால் நடை களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-250)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பொதுச் சபை அங்கத்தவர்
திரு.கு.நடேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்
**குமாரலிங்கம் பொன்னுப்பிள்ளை**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து
துயரமடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

மாவைக் கந்தன் சிக்கன கடனுதவி
கூட்டுறவுச் சங்கம், மாவிட்டபுரம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
25 ★ 06 ★ 1947



மறைவு
17 ★ 09 ★ 2010

**திருமதி கீதபொன்கலன் லில்லிகிரேஸ்** (புஸ்பம்)

(4 ஆம் வட்டாரம்; மண்டைதீவை பிறப்பிடமாகவும், குருநகர் இல.8, அடப்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

அன்பான மனைவியாய் பாசமிகு தாயாய் பண்பாக எமை வளர்த்தீர்கள்
ஒன்றல்ல ஓராயிரம் மாதங்கள் சென்றாலும் உம் அன்பை மறவோம் அம்மா
இதயத்தில் சுடராய் எந்நாளும் ஒளிர்வீரே

அன்புத் தெய்வத்தின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (18.10.2010) திங்கட்கிழமை புனிதயாகப்பர் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

*இவரின் பிரிவால் துயருறும்*
தாய், கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,உறவினர்கள்.

இல.8,அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் தம்பித்துரை சபாரத்தினம்**
*(மதுவரி உத்தியோகத்தர்)*

மண்ணகத்தில்: 30★12★1953 விண்ணகத்தில்: 18★09★2010

18.09.2010 சனிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும்,தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (18.10.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தாங்கள் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நி.முகவரி: குடாரப்பு, நாகர்கோயில்.
த.முகவரி: வெள்ளுருவை, அல்வாய் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(104720)

## வெள்ளைப் பிரம்பு தினம் சாவகச்சேரியில் நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.18

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து வெள்ளைப் பிரம்பு தினத்தினை அனுஷ்டித்தனர்.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட விழிப்புலனற்றோர், சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து விழா மண்டபத்திற்கு பொது மக்களால் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கச்சாய் வினோபா முன்பள்ளி நிர்வாகத்தினரால் நிகழ்வில் கலந்துகொண்ட விழிப்புலனற்றோருக்கு உடு புடைவைகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகக் கல்விக்குத் தெரிவு செய்யப்பட்ட விழிப்புலனற்ற மாணவனுக்குப் பரிசில் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.

தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம், கச்சாய் வினோபா முன்பள்ளி காப்பாளர் த.சோதிநாதன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸன் உட்படப் பலர் உரையாற்றினர்.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களின் இசை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (6-207)

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.18

கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் எம்.யோகீஸ்வரதேவர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவரின் சேவை நலன் பாராட்டு விழா எதிர்வரும் 21ஆம் திகதி கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கொடுப்பனவு

தென்மராட்சி, ஒக்.18

நலன்புரி நிலையங்களிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கு ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் வழங்கப்பட்ட மீள் குடியமர்வுக் கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்ளாத 100 குடும்பங்களுக்கு கடந்த வியாழக்கிழமை கொடுப்பனவு வழங்கப்பட்டது.

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (6-202)

## முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.18

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட் டில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கான முகாமைத் துவப் போட்டிகளில் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற கிராம அலுவலர்களின் விவரம் வருமாறு:

க.பூபாலசிங்கம் (அளவெட்டி மேற்கு), எஸ்.ரவீந்திரன் (அளவெட்டி கிழக்கு), கே.உமாகாந்தன் (அளவெட்டி தெற்கு).

இப்போட்டிகள் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சினால் வருடாந்தம் நடத்தப்பட்டு கிராம அலுவலர்களின் வினைத் திறமை மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (6-86)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1234 சிகப்பு

கும்பம் 10 19 25 52 15-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,036,725/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 237,669 | 20/- | 4,753,380/- |
| 2 இலக்கங்கள் | 21,766 | 40/- | 870,640/- |
| 1 இல. + லக்கினம் | 21,575 | 60/- | 1,294,500/- |
| 2 இல. + லக்கினம் | 2,015 | 200/- | 403,000/- |
| 3 இலக்கங்கள் | 580 | 1000/- | 580,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,036,725/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,081,520/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 633 | | 615,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 284,299 | | 9,696,520/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 7,567,500/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்


துலாம் 03 29 35 48

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 630 | 500/- | 315,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 633 | | 615,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10.10.1934 மறைவு: 22.10.2007

**அமரர் சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)**

(தென்மராட்சி மேற்கு, கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும்,
யாழ்.விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவரும்)

திதி: 18.10.2010

அன்பின் ஆதாரமாய், பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எங்கள் குல விளக்கே!
அன்புடன் எம்மை ஆதரித்து,
கடமை கண்ணியத்துடன்
பணி ஆற்றிய அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம்
எப்பொழுதும் எங்கள் இதயத்தில்
வாழ்ந்து கொண்டிருப்பீர் ஐயா!
உங்கள் ஆத்மா சிவனடியில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி தெற்கு, கைதடி.
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

# சரணடைந்து காணாமல் போனோர் விவரம் அமெரிக்கப் போர்க்குற்ற விவகாரப் பிரிவிடம்

நியூயோர்க்,ஒக்.18

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது அரச படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனோர் என்று கூறப்படுவோர் தொடர்பான விவரங்கள் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ''இனச் சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு'' என்ற ஸ்தாபனம் இவ் விவரங்களை அமெரிக்க வெளிவிவகார அமைச்சில் யுத்தக்குற்ற விவகாரங்களைக் கையளும் பிரிவுக்கு இந்த விரவங்களை சமர்ப்பித்துள்ளது.

படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனோர் என்று கூறப்படுபவர்களின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர் ஆகியோரின் வாக்குமூலங்கள், சாட்சியங்கள், பேட்டிகள் ஆகியனவும் இணைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மக்கள் வங்கி அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக்.18

மக்கள் வங்கியின் 49ஆவது வருட நிறைவையொட்டி சாவ கச்சேரி கிளையினரால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பொருள் கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வைத்தியசாலை சிறுவர் விடுதியில் இடம்பெற்றது. 2 குளிர்சாதனப் பெட்டிகள், 15 மின் விசி றிகள், நோயாளர்களுக்கான 4 இருக்கைகள் ஆகியன வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் பொருள்களை வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி க.தயாளனிடம் கையளித்தார். வைத்தியசாலை அபிவி ருத்திச் சங்கத் தலைவர் மு.நாகேந்திரராசா தலைமையில் கூட்டமும் நடைபெற்றது. (6-207)

## மாதகல் கிழக்கு கிராம சேவகர் பிரிவு முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக்.18

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் செயற்றிட்ட கிராமத் தெரிவுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் மாதகல் கிழக்கு ஜே/150 கிராம சேவையாளர் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி 28 கிராமசேவகர் பிரிவுகளில் 15 கிராமசேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டன.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட மாதகல் ஜே/150 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட சிறுவர்கள் மாவட்டமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (த-313-311)

# மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரே அவர்களைக் கொலை செய்வது கண்டிக்கத்தக்கது

### மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பாகத் திகழ வேண்டியவர்கள் பொலிஸார். ஆனால் அதே பொதுமக்களின் படுகொலைகளுக்கும் அவர்கள் காரணமாக அமைவதானது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்பு முனைக்காடு எனும் இடத்தில் 25 வயதுடைய மூன்று குழந்தைகளுக்கு தந்தையான கனகநாயகம் சிவராசா என்பவர் பொலிஸாரினால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இந்தப் படுகொலை சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அரியநேத்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொல்லப்பட்ட நபர் மது அருந்திய நிலையில் தனது தாயாரின் வீட்டில் இருந்தபோது சிவில் உடையில் ஆயுதங்களுடன் அங்கு வந்த பொலிஸார் குறித்த நபர் மது அருந்தியிருக்கிறார் எனத் தெரிந்திருந்தும் அவரைத் தாக்கி இருக்கிறார்கள். இவர்களின் இந்த முறைகேடான செயல் காரணமாக வேதான் குறித்த நபர் படுகொலை செய்யப்பட்டார்.

பொலிஸாரின் இந்த அடாவடித்தனமான செயற்பாட்டால் தான் இந்த கொலை இடம்பெற்றுள்ளது. ஆனால் இதை மறைப்பதற்காக உண்மைக்குப் புறம்பான முறையில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இப்படுகொலையைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதுடன், இதற்குக் காரணமாக இருந்த பொலிஸார் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளதாகவும் அத்துடன் பொலிஸாரின் இந்த நடவடிக்கை காரணமாக பொலிஸார் மீது மக்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## இலவச மருத்துவ முகாம்

கோப்பாய்,ஒக்.18

ஆயுள்வேத பாதுகாப்புச் சபையும் வலி.கிழக்குப் பிரதேச சபையும் இணைந்து நடத்தும் நடமாடும் சித்த ஆயுள்வேத இலவச மருத்துவ முகாம் நாளை செவ்வாய்க்கிழமை புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மருத்துவம், முறிவு நெரிவு, மன அழுத்தத்திற்குத் தீர்வு பெறும் ஆலோசனைகள், சமூக மருத்துவ ஆலோசனைகள், சித்த ஆயுள்வேத, அக்குபஞ்சர் மற்றும் யுனானி முறையில் சிகிச்சை வழங்கப்படும்.

சிகிச்சை பெறவருபவர்களுக்கு போசனை மிக்க சத்துணவாக இலைக்கஞ்சியும் வழங்கப்படும். உரியவர்கள் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-72)




நாவலர் கல்வி நிலையத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்றுக் கொண்டாடப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

நாவலர் கல்வி நிலைய இயக்குநர் ரி.எஸ்.குணநாதன், பிரதம விருந்தினரான வணிக முகாமைத்துவ பீட பேராசிரியர் ரி.வேல்நம்பி, நிறுவன ஆசிரியர் என்.பி.கஜீதரன், உயர்தரப் பிரிவு இயக்குநர் கு.லவன் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: டிலீப்)

## சிகரெட்டுக்குள் போதைப்பொருள் வைத்து மாணவர்களுக்கு விற்பனை; வர்த்தகர் கைது

கொழும்பு, ஒக்.18

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலை ஊக்குவிக்கும் விதத்தில் சிகரெட் வடிவத்தில் பொதிசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உள்ளடக்கிய 14, 000 சிகரெட்டுக்களையும் சந்தேக நபர் ஒருவரையும் அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அக்குறணை நகரில் வியாபாரஸ்தலம் ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட் வடிவத்தில் தயாரிக்கப்பட்டிருந்த இத்தயாரிப்பு ஒன்றுக்குள் 25 வில்லைகள் அடங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைகளுக்கு அருகே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இத்தயாரிப்புக்குள் காணப்படும் வில்லைகள் இனிப்பு மற்றும் புளிப்புச் சுவைகளைக் கொண்டதாகும். அவ்வில்லைகளைப் பாடசாலை மாணவர்கள் பாவிப்பதன் மூலம் மாணவர்கள் சிகரெட் பாவனைக்கு பழக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். கண்டெடுக்கப்பட்ட வில்லைகளில் ஏதேனும் போதைப்பொருள்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றவா எனப் பரிசோதனை செய்வதற்கு அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (6)

## கோப்பாயில் போக்குவரத்து பொலிஸாரின் கண்காணிப்பு

கோப்பாய், ஒக்.18

கோப்பாய் பிரதேசத்தில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலிஸாரின் நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன.

பிரதான வீதிகள், சிறு வீதிகள், ஒழுங்கைகள் ஆகியவற்றில் பல்வேறு வீதிப் போக்குவரத்துப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து வாகனதாரிகள் உரிய ஆவணங்களை எடுத்துச் செல்வதுடன் போக்குவரத்து விதி முறைகளையும் பின்பற்றி வருகின்றனர்.

மேலும் அனுமதியற்ற முறையில் மண் எடுத்துச் செல்லல், மரங்கள் எடுத்துச் செல்லல் போன்ற செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

## இலங்கை இராணுவத்திடம் சார்க் நாட்டுப் படைகள் பயிற்சி

கொழும்பு, ஒக்.18

ஆழ ஊடுருவித் தாக்குதல் மேற்கொள்ளும் யுத்த உத்தி குறித்து இலங்கை இராணுவத்திடமிருந்து கற்றுக்கொள்வதற்காக சார்க் நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் உத்தி தொடர்பாக அமெரிக்காவும் இலங்கையிடம் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள கவனம் செலுத்தி வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் புலிகளுக்கு எதிராக இடம்பெற்ற யுத்தத்தில் ஆழ ஊடுருவும் படையணியினரின் செயற்திறன் அவ்வியக்கத்தை நிலைகுலையச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த)

## இலவச பாடப் புத்தகங்களுக்கான செலவு 3000 மில்லியன் ரூபா

கொழும்பு, ஒக்.18

இதுவரையில் 47 சதவீத பாடசாலைகளுக்கான அச்சிடப்பட்ட இலவச பாடப் புத்தகங்கள் விண்ணப்பங்களுக்கு அமைய வடக்கு, கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் உள்ள பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ.எம்.எம். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

மேலும் 2011ஆம் ஆண்டிற்கான 364 வகைப்பிரிவுப் புத்தகங்கள் 30 மில்லியன் அச்சிடப்பட்டுள்ளதாகவும், முழுமையாக அச்சிட்டு பகுதிகளுக்கு பிரித்து அனுப்பும்போது 3000 மில்லியன் ரூபா வரையில் செலவு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## கிராம அபிவிருத்தி சங்கம் ஆரம்பம்

நாவற்குழி, ஒக்.18

அச்சுவேலி தம்பாலை- கதிரிப்பாய் கிராம அலுவர் பிரிவில் மிக அண்மையில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தை அமைப்பதன் அவசியம் பற்றி மேற்படி கிராமத்தின் பெண்களுக்கு கிராம அலுவலர் இ.யோகராசாவினால் வழங்கப்பட்ட விழிப்புணர்வினால் இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி அ.நிர்மலனின் வழிநடத்தலின் புதிய சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (த-201-121)

# மட்டக்களப்பு வாவியில் முதலைகள் பெருக்கம்

மட்டக்களப்பு, ஒக்.18

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு வாவியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை அம்பலாந்துறை வாவியோரம் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவரொருவர் முதலைக்கடிக்கு இலக்காகி காயமடைந்த அதேவேளை, காத்தான்குடி வாவியோரம் 12 அடி நீளமான முதலையொன்று மீனவர்களினால் வலைபோட்டு பிடிக்கப்பட்டு அடித்துக் கொல் லப்பட்டு அருகிலுள்ள மைதானமொன்றில் போடப்பட்டது.

கடந்த வாரம் குறித்த வாவியோரம் மீனவரொருவர் மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளை, முதலையினால் இழுத்துச் செல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டதையடுத்து அப்பகுதி மீனவர்கள் உசாரடைந்த நிலையிலேயே, இந்த முதலை மீனவர்களினால் வலைபோட்டுப் பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

காத்தான்குடி வாவியில் முதலைகளின் நடமாட்டம் தொடர்பாக மீனவர்களினால் தனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இது சட்டத்தோடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளே இதில் கவனம் செலுத்த வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலந்தர் லெப்பை மொகமட் பரீட் தெரிவித்தார். (த)



வாழ்வகம் நிறுவனமும் சுன்னாகம் பிரிவு லயன்ஸ் கழகமும் இணைந்து சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி நடத்திய பேரணியின்போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து கண்பார்வையற்ற சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பேரணியில் வருவதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## புத்தகக் கண்காட்சி

கோப்பாய், ஒக்.18

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபையும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் வலி.கிழக்குப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமையும், 21 ஆம் திகதி வியாழக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

மாணவர்கள் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-72)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். சில காரியங்கள் நீங்கள் எதிர்பார்த்ததை விட வேகமாக நடக்கலாம். வாகனங்கள் வழியில் செலவு ஏற்படலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்வீர்கள். தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் பாசம் கூடும்.



**இடபம்:**
பெரிய அளவிலான ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். பொருளாதார நிலைமையில் மேம்பாடு காணப்படும். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்க நேரிடலாம்.



**மிதுனம்:**
சங்கடங்களை தவிர்க்க புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுக்காகவோ அல்லது நண்பர்களுக்காகவோ கணிசமான தொகையைச் செலவிடலாம். சோர்வு, சோம்பலால் வழக்கமான பணி ஒன்றை நிறுத்தி வைப்பீர்கள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.



**கடகம்:**
விரும்பிய பொருள்கள் வாங்கலாம். மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். கடன் பிரச்சினை ஒன்றை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். தந்தை நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வெளியூர் பயணம் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.



**சிங்கம்:**
தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும். உங்களால் நேசிக்கப்படும் ஒருவர் உங்களுக்கு உதவி செய்யலாம். கோபம், வேகத்தை தவிர்த்து பொறுமையாகச் செயற்படுவீர்கள். தேக பராமரிப்பற்காகக் கணிசமான தொகையை செலவு செய்வீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது வாகன வசதி கிடைக்கலாம்.



**கன்னி:**
பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமை சேர்ப்பர். பல நாள்களாக வராமல் இருந்த உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். வயிறு, வாய்வு தொல்லைகளால் சிரமப்படலாம். சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம். நினைத்தது நடக்க வேண்டும் என, வழிபாடு மேற்கொள்வீர்கள்.



**துலாம்:**
குறைந்த விலையில் வாங்க நினைத்த பொருள் ஒன்றை அதிக விலைக்கு வாங்கலாம். திட்டமிட்ட சில வேலைகள் உறவினர்கள் தலையீட்டால் தடைபடலாம். குடும்ப உறுப்பினர் ஒருவர் பொறுப்பில்லாமல் செயற்படுவதால் எரிச்சல் அடையலாம். புதிய விடயங்களை அறிவதில் நாட்டம் செல்லும்.



**விருச்சிகம்:**
நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். எந்த வேலைக்கும் தயங்காமல் தெம்பு, உற்சாகமாக செயற்படுவீர்கள். சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒன்று உங்களுக்கு கிடைக்கலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கைமாத்தாக கொடுத்த பணம் வரலாம்



**தனுசு:**
வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சலுக்கு ஆள்படலாம். எதிர்பாராத செலவுகளால் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். பொறுப்பான வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். தாய் வழியில் அன்புத் தொல்லை உண்டு. வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.



**மகரம்:**
சொல்வாக்கும், செல்வாக்கும் அதிகரிக்கும். சுயநலமாக செயற்படும் சில்ரைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். உறவினர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். எதிர்பாராமல் பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். கடந்த கால தவறு ஒன்றை நினைத்து வருந்துவீர்கள். மதிப்பு, கௌரவம் மேம்படும்.



**கும்பம்:**
சில வேலைகளுக்கு ஒன்றுக்கு இரண்டு முறை அலைவீர்கள். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். மற்றவர்களிடம் ஏமாறாமல் இருக்க எச்சரிக்கை அவசியம். வீட்டுச் செலவு கூடும்.



**மீனம்:**
நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். குடும்பத்தினர், நண்பர்கள் பாராட்டும் வகையில் செயற்படுவீர்கள். உடன் பிறப்புக்கள் விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். உறவினர் ஒருவர் உங்களிடம் தங்களின் ரகசியங்களை சொல்லி ஆலோசனை கேட்கலாம். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள்.




யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரியின் அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**துன்னாலை காசிநாதர் வித்தி**

வ.உமைபாலன்- 169, ஜெ. சாரங்கன்- 168, செ.தர்ஷன்- 167, சி.டிலக்ஷனா- 164, சி.டிஷானி- 162, பு.நிலக்ஷன்- 157, சி. சாரங்கன்- 156, சி.மிதுஷன்- 152, உ.வினுஜா- 146, இ.சோபிகா- 146, அ.தர்மிகா- 145, உ.லக்ஷன்- '144.

**குடத்தனை அ.த.க.பாடசாலை**

ஜெ.தர்சிகன்- 146, பா.ஆழிக்குமரன்- 147. (201)

# நட்பும் பகையும்



ஒரு பக்தன் காட்டிலே கடுமையான தவம் செய்து கொண்டிருந்தான். கடவுள் அவன் முன் தோன்றினார். கையிலே கதாயுதம் வைத்திருந்தார்.

"பக்தா! உன்னுடைய பக்தியை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டும்" எனக் கேட்டார்.

" பகவானே என்னுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிற சக்திகளை உன்னுடைய கதாயுதத்தாலே தாக்கி வீழ்த்தி அழிக்க வேண்டும்" அது தான் என்னுடைய வேண்டுகோள் என்றான். கடவுள் மறைந்து போனார். சற்று நேரம் ஆகிவிட்டது. ஆண்டவன் கையிலிருந்த கதாயுதம் வேகமாக வந்தது. அவன் மார்பை நோக்கி வந்து தாக்க ஆரம்பித்தது. அப்படியே தடுமாறி கீழே விழுந்தான்.

" ஐயையோ ஆண்டவனே! என்னப்பா இது! என்னுடைய முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் பகைவனை அல்லவா தாக்கச் சொன்னேன். நீ ஞாபக மறதியால் ஏதாவது செய்துவிட்டாயா? உன்னுடைய கதாயுதம் என்னை வந்து தாக்குதே!"என்று கத்தினான்.

கடவுள் மறுபடியும் தோன்றி " பக்தா நீ கேட்டபடிதான் ஆயுதத்தை வீசினேன். மற்றவர்களைத் தாக்க வேண்டும், வீழ்த்த வேண்டும், அழிக்க வேண்டும் என்ற உன் மனம் தான் உனக்குப் பகைவன். அதனாலேதான் இது உன்னையே வந்து தாக்கியிருக்கு!" எனக் கடவுள் சொன்னார்.

இதிலிருந்து தமக்கு எதிரி யார்? என்பதை நல்லாகப் புரிந்து கொண்டோம் இல்லையா?

நமக்கு நண்பர்கள் யார்?

தமக்கு கிடைக்கின்ற நண்பர்களை 3 வகையாகப் பிரிக்கலாம்.

அதை பனைமரம், தென்னைமரம், பாக்குமரம் என்பதாகும்.

பனைமரம் இது தானாக முளைக்கும்,தானாகவே நீர் குடிக்கும்,தானாகவே வளரும், நமக்கு பலன் கொடுக்கும்.

தமக்கு வலிய வந்து உதவி செய்யும் நண்பர்கள் இந்த தரத்தைச் சேர்ந்தவர்கள்.

தென்னைமரம் இதுக்கு எப்போதாவது நீர்விட்டால் போதும் வளர்ந்துவிடும்.

இது மாதிரி எப்போதாவது உதவி செய்தால் அதை ஞாபகம் வைத்திருந்து தமக்கு உதவி செய்கிற நண்பர்கள் தென்னைமரம் மாதிரி.

பாக்குமரம் இதுக்கு தினமும் நீர்விட்டால்தான் வளரும். பலன் கொடுக்கும்.

இது மாதிரி தினமும் உதவி செய்தால் தம்மை கவனிக்கிற நண்பர்கள் உண்டு. இவர்கள் பாக்கு மரம் மாதிரி.

எனவே நண்பர்களை இந்த வகையிலே அடையாளம் கண்டு அதற்கேற்ப நடக்க வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்.**

# தீயே... உனக்கு வணக்கம்

விவசாயி ஒருவன் காளை மாடு முன்னாலே போக ஏரின் நுகத்தடியை அதே தடி போன்ற கைகளால் அழுத்தியபடி பேசிக் கொண்டே வயலில் உழுது கொண்டிருந்தான்.

" மாடு நீ முன்னாலே போற மனிதனான நான் பின்னாலே வாறேன்" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தான். மாடும் அதற்கேற்றால் போல் தலையை ஆட்டியது.

"நீயும் நானும் இந்த விவசாயத்தில் கூட்டணி அதனால் வருகிற விளைச்சலில் உனக்குப் பாதி எனக்குப் பாதி" என்றான் விவசாயி. மாடும் மகிழ்ந்து போனது.

பாதி, பாதி என்றால் எப்படி பங்கு வைக்கலாம்? சரி நீ முன்னாலே போகிற படியால் முதலில் வளரும் பயிர்கள் எல்லாம் உனக்கு. நான் பின்னால் போகிற படியால் பின்பு வளரும் பயிர்கள் எல்லாம் எனக்கு" என்றான்.

சிறிது காலம் செல்ல வயல் பச்சைப் பசேல் எனக் காட்சி அளித்தது. அறுவடை செய்ததும் வைக்கோல் மாட்டுக்கு நெல் மனிதனுக்குக் கிடைத்தது. மாடு என்ன நீதிமன்றத்துக்கா போக முடியும்.




கவலைப்படாதே இந்த நெல்லிலும் பங்கு தருகிறேன் என்றான் விவசாயி.நெல்லை உடைத்த போது முதலில் வந்தது உமி மாட்டுக்கு. பின்பு வந்த அரிசி மனிதனுக்குக் கிடைத்தது.

" ஒரு முறையாவது தனக்கு முதலில் வருவதைத் தரும் படி" மாடு கேட் டது. சரி என்றான் விவசாயி. பொங்கல் பண்டிகை வந் தது. அதில் முதல் நாள் பொங்கல் மனிதனுக்கு மறுநாள் பொங்கல் மாட்டுக்கு. சத்தில்லாத முளை முறிந்த அரிசிச் சோற்றைச் சாப்பிட்டு வயிறு பெருத்து மனித ஜாதி முதுமை அடைந்தது. என் தாய் பசையும் விற்றமின்களும் உடைய தவிட்டைச் சாப்பிட்டு மாடு இளமை பெற்றது.


இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் சுயநலமிக்க மனித ஜாதியில் குறுக்கிட்டு மாட்டு ஜாதிக்கு நீதி வாங்கிக் கொடுத்தது நீதி தேவதை.

**சுகி.சிவம்.**





**ப.கஜலக்ஷி,** தரம் -7,
யா/இந்து மகளிர் கல்லூரி.



**மிதிலா,** தரம் -6 B,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.


**பி.பூநிலா,** தரம் -4 B,
யா/இந்து மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.


**அ.சிந்துஜன்,** தரம் -7 A,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கன் வித்தி.


**இ.செல்பியா,** தரம் -9 A,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.


**ச.பானுதிப்,** தரம் - 6 A,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.


**செ.கேதுஷா,** தரம் -3A,
யா/நல்லூர் சென்.பெனடிக் கத்தோலிக்க ம.வி.


**ச.டிருபா,** தரம் -5A,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

# தகவல்கள் சில....

★ அன்னை தெரேசாவின் தாய் நாடு
 - அல்பேனியா
★ இலங்கையின் 2வது அனல் மின் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடம்
 - திருகோணமலை
★ பென்சிலினைக்கண்டு பிடித்தவர்
 - அலெக்சாண்டர் பிளெமிங்
★ "கடல்புறா" சரித்திர நாவலை எழுதியவர்
 - சாண்டில்யன்
★ செயற்கை மகரந்த சேர்க்கையை கண்டுபிடித்தவர்
 - கிரேகா ஜோகான் மெண்டல்
★ ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பு நாடுகள்
 - 61 நாடுகள்
★ தகவல் தொழில் நுட்ப உச்சி மகாநாடு 2003 மார்கழியில் நடைபெற்ற நாடு
 - சுவிஸ் லாந்தின் ஜெனிவா நகரில்
★ பறவைக் காய்சல் முதன்முதலில் கண்டுபிடித்த நாடு
 - வியட்நாம்
★ நீல நிற இரத்தத்தையுடைய கடல் உயிரினங்கள்
 - நண்டு, இறால்
★ சத்தமிடாதவிலங்கு
 - ஒட்டகச்சிவிங்கி
★ கரடியை எந்த கண்டத்தில் காணமுடிவதில்லை
 - அந்தாட்டிக்கா
★ மீன் காட்சிச் சாலை முதன் முதல் எங்கே எப்போது ஆரம்பிக்கப்பட்டது
 - லண்டனில் 1853 ம் ஆண்டு
★ இந்தியாவின் மிகப்பழைமையான மொழி
 - தமிழ்மொழி
★ பாரிய வெடிப்பு வாதத்தை வெளியிட்ட விஞ்ஞானி
 - எட்வின் ஹபிள்
★ பாரசூட்டின் வீழ்காவலி தயாரிப்பிற்கும், வெப்ப எதிர்ப்பு ஆடைகள் தயாரிப்பிற்கும் பயன்படும் பல்பகுதியம்
 - நொமெக்ஸ்

**வி.கௌதமி,** *தரம் - 9 D, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*




# வினையான விளையாட்டு

காட்டின் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் தனியாக ஒருவர் வசித்து வந்தார். அவர் மற்றவர்களை ஏளனம் செய்வதில் வல்லவர். திடீரென ஒருநாள் கரடி வருது கரடி வருது கரடி வருது என்று கூச்சல் இட்டார். அயலவர்கள் எல்லோரும் தடிகளுடனும்,வெட்டுகத்திகளுடனும் உதிவிக்கு ஓடி வந்தார்கள். எல்லோரும் ஏமாந்து போனீர்கள் என்று ஏளனமாகச் சிரித்தார். உதவிக்கு வந்தவர்கள் கோபத்துடனும், வெட்கத்துடனும் அவரவரது வீடுகளுக்கு திரும்பி சென்றனர்.மீண்டு மீண்டும் அதே விளையாட்டு நடந்தது.ஓ நாள் உண்மையாகவே கரடி வந்தது. அவரும் கூச்சலிட்டார். உதவிக்கு எவருமே வரவில்லை. தனியாக சிக்கியவரை



கரடி கடித்து குதறிச் சென்றது. தெய்வாதினமாக அவர் உயிர் பிழைத்தார். பிறரை ஏமாற்றுவது விளையாட்டு அல்ல அது வினையான விளையாட்டு. "அடாது செய்வான் படாது படுவான்"

**நேசராஜ்குமார் வித்தியாசகர்,** தரம்-6 B
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா?78

01. ஒக்ரோபர் 10 உலகளாவிய ரீதியில் என்ன தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது?
02. 2010 ஆம் ஆண்டுக்கான நோமல் பரிசு 3 பேருக்கு கூட்டாக வழங்கப்பட்டது. எத்துறைக்கு வழங்கப்பட்டது?
03. உலக டென்னிஸ் தரவரிசையில் முத லிடத் தில் இருப்பவர் யார்?
04. புரதான காலத்தில் தபால் பொதிகளை அனுப்புவதற்காக பயன்படுத்தப் பட்ட வாகனம் எது?
5. பாடசாலை மாணவர்களுக்கான நடமாடும் நூலக சேவை எந்நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெறுகிறது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 22.10.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? 76 இற்கான சரியான விடைகள்

1. 4ம் புவனேபாகு
2. கிறீன்லாந்து
3. 98.4 °C
4. தமிழ்மொழி
5. தென்னாபிரிக்கா

1. **இ.தரணிபரன்,** தரம் - 4
 யா.இந்து ஆரம்ப பாடசாலை.
2. **சூ.பிரியதக்ஷி,** தரம் - 6A
 யா.தம்பட்டி மெ.மி.த.க. பாடசாலை.
3. **ம.கோகனவர்மன்,** தரம் - 9A
 யா.புனித பத்திரிசியார் கல்லூரி.
4. **பா.அம்புஜன்,** தரம் - 9A
 யா.புனித பத்திரிசியார் கல்லூரி.
5. **சி.துஷாந்தன்,** தரம் - 10
 யா.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................................
தரம் :-..............................................
பாடசாலை :-..............................................
..............................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

# உதயனின் ரி-20 உலகக் கிண்ணப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் - 2010 போட்டியை முன்னிட்டு உதயன் வெளியீட்டகம் நடத்திய பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு. இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

| வெற்றிபெற்றவர் | பரிசு வழங்கும் நிறுவனம் | வெற்றிபெற்றவர் | பரிசு வழங்கும் நிறுவனம் |
|---|---|---|---|
| பரமானந்தன் சதீஷ் அரசடிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். | நளின் கணனி நிறுவனம் இல 195/4, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி | ஜெ.ஜெயவர்மன், மகாஜனக் கல்லூரி | 'கேற்வே' இல 347 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| தே.கபில்தேவ், தரம் 11 சுழிபுரம், விக்ரோறியாக் கல்லூரி. | UNI I.C.T. CAMPUS மானிப்பாய் வீதி, மானிப்பாய். | ச.சசிதரன், இடைக்குறிச்சி, வரணி. | Mother and Baby Care இல 108, பலாலிவீதி, திருநெல்வேலி. |
| செ.மால்முருகன் கோப்பாய் தெற்கு, கோப்பாய். | ABHI கணனி நிறுவனம் இல 252,253, நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். | சி.கஜேந்திரன், டச்சு வீதி, தொல்புரம் கிழக்கு, தொல்புரம். | Mathan Electronics சுதுமலைச்சந்தி, மானிப்பாய். |
| பா.பிரதீபன் இராசபாதைவீதி, கல்வியங்காடு. | ஆஷா வர்த்தக நிலையம் | எஸ்.செந்தூரன் பிரம்படிலேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். | றோயல் றெஸ்ரோரன்ட் இல 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| க.நிசானா ஆஸ்பத்திரிவீதி, கோண்டாவில். | ABHI கணனி நிறுவனம் இல 252,253, நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். | ச.சௌஜன்யன் 41, இராசவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | கிருபா லேணர்ஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| கே.கஜீபன் தரம்8, கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம். | Harimi Internet cafe | எஸ்.புவனேந்திரராஜா விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு. | உதயன் (கிளை) பிரதானவீதி, நெல்லியடி. |
| அ.நளாயினி 431, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். | தட்ஷா அழகுநிலையம் இல 84, பிறவுண் வீதி. | | |
| பா.விக்னேஸ்வரி பழவத்தை ஒழுங்கை, பருத்தித்துறை. | P.C.Solutions இல 305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | | |

உதயன் நிறுவனம் வழங்கும் சிறப்புப் பரிசுகள் மூன்றை வென்றவர்கள்

முதலாம் பரிசு - சி.ரஞ்சன் வளவத்தை லேன், கொக்குவில் கிழக்கு,
இரண்டாம் பரிசு - கிருஷ்ணநாதன் விதுரன் தரம் 10 மானிப்பாய் இந்துக்கல்லூரி.
மூன்றாம் பரிசு - செ.ரவிசாந் வீரமனை குப்பிளான்.




ஃபுபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு
ரூபா 3950/-யிலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422


## திருநெல்வேலி சந்தையின் புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.18

திருநெல்வேலி சந்தைக்கான புதிய கட்டடம் நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசெம்பர் மாத முதல் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

கொக்குவில் பகுதியில் அமையவுள்ள 3 மாடிக் கட்டடத்திற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் மேற்படி கட்டடத்திற்கான ஆரம்ப வேலைகள் நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-7)


**மெசின் மைண்டர் தேவை**

கைதடியில் மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தினருக்கு K.R.S ஒவ்செட் மெசின்மைண்டர்தேவை. மூன்று வருட அனுபவம் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:- 0779130701

**German Swiss மொழிகள்**

German Swiss மொழி வகுப்புகள் German இல் இருந்து வந்த ஆசிரியையால் நடைபெறுகின்றன. தொடர்புகளுக்கு:- No.10, Palaly Road, Jaffna.T.P: 0771604823


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்




அகவை அறுபது எய்தி அரும்பணியாற்றும்
**திரு. தம்பையா நடராசா** அவர்கள்
(செயலாளர், வலி.கிழக்குப் பிரதேச சபை)

நீர்வையின் மைந்தன் நிதமும்
நீள்புகழ் முருகன் மற்றும்
கார்முகன் கணேசன் தாளைக்
கருத்துடன் பணியும் பேரன்
ஏர்புகழ் சேவை கண்டோம்
எழிலுற வாழ்த்தும் தந்தோம்
பார்புகழ் நடராசப் பெரியோய்
பல்லவர் போற்ற வாழ்க!

செம்புல மண்ணின் சபையைச்
செம்மையாய்காத்து நாளும்
நம்புல வளங்கள் யாவும்
நலம்பெற் றொளிரச் செய்தீர்
அம்புலி வளர்ச்சி போல
அருஞ்சபை வளர்த்தீர் நன்றி
நம்மவர் நெஞ்சம் காக்கும்
நற்பணி தொடர்க! வாழ்க!

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
தலைமை மற்றும் உப பணிமனைகள்.
வலி.கிழக்குப் பிரதேசசபை.

(சி/571984)

## யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**பா.ஆழிக்குமரன்**
147 புள்ளிகள்

ம.ஜெஸ்ரின்– 130
ம.சிந்துஷன்– 129
மோ. நிதுஷாலினி– 128
ம.மதுஷன்– 107



**ஜெ.தர்சிகன்**
146 புள்ளிகள்

ச.விதுர்சிகா– 105
த.லோசனா–104
செ.ஜெனனி–101

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக 2 மாணவர்கள் சித்தியடைந்ததோடு, 7 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள். வெற்றிபெற்ற 2 மாணவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 7 மாணவர்களையும், இம்மாணவர்களது வெற்றிக்கு வழிவகுத்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை, குடத்தனை.

(சி/571945)

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

15.10.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2305

வெற்றி எழுத்து: B — வெற்றி எண்கள்: 8 9 1 2 8 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B 8 9 1 2 8 7 | ரூபா.11,602,246/= | பரிசு - |
| 1 பரிசுகள் | ■ 8 9 1 2 8 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | ■ ■ 9 1 2 8 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | ■ ■ ■ 1 2 8 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | ■ ■ ■ ■ 2 8 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1358 |
| 5 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ 8 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13603 |
| 6 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ ■ 7 | ரூபா. 20/= | பரிசுகள் 134171 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | ■ 8 9 1 2 8 ■ | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | ■ 8 9 1 2 ■ ■ | ரூபா. 1,000/= | பரிசுகள் 130 |
| 9 பரிசுகள் | ■ 8 9 1 ■ ■ ■ | ரூபா. 100/= | பரிசுகள் 1342 |
| 10 பரிசுகள் | ■ 8 9 ■ ■ ■ ■ | ரூபா. 50/= | பரிசுகள் 13365 |
| 11 பரிசுகள் | B ■ ■ ■ ■ ■ ■ | ரூபா. 20/= | பரிசுகள் 53643 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 14,308,030.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 இணையம்: www.nlb.lk

# இடம்பெயர்ந்த தென்னைமரவாடி மக்கள் வெகுவிரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

திருகோணமலை, ஒக்.18

25 வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்த தென்னைமரவாடி பிரதேச மக்கள், வெகு விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர். இதற்கான ஏற்பாடுகளை முடித்திருக்கிறோம் என மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் தென்னைமரவாடி பிரதேச மக்கள் 25 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்தனர். அவர்கள் விரைவில் குடியமர்த்தப்படுவார்கள். இதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன என்றும் அவர் மேலும் விவரித்துள்ளார்.

எங்களுக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடுகள் கிடையா. யுத்த அனர்த் தங்களால் தங்கள் நிலங்களை இழந்த மக்கள், தமது நிலங்களுக்கான தக்க ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அப்படிச் சமர்ப்பித்தால் காலதாமதமின்றி அவர்களை அவற்றில் மீள்குடியமர்த்த துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள அங்கு சென்றுள்ளார்கள். அவர்களும் தங்கள் முன்னைய இருப்பிட ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவை மீள் பரிசீலனை செய்யப்படும். மீள்குடியேற்ற விடயத்தில் பாரபட்சத்துக்கு இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த தென்னைமரவாடி பிரதேச மக்களும் ஆதாரங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவை பரிசீலிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வெகுவிரைவில் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளுக்கூடாக யானை வேலி கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே வேளை, சிறுபான்மை மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன என முறையீடுகள் எழுந்துள்ளன. இவை எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முறையீடுகள் தொடர்பாக நான் உரியவர்களோடு தொடர்புகொண்டு, மேலதிக நடவடிக்கைகளைத் துரிதமாக மேற் கொள்வேன். இதில் அசிரத்தை காட்டப்பட மாட்டாது என்றும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளார். (ஸி)




# மட்டு.மாவட்டத்தில் 120 மீனவர் அமைப்புகள்

மட்டக்களப்பு, ஒக்.18

கடற்றொழில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 120 மீனவர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்புகளுக்கு ஊடாக எதிர்காலத்தில் மீனவர்களின் வாழ்க்கைத்தரம் கட்டியெழுப்பப்படும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் இம்மாவட்டத் தில் 60 அமைப்புக்கள் அமைக் கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு மாதத்துக்குள் ஏனைய 60 அமைப்புக்களை அமைக்கும் பணிகளும் நிறைவடைந்து விடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித் துள்ளார்.

120 அமைப்புக்களையும் உள்ளடக்கி மாவட்ட மட்டத்தில் ஓர் அமைப்பும், மாவட்ட அமைப்புக்களை ஒன்றிணைத்து தேசிய ரீதியிலான சம்மேளனம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் விவரித்துள்ளார்.

உருவாக்கப்படவுள்ள தேசிய சம்மேளனத்தின் முதலாவது தேசிய மாநாடு கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் இவ்வருட இறுதியில் கொழும்பில் நடைபெறும் என்றும் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் விருது வழங்கல் விழாவை அமைச்சர் பி.தயாரத்ன குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், மேடையேற்றப்பட்ட நடன நிகழ்வொன்றையும் படங்களில் காணலாம்.

# படுவான்கரை பிரதேசவாசி காட்டு யானைக்குப் பலி

மட்டக்களப்பு,ஒக்.18

மட்டக்களப்பு, படுவான்கரை பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பாளையவட்டை, புதுமுன்மாரிசோலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை (வயது - 37) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந் தவராவார்.

வயலில் வேலை செய்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வீட்டிலிருந்து சென்று கொண்டிருந்த இந்நபரைக் காட்டு யானை வழிமறித்து தாக்கியுள்ளது. இதில் இவர் உயிரி ழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் அடிக்கடி காட்டு யானைகளின் தாக்குதலுக்குப் பலியாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடி - பாணதுறை நேரடி பஸ்சேவை ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக்.18

காத்தான்குடியிலிருந்து, பாணதுறைக்கான நேரடி பஸ் சேவை நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த வியாழக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது என இலங்கைப் போக்குவரத்துச் சபை காத்தான்குடி முகாமையாளர் ஏ.எல். எம்.பழுலுல்லாஹ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இ.போ.சபையால் நடத்தப்படும் இச்சேவையில் ஈடுபடும் பஸ், காலை 6.45 மணிக்கு காத்தான்குடி பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து புறப்பட்டு 7.15 மணிக்கு மட்டக் களப்பு பஸ் தரிப்பு நிலையத்தைச் சென்றடையும்.

பின்னர் அங்கிருந்து ஏ - 5 வீதியூடாகப் புல்லுமலை - பதுளை வழியாக பலாங் கொடை சென்று அங்கிருந்து பாணதுறையை அடையும் என மட்டக்களப்பு சாலை முகாமையாளர் துரை மனோகரன் தெரிவித்தார்.

மறுநாள் காலை 7.15 மணிக்கு பாண துறையிலிருந்து நேரடியாக காத்தான்குடி நோக்கி இந்த பஸ் புறப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸி)

# காலத்திற்கேற்றவாறு மலையக மக்கள் உணவுப் பழக்கத்தை மாற்றவேண்டும்!

## இராதா எம்.பி.தெரிவிப்பு

நுவரெலியா, ஒக். 18

காலத்துக்கு ஏற்ப மலையக மக்கள் தமது உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் - என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் காலம்காலமாக கோதுமை மா உணவுப் பதார்த்தங்களையே பிரதான உணவாக உட்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், இதற்கு முக்கிய காரணம் அவை தயாரிப்பதற்கு இலகுவாக இருப்பதே என்றும் சொன்னார்.

எனினும், தற்போது கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளதால் மலையக மக்கள் போஷாக்கு நிறைந்த அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்களை உண்பதற்கு பழகிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரிசிமாவினைக் கொண்டு உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கும் முறை நுவ ரெலியா பீத்ரூ தோட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்த்தன தலைமையில் அறிமுகப் படுத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராதாகிருஷ்ணன் எம்.பி. மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

கோதுமை மாவிலும் பார்க்க அரிசி மாவில் போஷாக்கு அதிகமாக இருக்கின்றது. அத்துடன், அதன் விலையும் குறைவு. அரிசி மா மூலம் உணவு வகைகளைத் தயாரிப்பதும் இலகுவானது.

எனவே, இதைக் கருத்தில் கொண்டு மலையக வாழ் தோட்டப்புற மக்கள் தமது உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஸி)

# கண்டிமாநகர முதல்வர் விவகாரம் சர்ச்சைகள் இன்றும் ஓயவில்லை

கண்டி, ஒக்.18

கண்டி மாநகரசபை மேயர் விவகாரம் மீண்டும் நீதிமன்றம் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மாநகரமேயராக இருந்த எல்.பி. அலுவிகார, பல்வேறு குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து மத்திய மாகாண முதலமைச்சரால் பதவியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

முதலமைச்சரின் இந்த முடிவுக்கு எதிராக அலுவிகார நீதிமன்றம் சென்றார். ஆனால் நீதிமன்றம் முதலமைச்சரின் முடிவை ஏற்றுக்கொண்டது. இதையடுத்து அலுவிகார கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். அங்கும் அவருக்குத் தோல்வியே கிட்டியது.

நீதிமன்றங்களின் முடிவையடுத்து ஐ.தே.கட்சி ராஜா புஸ்பகுமாரவை மேயராக நியமித்தது.

ஆனால், அலுவிகார பதவிநீக்கம் செய்யப்பட்டபோது மத்திய மாகாண முதலமைச்சரால் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த சமிந்த விக்கிரம சிங்கபதில் மேயராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் தன்னை மேயராக நியமிக்காது கட்சி வேறொருவரை மேயராக நியமித்தமைக்கு எதிராக சுமிந்த நீதிமன்றம் செல்லவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

முதலமைச்சரினால் நியமிக்கப்பட்ட பதில்மேயர் இருக்கும்வரை புதிதாக மற்றொருவர் பதவி ஏற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று புதிய மேயர் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகலாம் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது. வர்த் தமானி அறிவித்தல் வெளிவந்தவுடன் பதில் மேயர் சுமிந்த தம்மைப் பதவிநீக்க முடியாது என்ற நீதிமன்ற உத்தரவைப் பெறவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மேயர் நியமனம் தொடர்பான சர்சைகள் தொடரும் என்றே தெரியவருகிறது.

சுமிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதி பதியை ஆதரித்தார். இதற்கு எதிராக ஐ.தே. கட்சி தனது உறுப்புரிமையை நீக்க முடியாது என்ற நீதிமன்ற உத்தரவையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸி)




# கிணற்றில் தவறி வீழ்ந்து 3 வயதுக்குழந்தை மரணம்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை கவரவில தோட்டத்தில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை முற்பகல்11.30 மணியளவில் இடம்பெற்றது.

முத்துகிருஷ்ணன் பகீரதரன் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாப மரணத்தை தழுவியுள்ளது. (ஸி)

# அக்குறணைப் பிரதேசத்தில் ஆதனவரி செலுத்தாதோரின் உடைமைகள் பறிமுதல்!

## இம்மாத இறுதிவரை அவகாசம்

கண்டி, ஒக். 18

அக்குறணை பிரதேசசபைக்குட்பட்ட மக்கள் ஆதனவரிகளை இம்மாத இறுதிக்குள் செலுத்தாவிட்டால் அவர்களது உடைமைகள் பறிமுதல் செய்யப்படும் என அக்குறணைப் பிரதேச சபைத் தலைவர் ஏ.எம். எம்.சிம்ஸான் தெரிவித்தார்.

பிரதேசசபைக்குட்பட்ட 35 கிராமசேவையாளர் பிரிவுகளில் வரி சேகரிப்பைத் துரிதப் படுத்துமுகமாக இம்மாதம் பத்து நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு இந்தமாதம் முழுவதும் வரி களைச் சேகரிப்பதற்கான விசேட திட்டங் கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதேசசபை தனது வருமானத்தை அதி கரிக்குமுகமாக ஒக்ரோபர் மாதத்தை வருமான ஊக்குவிப்பு மாதமாக அறிவித்துள்ளது.

வரிகள் செலுத்தப்படாவிடின் 1987/ 15 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்டவர்களின் உடைமைகளை சுவீகரிப்பதற்கு அதிகாரம் உள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸி)

# குக்குலேகல தோட்டத்தில் மக்கள் தொடர்ந்து வாழமுடியாத நிலைமை

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

நுவரெலியா, ஒக்.18

நிவித்திகல - குக்குலேகல தோட்டத்தில் மக்கள் தொடர்ந்து வாழமுடியாத நிலை காணப்படுகின்றது - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்க ம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை குக்குலேகல தோட்டத்திற்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள தமிழ் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் குக்குலேகல தோட்ட மக்களை நேரில் சென்று சந்தித்தேன். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

அந்த மக்கள் தொடர்ந்து அங்கு தங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இது வரை 10 குடும்பங்கள் மாத்திரமே வீடுகளுக்குத் திரும்பியுள்ளன. அவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை அங்கு காணப்படுகின்றது.

தமிழ்க் குடும்பங்களின் 25 வீடுகள் பெரும்பான்மை இனத்தவரால் சேதப்படுத் தப்பட்டுள்ளன. உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மட்டுமே வந்து தம்மைப் பார்வையிட்டார் என்றும், எந்தவொரு தமிழ் அமைச்சரும் வரவில்லை என்றும் அந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.- இப்படி சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஸி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி
கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக
இன்று (18.10.2010) பதவியேற்கும்



## உயர்திரு செ.ஸ்ரீநிவாசன் அவர்கள்

(SLAS - I)
[(B.A, PGD (Marketing, U.K.), DPM, PGD
(Management) M.A (Pub. Adm), M.A (Development

மீட்சி பெற வேண்டி நின்ற தென்மராட்சிக்கு
ஆட்சி செய்யவென
ஆசியுடன் ஆண்டவன் அனுப்பிய மன்னனே!
முடக்காடு வாழ் தலை மகனே - வன்னி மக்கள்
இடர் சுமக்கச் செல்லும் எம் பிரதேச செயலரே!
கடமைநெறி பிறழாத கண்ணியமானவரே - இன்று புதிய
இடத்தில் புதிய பதவியில் தங்கள் பணி ஆரம்பமாகட்டும்!
தொடரும் தங்கள் சேவைக்கு எங்கள் வாழ்த்துக்கள் உரமாகட்டும்!

அனைத்து உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.


## குடமியன் பாடசாலைக்கு ஸ்ரீதரன் எம்.பி. நிதியுதவி

தென்மராட்சி, ஒக்.18

குடமியன் அ.த.க. பாடசாலை வகுப் பறையின் திருத்த வேலைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவு நிதியில் இருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201- 207)

## வாணி விழா

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகமும் இணைந்து வலி.தென்மேற்கு பிரதேச சபை உப அலுவலகத்தின் அனுசரணை யுடன் நடத்தும் வாணி விழாவும் வாசிப்பு மாத நிகழ்வும் கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அம்பாள் ச.ச. நிலை யத் தலைவர் இ.மனோ கரன் தலைமையில் நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப் பாய் கிராம உப அலுவலக பொறுப் பதிகாரி கு. இரத்தி னராசா கலந்து கொள்வார். (6-100)


## யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.
## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை- 2010

### சித்தியடைந்தோர்

| | |
|---|---|
| இராசேந்திரம் வதுர்சன் | -162 |
| தெய்வயோகநாதன் சாருஜா | -155 |
| விக்கினேஸ்வரன் ஸோபிகன் | -143 |

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| 01. த.பிரணவன் | - 139 | 08. கி.அஜய் | - 117 |
| 02. இ.கோபிதா | - 138 | 09. தி.சோஸ்ரிபன் | - 116 |
| 03. வ.சர்மியா | -129 | 10. ஜெ.நித்தியா | - 113 |
| 04. த.மாதுரி | - 127 | 11. பா.துலக்ஷி | - 113 |
| 05. இ.கேதா | - 123 | 12. ஜெ.டமிஸ்கா | - 111 |
| 06. பே.ஜயனன் | - 119 | 13. அ.காருக்ஷி | -108 |
| 07. சோ.ஹாமந்தி | - 119 | 14. த.லோஜிகா | -107 |

புலமைப்பரிசில் பரீட்சை 2010இல் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த இம் மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இம் மாணவர்கள் இச் சாதனையை புரிவதற்கு காரணமாக அமைந்த பொறுப்பாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**
யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.,
கைதடி. (சி/571962)


## கட்டாக்காலி கால் நடைகளால் நெல் வயல் சேதம்

தென்மராட்சி, ஒக்.18

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ, தனங் களப்பு ஆகிய பிர தேசங்களில் கட் டாக்காலி கால் நடைகளால் நெல் வயல்கள் சேத மாகப்படுவதாக நெற்செய்கையா ளர்கள் தெரிவித்த னர்.

கூட்டம் கூட்ட மாக வரும் மாடு கள் விளைந்துள்ள நெற்பயிர்களை மேய்வதுடன் வயல் களில் நெற் பயிர் களை மிதித்து சேதமாக்குவதாகவும் தெரிவித்தனர்.

பயிர்ப் பாது காப்பு வேலிகளின் பல இடங்களில் சேதம் ஏற்பட்டிருப் பதால் அவற்றின் ஊடாக மாடுகள் நெல் வயல்களுக் குள் வருவதாகவும் தெரிவித்தனர்.

(த-207)


# Kalaimagal International College

NOTHING IS IMPOSSIBLE

**கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டுக்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணப்பப்படிவங்கள் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.**

## எமது சிறப்பான செயற்பாடுகளாவன



- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்தி லும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை
- ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- ★ கணனி ஆய்வுகூடம்
- ★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம்
- ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த),வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டும் உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புக்களை மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்துகொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 15 முதல் உள்வாங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் உங்கள் பிள்ளைகளுக்கான அனுமதியைப்பெற, விண்ணப்பங்களைப்பெற்று, சமர்ப்பிக்க தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**The Director :**
**Kalaimagal International College**
Church Lane, Kulappiti Junction. Kokuvil.
தொ.பே: 021 3215785, 0778834592.

# கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்




யாழ்.குடாநாட்டிலே பரந்து நீண்ட பிரதேசத்தை உள்ளடக்கியதும் ஆழமான கல்வி மேம்பாடும்,கலை கலாசார விழுமியங்களின் வெளிப்பாடும் மிக்கதோர் முதன்மை மிக்க கிராமமாக அரியாலை திகழ்கிறது. இந்தச் சிறப்புமிக்க கிராமத்தில் பல கல்விமான்களையும், சான்றோர்களையும்,சேவையாளர்களையும் உருவாக்கிய வரலாற்றுப் பெருமை 'கற்றாங்கொழுகுக' என்ற விருது வாக்குடன் கல்விப்பணி புரிந்து வரும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தையே சாரும்.

இன்று பெருவிருட்சமாக வியாபித்து நிற்கும் இப்பாடசாலை இற்றைக்கு 82 வருடங்களுக்கு முன் சிறு மழலையாகப் பிரவசித்தது. 1925ஆம் ஆண்டு இலங்கை சட்ட நிருபண சபையில் உறுப்பினராக இருந்த மாமேதை ஆ.கனகரத்தினம் என்பவர் அரியாலையின் ஓர் உயர்தரப்பாடசாலை நிறுவ வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அது கைகூடவில்லை. மூன்று ஆண்டுகளின் பின்னர் 1928.09.03இல் ஸ்ரான்லி இருமொழிப்பாடசாலை என்ற பெயரில் ஆ.கனகரத்தினத்தால் கல்லூரி நிறுவப்பட்டது.

பிரித்தானிய தேசாதிபதியாக இருந்த சேர் ஹேபேர்ட் ஸ்ரான்லி அவர்களால் கல்லூரி அங்குராப்பணம் செய்யப்பட்டது. முதல் அதிபராக கப்ரின் சி.ரி.அருணாசலம் நியமிக்கப்பட்டார். ஏழு ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். அடுத்த வருடமே நிறுவுநர் மறைந்தது பேரிழப்பாகும்.

கல்லூரியின் முதலாவது பரிசளிப்புவிழா 1930இல் நடைபெற்றபோது வட பகுதிக்கான வித்தியாபதியாக இருந்த டபிள்யூ.ஆர்.உவாற்சன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இரு மொழிப் பாடசாலைக்கு மாணவர் வரவு குறைந்தமையால் 1938இல் முகாமையாளர் சி.அருளம்பலத்தின் ஆலோசனைப்படி ஸ்ரான்லி ஆங்கிலப் பாடசாலையாக மாற்றப்பட்டது. 1941இல் அரசினர் மத்திய வித்தியாலயம் என்ற பெயருடன் எம்.பீதாம்பரம் அதிபராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து மாணவர் தொகை குறைவடைந்ததால் கல்லூரியை மூடிவிட்டு கல்வி அலுவலகம் அமைக்க முயற்சித்த வேளை சி.அருளம்பலம் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் உயர் வகுப்புக்களை மூடி அவர்களை இணைத்துக் கல்லூரியை இயக்கினார். இக்கல்லூரி ஸ்ரான்லி அரசினர் மத்திய மகா வித்தியாயமாக 1944 இல் தரமுயர்த்தப்பட்டது. கல்வி அமைச்சர் சி. டபிள்யூ டபிள்யூ கன்னங்கர வருகை தந்தார். ஆ.சோமசுந்தரம் அதிபரானார். மாணவர் தொகை ஆசிரிய வளம் என்பன பெரும் வளர்ச்சி கண்டது. 1947இல் ஸ்ரான்லி அரசினர் மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டது. முதலாவது தொகுதி மாணவர்கள் எஸ்.எஸ்.சி. தேர்வுக்குத் தோற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்று கல்லூரிக்குப் புகழ் சேர்த்தனர்.

தரம் 6 தொடக்கம் உயர்வகுப்பு வரை ஆண், பெண் என இருபாலாரும் கல்வி கற்றனர். கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் பாடசாலை பிரகாசிக்கத் தொடங்கியது. மாகாணப் போட்டிகளில் ஆண்களுக்கான வெற்றி வீரர் விருதை 1956 இல் இருந்து இக்கல்லூரி தொடர்ந்து ஆறு ஆண்டுகள் தட்டிக்கொண்டது. மனையியல் ஆய்வுகூடம், விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.1959 இல் மேலதிக பாடசாலைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

எனவே மாணவர்கள் பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிக்காட்டினர்.1969 இல் வணிகத்துறை மாணவர்களால் முதலாவது நூலான வணிகஜோதி வெளியிடப்பட்டது. நாவலர் மாநாட்டு ஊர்திப் பவனியில் கல்லூரி ஊர்தி முதலிடம் பெற்றது.

விஞ்ஞான மன்றத்தினால் விஞ்ஞான மலர், மாணவர் மன்றத்தின் மாணவர் குரல், இந்து மாணவர் மன்றத்தால் தோத்திரத்திரட்டு, அறிவியற்கதிர், நாடக மன்றத்தின் திருவேணி சங்கமம், விளையாட்டு மன்றத்தின் விளையாட்டு கதிர், கலைத்தாரகை போன்ற பல வெளியீடுகள் மாணவர்களின் ஆக்கத்திறமையையும் புலமையையும் எடுத்தியம்புகின்றன.

1971ஆம் ஆண்டு ஜே.எஸ்.அரியரத்தினம் அதிபராக நியமனம் பெற்றார். 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட கொழும்பு வாழ் தமிழ் மக்கள் அகதிகளாக கப்பல் மூலம் வந்து இக்கல்லூரியில் தங்க வைக்கப்பட்டதால் சில காலம் கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டன .அதேபோன்று 1990 இலும் 1995 இலும் யுத்த அகதிகளான பல்லாயிரம் பேருக்குத் தஞ்ச மளித்த நிழலாகவும் இக் கல்லூரி செயற்பட்டது.

கல்லூரியின் பல்துறை வளர்ச்சிக்கு வித்திட்ட விஞ்ஞான ஆசிரியர் க.சச்சிதானந்தம், கலைத்துறை ஆசிரியர் நா.க.தர்மலிங்கம் ஆகியோர் 1987 இல் அகால மரணமடைந்தது கல்லூரிக்குப் பேரிழப்பாகும். 1989இல் ஆசிரியர் சச்சிதானந்தம் நினைவாக தாவரவியற்பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று விலாசமான கட்டடத்தொகுதி, விளையாட்டுத்தொகுதி, ஆய்வுகூடவசதிகளுடன் சிறந்த பௌதீக வளங்களை உள்ளடக்கி முதன்மையான வித்தியாலயமாகத் திகழ்கிறது. இதன் வெளிப்பாடாக 1991இல் க.பொ.த. உ/த பரீட்சையில் 4A பெறுபேறு இப்பாடசாலை மாணவனுக்குக் கிடைத்தது.1993 இல் வர்த்தகபிரிவில் 4A சித்தி பெற்று கல்லூரி பெருமையடைந்தது.

இவ்வாறு வளர்ச்சிப்படிகளில் முன்னேறி வரும் யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக புதிய அதிபர் வீ.மாணிக்கம் 1994 இல் பெறுப்பேற்றார். 1995 இல் உயர்தரப்பரீட்சையில் மாணவன் பே.மதிதரன் 4A பெற்று மாவட்டத்தில் முதலாமிடமும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு சான்றாகும்.

''சாண் ஏற முழம் சறுக்கியது போல்'' 1995 ஆம் ஆண்டு காலப்பகுதி பாடசாலைக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. சூரியக்கதிர் யுத்த நடவடிக்கையால் பாடசாலை இடம்பெயர நேரிட்டது. கொடிகாம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் சில பாடசாலைகளுடன் இணைந்து கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டது.

அத்துடன் யுத்த அனர்த்தத்தினால் யாழ்.மாவட்டத்தில் பாரிய சேதத்திற்குள்ளான பாடசாலையாக இது விளங்கியது. அனைத்துக் கட்டடங்களும் விஞ்ஞான ஆய்வுகூடம், கலைக்கூடம், விடுதிகள், சுற்றுமதில்களுடன் ஏனைய பௌதீக வளங்களும் அழிவுற்றன. இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் சேதமதிப்பீடு காணப்பட்டது. பாடசாலை வளாகம் எங்கும் கண்ணிவெடிகளும், பதுங்குகுழிகளுமே காணப்பட்டன.

பாடசாலையைக் கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு புதிய அதிபர் மாணிக்கத்தின் மேல் விழுந்தது. சிறந்த ஆளுமையும் செயற்திறனும் விடாமுயற்சியும் மிக்க அதிபரின் செயற்பாடுகள் பல தரப்பிலிருந்தும் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தன. கல்வித்திணைக்களம், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகளின் பங்களிப்புடனும், நாடாளுமன்ற உறுப்பிர்கள் பல தொண்டு நிறுவனங்களின் பாரிய உதவியாலும் பீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுந்து புதுப்பொலிவுடன் கல்விச்செயற்பாடுகளில் உத்வேகத்துடன் பயணிக்க ஆரம்பித்தது.



இப்பாடசாலையில் நடைபெறும் விழாக்கள், இதழ்வெளியீடுகளில் அரச உயர் பதவிகளில் கடமையாற்றும் பழைய மாணவர்களை அழைத்து கௌரவித்து கல்லூரிக்கும் கல்லூரியால் வாழ்வுபெற்றவர்களுக்கும் பெருமை சேர்ப்பதில் கல்லூரி அக்கறை காட்டி வருகிறது.

மாறிவரும் கணனி உலகியல் மாற்றங்களுக்கு ஈடாக 20 கணனிகளைக் கொண்ட கணனிக் கற்கை மன்றம் நிறுவப்பட்டு 2004ஆம் ஆண்டு யாழ்.அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கல்லூரி கல்வித்துறை, கலைத்துறையில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் தனி முத்திரை பதித்து வருகிறது. இந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி கு.தர்சினி தேசிய மட்டக் குண்டுபோடுதல் போட்டியில் 2004ஆம் ஆண்டு தங்கப்பதக்கம் வென்றார்.

கல்வியமைச்சினால் 2005 ஆம் ஆண்டு நவோதய பாடசாலையாக இது தரமுயர்த்தப்பட்டது. ஸ்தாபகர் கனகரத்தித்தின் சிலை அமைக்கப்பட்டதோடு கல்லூரிப் பெயர் வளைவும் திறந்து வைக்கப்பட்டது. 2006இல் பவள விழாவும் 2010இல் அமுதவிழாவும் கொண்டாடப்பட்டன. இவ்வருடம் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பழையமாணவியும் அரச அதிபருமான திருமதி இமல்டா சுகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டமை நினைவுகூரத்தக்கது.

கற்கை செயற்பாடுகளுக்கான இட நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக இவ்வாண்டு புதிய மாடிக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

வட மாகாணத்தின் முன்னணி நவோதயப் பாடசாலைகளில் ஒன்றாக புதிய உயர் தர விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி பயிற்சி நிலையம், ஆங்கில வள பயிற்சி நிலையம் மற்றும் பல வளக்கல்வி பிரிவுகளையும் உள்ளடக்கி உயர்ந்து நிற்கிறது இக்கல்லூரி.

**எஸ்.யேசுதாஸ்**

நல்ல ஆசானாக வழி காட்டியாக பாடசாலைக் கட்டமைப்பைத் தோற்றுவித்த சேவையாளனாக பதினான்கு ஆண்டுகள் பணிபுரிந்த அதிபர் வி.மாணிக்கம் 21.04.2010இல் உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று யாழ்.கல்வி வலயத்துக்கு சென்றுள்ளார். தற்போது அதிபராக வே.ஞானகாந்தன் நியமனம் பெற்று அதே உத்வேகத்துடன் பணி தொடர்ந்து வருகிறார்.

22 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் இம் மாதம் ஆண்கள் விடுதி திறக்கப்பட்டு மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

யாழ்.நகரின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இப் பாடசாலையில் ஆண்டு 6 முதல் 13 வரை 765 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 57 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். அதே வேளை பதினேழு மாணவர்கள் பல்கலைக்கழக தகுதி பெற்று இருப்பதும் 34மாணவர்கள் சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பாடசாலை வளர்ச்சிக்கு சான்று பகர்வதாக உள்ளது.

இருந்தாலும் இன்னும் நிறைவேறாத பல தேவைகள் இருப்பதாக அதிபர் தெரிவிக்கின்றார். கேட்போர் கூடம், அதிபர் விடுதி, வலைப்பந்து, கூடைப்பந்து தளங்கள் அமைப்பதுடன் சேதமடைந்துள்ள கட்டடங்கள் சில புரனமைக்கப்படவும் பழைய கட்டிடட இடிபாடுகள் அகற்றப்படவும் வேண்டியுள்ளதாகக் கூறினார்.

நீண்ட கல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட இக் கல்விக் கூடம் பலஇடர்கள், இழப்புக்கள், சவால்களைத்தாண்டி இலக்கை நோக்கிப் பயணிக்கின்றது. இன்னும் பல துறைசார் நிபுணர்களை இந்த மண்ணுக்கு இது வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

# கல்விச்சுடர்
## மாவட்ட வலம் - 2010
கல்விப் பொதுத்தராதர (சா/த) மாதிரி வினாத்தாள் -2010



ஆக்கம்: நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்
திரு.எஸ்.சுந்தரலிங்கம்
கொழும்பு றோயல் கல்லூரி
T.P: 071 4500108

G.C.E.(O/L) கொழும்பு வலம்
கணிதம்


பரீட்சையில் வெற்றிபெற என்றும் இணைந்திருங்கள் உதயனுடன்...

## கணிதம் - I பகுதி - A நேரம்: 2 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடைதருக.

01. எவரெஸ்ற் மலையின் உயரம் கடல்மட்டத்திலிருந்து 9,446 மீற்றர் ஆகும். இவ்வுயரத்தை கிட்டிய 100 மீற்றருக்குத்தருக.

02. நிழற்றிய பிரதேசத்தை தொடைக்குறிப்பீட்டில் தருக.





03. lg 1.834=0.2634 எனின், anti lg = 3. 2634 ஐக் காண்க.

04. $x^2$-6x என்னும் இருபடிக் கோவையை நிறைவர்க்கமாக்குவதற்கு தேவையான ஒருமை உறுப்பைக் காண்க.

05. y=2x+5 என்னும் நேர்கோட்டு வரைபு y அச்சை வெட்டும் புள்ளியின் ஆள்கூறு யாது?

06. x இன் பெறுமதி காண்க.




07. காரணியைக் காண்க. $x^3-y^3$

08. பெறுமானத்தைக் காண்க. $\sqrt{50} \times \sqrt{2}$

09. sin $60^0$=105$x^0$ எனின், x இன் பெறுமானம் யாது?


10. ரூபா 200 இன் 200% எவ்வளவு?

11. $10101_{இரண்டு}$ ஐ அடி பத்து எண்ணாக எடுத்துரைக்க.

12. a(b+c)=bd என்பதில் b ஐ எழுவாயாக மாற்றுக.

13. 5 மாணவர்களின் இடைநிறை 35kg ஆகும். 53kg நிறையுடைய இன்னொரு மாணவன் அவர்களுடன் சேர்ந்தால் அக்கூட்டத்தின் இடைநிறையைக் காண்க.


14. $\text{Sin Q} = \frac{4}{\sqrt{91}}$ எனின், Cos Q இன்பெறுமானத்தைக் காண்க.




01


15. காரணி பற்றிய உமது அறிவைப்பயன்படுத்திப் பெறுமானம் காண்க. $319^2-318\times320$

16. முக்கோணி ABC யில் ED//CB, EX//CY எனின், AX:XY=AD:DB எனக்காட்டுக.




17. தீர்க்குக. $3x^2 + 2x = 0$

18. O வட்டத்தின் மையம்:
கோணம் BOC இன் பெறுமதியைக் காண்க.




19. சுருக்குக. $\left(\frac{2}{3}+\frac{1}{7}\right)\div 2\frac{3}{7}$

20. x+2y=4, 3x+4y=6 எனின், x,y இன் பெறுமதியைக் காணாமல் x+y இன் பெறுமதியைக் காண்க.

21. புள்ளி (0,-2) இனூடாகச் செல்லும் நேர்கோடு y=3x+5 இற்குச் சமாந்தரமா னதுமான நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.


22. ஒரு புள்ளி A யிலிருந்து பார்க்கும்போது ஒரு புள்ளி B யின் திசைகோள் $050^0$ புள்ளி B யிலிருந்து பார்க்கும்போது புள்ளி A யின் திசைகோள் யாது?

23. ஒரு கூட்டல் விருத்தியில் 3 ஆம், 5 ஆம் உறுப்புக்கள் முறையே 17, 23 ஆகும். அவ்வி ருத்தியில் 4 ஆம், 6 ஆம் உறுப்புக்களைக் காண்க.


24. -2, 1/3 என்பவற்றை மூலகங்களுடைய இருபடிச்சமன்பாட்டை $ax^2+bx+c=0$ என்ற வடிவில் தருக.

25. ஒரு குறிப்பிட்ட உணவானது 6 மனிதர்களுக்கு 12 நாட்களுக்குப் போதுமானதாகும். மேலும் 2 மனிதர்கள் இணைந்து கொண்டால் அவ்வுணவு எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்?

26. தரப்பட்ட நாற்பக்கல் எவ்வகையானது? காரணம் தருக.





27. இயல்பொத்த முக்கோணிகளைப் பயன்படுத்தி அல்லது வேறுவிதமாக AB யின் நீளத்தைக் காண்க.




02

28. இரு சதுரமுகிகளின் விளிம்புகளின் நீளங்களுக்கிடையே உள்ள விகிதம் 2:3 ஆகும். இரு சதுரமுகிகளினதும் கனவளவுகளுக்கிடையே உள்ள விகிதம் யாது?

29. உருவில் AB,CD எனும் நேர்கோடுகள் O இல் இடை வெட்டுகின்றன. AB, CD எனும் நேர்கோடுகளிலிருந்து சமதூரத்தில் இருப்ப னவும் புள்ளி O வில் இருந்து 5km தூரத்தில் இருப்பனவுமான புள்ளிகளைப்பரும்படி வரிப்படத்தின் மூலம் காட்டுக. அத்தகைய புள்ளிகள் எத்தனை உண்டு?




30. A,B என்னும் இரு குழுக்களில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள விகிதம் 2:1 ஆகும். குழு A இலிருந்து மாணவன் ஒருவன் குழு B யிற்குச் செல்லும் போது அவ்விகிதம் 3:2 ஆக அமைகின்றது. இருகுழுக்களிலும் இருக்கும் மொத்த மாணவர் களின் எண்ணிக்கை யாது?

## கணிதம் - I பகுதி - B


01. A,B,C,D எனும் நால்வர் தேர்தல் ஒன்றின் போட்டி இட்டனர். A என்பவர் மொத்த வாக்குகளில் 3/16 பங்கினைப் பெற்றனர். B இற்கும் C இற்கும் இடையேயான வித்தியாசம் மொத்த வாக்குகளின் வித்தியாசம் மொத்த வாக்குகளில் 1/2 பங்காகும். D என்பவர் மொத்த வாக்குகளில் 1/16 பங்கைப் பெற்றனர். C என்பவர் D ஐப் போல 2 மடங்கு வாக்குகளைப் பெற்றார். B என்பவர் C என்பவரை விட 5,680 வாக்குகள் கூடுதலாகப் பெற்றனர்.
    1) C பெற்ற வாக்குகள் மொத்த வாக்குகளில் எத்தனை பங்கு?
    2) A பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை யாது?
    3) B பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை யாது?
    4) தேர்தலில் வெற்றி பெற்றவர் யார்?

02. 35 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் தரப்பட்டுள்ளன.
45, 69, 84, 17, 38, 45, 30, 12, 47, 53, 76, 54, 75, 22, 54, 25, 27, 36
66, 65, 18, 89, 66, 65, 55, 61, 54, 51, 33, 39, 19, 54, 72, 70, 74
    1) இப்பரம்பலின் மிகக்குறைந்த புள்ளி யாது?
    2) மிகக்கூடிய புள்ளி யாது?
    3) புள்ளிகளைத் தண்டு-இலை வரைபில் காட்டுக.
    4) வரைபிலிருந்து $Q_1$, $Q_2$, $Q_3$ என்பவற்றைக் காண்க.
    5) இவற்றை பெட்டி-வீசை வரைபில் காட்டுக.

| தண்டு | இலை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

03. பெருநாள் சல்வார் ஒன்று 15% இலாபத்தில் ரூபா 920 ஆக விலை குறித்து உடன் காசுக்கு 5% கழிவில் விற்கப்படுகின்றது.
    1) சல்வார் ஒன்றை கடைக்காரன் எவ்விலைக்கு வாங்கியிருப்பான்?
    2) கழிவுத்தொகையைக் காண்க?
    3) விற்ற விலை என்ன?
    4) சல்வார் விற்பனையில் இலாபச் சதவீதத்தைக் காண்க.

04. நகரமொன்றின் வீதியில் இரு மருங்கிலும் அமைந் துள்ள நீர்க்கான் ஒன்றின் வரிப்படம் மேலே தரப் பட்டுள்ளது. அதன் குறுக்குவெட்டு முகமானது ஒரு செவ்வகத்தையும் அரை வட்டத்தையும் கொண்ட தாகும். கானின் பக்க அளவுகள் உருவில் தரப்பட் டுள்ளன.





    1) நீர்க்கானின் குறுக்குவெட்டுப் பரப்பளவைக் காண்க.
    2) வீதியமைந்துள்ள தரை மட்டத்தோடு கான் அமைக்கப்பட்டுள்ளதெனின் இக்கானை அமைப்பதற்கு எத்தனை கன மீற்றர் மண், வெட்டி அகற்றப்படல் வேண்டும்?
    3) குறிப்பிட்ட மழை நாளொன்றில் கானிலிருந்து நீர் பாய்வது தடைப்பட்டு கான் முற்றாக நீரினால் நிரம்பியிருந்தது. நகரசபையானது ஒரு மோட்டார் மூலம் நீரை வெளியகற்றியது. மோட்டார் பம்பியினது நிமிடத்திற்கு 25l நீரை வெளியகற்றியது எனின், முழுநீரையும் வெளியகற்றுவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

05. கண்காட்சியைப் பார்வையிட வந்திருந்த 300 பேரில் விஞ்ஞானப்பிரிவு, கணிதப்பிரிவு,

03

தொழில்நுட்பப்பிரிவு ஆகியவற்றைப் பார்வையிட்ட விவரம் அருகிலுள்ள வென்வரிப் படத்தில் காட்டப்பட்டுள்ளது. பின்வரும் வினாக்களுக்கு விடைகளை வென்வரிப்படத் தில் காண்க.




    1) விஞ்ஞானப் பிரிவைப் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    2) கணிதப்பிரிவைப் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    3) தொழில்நுட்பப் பிரிவைப் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    4) மூன்று பிரிவுகளையும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    5) இரண்டு பிரிவுகளை மட்டும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    6) ஆகக்குறைந்தது இரு பிரிவுகளையாவது பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    7) ஒரு பிரிவை மட்டும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?
    8) மூன்று பிரிவுகளில் எதையுமே பார்வையிடாதோர் எத்தனை பேர்?
    9) கணிதப்பிரிவையும், விஞ்ஞானப்பிரிவையும் மட்டும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?

## கணிதம் - II பகுதி - A நேரம்: 2.30 மணித்தியாலங்கள்

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. தனியார் வங்கி ஒன்றிலிருந்து 18% எளிய வட்டிக்கு ரூபா 150,000 ஐக் கடனாகப் பெற்று அப்பணத்தை வட்டிக்கு வழங்கும் ஒருவர் அப்பணத்தை ஒரு மாதத்திற்கு 3% வட்டிக்கு வழங்குகின்றார்.
    1) அவர் ஒரு ஆண்டிற்குத் தனியார் வங்கிக்குக் கெடுக்க வேண்டிய வட்டி யாது?
    2) ஒரு மாதத்தில் அவர் பணத்தை வட்டிக்கு வழங்கும் போது அவருக்குக் கிடைக்கும் வட்டி யாது?
    3) வங்கிக்கு வழங்கும் வட்டியை பெறுவதற்கு அவருக்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
    4) 3 மாதங்களில் வங்கிக்கு வழங்கும் வட்டியை பெறுவதற்கு அவர் கடனை வழங்க வேண்டிய வட்டி வீதத்தைக் காண்க.


02. சார்பு $y=(x-1)^2-2$ இன் வரைபினை வரைக.
    1) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 4 |
| y | 7 | | -1 | -2 | 2 | 7 |

    2) பத்து சிறு பிரிவுகளை ஒரு அலகெனக் கொண்டு வரைபை வரைக.
    3) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத் தருக.
    4) $x^2-2x-1=0$ சமன்பாட்டின் மூலங்களைத் தருக.
    5) √3 இன் பெறுமதியைக் காண வரைய வேண்டிய நேர் கோட்டின் சமன்பாடு யாது?
    6) $y=(x-1)^2+k$ இன் வரைபு புள்ளி (0,0) இனூடாகச் செல்லுமெனின் மாதிரி k இன் பெறுமானத்தைக் காண்க.

03. 1) தீர்க்குக : $\frac{x-5}{5} - \frac{3x-7}{2} = \frac{-1}{10}$

    2) நிழற்றிய பகுதியின் பரப்பு 462$cm^2$ எனின், r இன் பெறுமதியைக் காண்க.




(19 ஆம் பக்கம் பார்க்க)

04

அன்பு மாணவர்களே: உங்களுக்கு எழும் விளக்கமின்மை, சந்தேகங்களை குறித்த ஆசிரியரின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்: எஸ்.சுந்தரலிங்கம் தொலைபேசி இலக்கம்: 071500108)

# இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு; தமிழர் படுகொலைக்கு அளித்த பரிசு

## இந்தியக் கம்யூனிஸ்ட் பாண்டியன் சாடல்

ஒசூர், ஒக். 18

கொமன்வெல்த் போட்டிகளின் நிறைவு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைத்தது, அவர் இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்ததற்கு அளித்த பரிசு போல உள்ளது - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க ஒசூர் வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. மணல் உள்ளிட்ட கனிமங்கள் வருவாய்த் துறையினரின் உதவியோடு வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றன. இதைக் காவல்துறையும் கண்டு கொள்வதில்லை. கோயில் நிலங்களும், அரச புறம்போக்கு நிலங்களும் அதிகளவில் ஆக்கிரமிக்கப் படுகின்றன.

நெய்வேலியில் 20 ஆண்டுகளாக ஒப்பந்தத் தொழிலாளர்களாக உள்ள தாற்காலிகத் தொழிலாளர்களைப் பணிநிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

இதேவேளைசர்வதேச போர்க் குற்றவாளி எனக் குற்றம்சாட்டப்படும் இலங்கை ஜனாதிபதியை அழைத்து இந்திய அரசு கௌரம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.



ஜெயலலிதா தலைமையில் மதுரையில் இன்று அ.தி.மு.க வின் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. அதில் பங்குபற்ற வந்துள்ள தொண்டரை படத்தில் காணலாம்.

# கொமன்வெல்த் போட்டி தொடர்பான விசாரணையைச் சந்திக்கத் தயார்

## கல்மாதி தகவல்

புதுதில்லி, ஒக். 18

கொமன்வெல்த் போட்டி ஏற்பாடுகளில் நடந்திருப்பதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான விசாரணையைச் சந்திக்கத் தயார் என சுரேஷ் கல்மாதி கூறியிருக்கிறார்.

கொமன்வெல்த் போட்டிகள் முடிவடைந்துவிட்ட நிலையில் போட்டி ஏற்பாடுகளில் நடந்திருப்பதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பாக விசாரிப்பதற்காக உயர்நிலைக் குழுவை பிரதமர் மன்மோகன் சிங் அமைத்திருக்கிறார்.

இந்த நிலையில் கொமன்வெல்த் போட்டி அமைப்புக் குழுவின் தலைவர் சுரேஷ் கல்மாதி இது தொடர்பாக நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கொமன்வெல்த் போட்டிகளின் பல்வேறு அம்சங்கள் பற்றி விசாரிப்பதற்காக பிரதமர் குழு அமைத்திருப்பதை வரவேற்கிறேன். இந்தக் குழுவுக்கு காமன்வெல்த் போட்டிகளின் அமைப்புக் குழு முழு ஒத்துழைப்பு வழங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொமன்வெல்த் போட்டிகள் சிறப்பாக நடப்பதற்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்திருக்கும் கல்மாதி, விளையாட்டு வீரர்கள் மற்றும் அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளைப் புகழ்ந்திருப்பதாகவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் அமைத்திருக்கும் விசாரணைக் குழுவுக்கு முன்னாள் தலைமைத் தணிக்கை அதிகாரி வி.கே. சுங்லு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தக் குழு மூன்று மாதங்களில் விசாரணை அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளது. (ற)

# அயோத்தி தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முஸ்லிம் சட்ட வாரியம் முடிவு

புதுடில்லி, ஒக்.18

அயோத்தி நில வழக்கில் அலா காபாத் உயர்நீதிமன்றம் வழங் கிய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியம் முடிவு செய்துள்ளது.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தை மூன்றாகப் பிரித்து இராமர் கோயில் நிர்வாகம், நிர்மோகி அகாரா, பாபர் மசூதி நிர்வாகம் ஆகிவற்றுக்கு வழங்க வேண்டும் என அலகாபாத் உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது. சர்ச்சைக் குரிய இடத்தில் கோயில் இருந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தீர்ப்பில் கூறப்பட்டது.

இந்த நிலையில் அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியத்தின் செயற்குழுக் கூட்டம் லக்னோவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு வாரியத்தின் தலைவர் மௌலானா ரபே ஹாஸ்னி நட்வி தலைமை வகித்தார். அயோத்தி நில வழக்கில் அலகாபாத் நீதிமன்றம் வழங்கி தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிடுவது தொடர்பான தீர்மானம் இந்தக் கூட் டத்தில் கொண்டுவரப்பட்டது.

அலகாபாத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பனால் ஏற்பட்டி ருக்கும் தடைகளை அகற்றுவதற்காக உச்ச நீதிமன்றத்தில் முறையிடுவது இந்திய முஸ்லிம்களின் உரிமை என இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவு தெரிவித்தகர் எனவும், அதனால் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் வாரியத்தின் துணைப் பொதுச் செயலாளர் அப்துல் ரஹீம் குரேஷி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரச்சினையை பேச்சுமூலம் சுமுகமாகத் தீர்ப்பதற்கு முகமது ஹாசிம் அன்சாரி மேற்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு இந்தக் கூட்டத்தில் வரவேற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)

**இந்தியச் செய்திகள்**

---

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

3) ஒரு சதுரமுகியின் ஒருபக்க நீளம் (a+1)cm எனின், கனவளவைக் காண்க.


04. 1) 4X + 3Y = 29
3X + 4Y = 27 எனின், X+Y,X-Yஎன்பவற்றின் பெறுமதியைக் காண்க.
இதிலிருந்து X.Y ஐ காண்க.

2) $A=\begin{pmatrix} 2 & 3 & 1 \\ -1 & 0 & -2 \end{pmatrix}$

1) தாயம் A இன் வரிசை யாது?

2) $2A+B \begin{pmatrix} 3 & 3 & 2 \\ 2 & 3 & -9 \end{pmatrix}$ எனின் தாயம் B ஐ காண்க.

05. 1) சமதளதரை ஒன்றில் உள்ள இரு நிலைக்குத்துக் கம்பங்கள் AB,CD ஆகும்.



B யிலிருந்து D யின் ஏற்றக் கோணம் 43° ஆகும். B யிருந்து C இன் இறக்கக்கோணம் 27° ஆகும். AC = 10m எனின்
1)தரப்பட்ட தரவுகளை அதிற் குறிக்க.
2)கம்பம் AB யின் நீளத்தை 1ம் தசமதானத்திற்கு காண்க.
3)கம்பம் CD யின் நீளத்தை 1ம் தசமதானத்திற்கு காண்க.
4)A யிலிருந்து D யின் ஏற்றக் கோணத்தை காண்க.

2) O எனபவர் P என்பவரை 060° திசை கோளிலும் 70km தூரத்தில் காண்கிறார். அவர் Q என்பவரை 300° திசைகோளில் அவதானிக்கிறார். PQ இற்கு இடைப்பட்ட தூரம் 100km கோணம் OQP ஐ காண்க.

06. 2007 ஆம் ஆண்டு விடுதி ஒன்றிற்கு நாளொன்றுக்கு வந்த சுற்றுலா பயணிகளின் இடை 75 ஆகும். அவ்விடுதிக்கு 2008 ஆம் ஆண்டில் வரும் சுற்றுலா பயணிகளின் தொகை 2007ஆம் ஆண்டை விட அதிகமாகும் என கணிப்பிடப்பட்டது. 2008 ஆம் ஆண்டு குறிப்பிட்ட ஒரு மாதத்தில் வந்த பயணிகள் பற்றிய விவரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்புட்டுள்ளது.

| பயணிகள் | 61-65 | 66-70 | 71-75 | 76-80 | 81-85 | 86-90 | 91-95 |
|---|---|---|---|---|---|---|---|
| நாட்கள் | 2 | 4 | 8 | 5 | 6 | 3 | 2 |

1) 1. மேலுள்ள தரவுகளுக்கு அமைய ஆகார வகுப்பினை எழுதுக.
2. இடைய வகுப்பை காண்க.
3. 76-80 என்ற வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு நாளொன்றுக்கு வந்த பயணிகளின் இடை எண்ணிக்கையைக் காண்க. விடையை முழு எண்ணாகத் தருக.
4. 2008 ஆம் ஆண்டு உமக்கு கிடைத்த இடையின் பெறுமானத்தை கொண்டு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டு வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கையை விட அதிகமானதா என்பதை காரணம் காட்டி விளக்குக.
5. 2008 ஆம் ஆண்டு குறைந்த பட்சமாக 2260 பேர் சுற்றுலாப்பயணிகளாக வருகை தந்தனா எனும் கூற்றுக்கு நீர் உடன்படுகிறீரா? காரணம் தந்து விளக்குக.

## கணிதம் - II பகுதி - B

ஐந்து வினாவிற்கு மாத்திரம் விடை தருக.

01. 1) கூட்டல் விருத்தி ஒன்றின் n ஆவது உறுப்பு 17- 5n ஆகும்.
1)1ம் உறுப்பு பொதுவிகிதம்.
2)(-58) எத்தனையாம் உறுப்பு
3)முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?
4)(-710) விருத்தியின் எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை


2) 1)பெருக்கல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 4உம் 4வது உறுப்பு 108 உம் ஆயின் பெருக்கல் விருத்தியை காண்க.
2)5 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.



02. 1) AB = 9cm BAC = 90 AC = 6.5 ஆகவுள்ள ABC ஐ அமைக்க.
2)பக்கம் AB ஐ A இல் தொடும் வட்டத்தின் மையத்தின் ஒழுக்கு யாது?
3)பக்கம் AB,BC ஐ தொடும் வட்டத்தின் ஒழுக்கை வரைக.
4)பக்கம் ABஐ Aஇலும் பக்கம் BC ஐயும் தொடும் வட்டத்தை வரைக.
5) ஆரையை அளந்து எழுதுக.

03. குடிநீர் வினியோகத்திற்காக கூம்பு வடிவான தாங்கி ஒன்றின் உள்ளாரை 3.5m உம் உயரம் 3m உம் ஆகும்.
1) இத்தாங்கி கொள்ளக்கூடிய நீரின் கனவளவை லீற்றரில் தருக.
2) இத்தாங்கியை நிரப்பும் குழாயின் ஆரை 7cm ஆகும். இக்குழாயிலிருந்து 1 செக்கனில் 1m நீர் வெளியேறுகின்றது. 1sec இல் வெளியேறும் நீரின் கனவளவை லீற்றரில் தருக.
3) இக்குழாய் தாங்கியை நிரப்ப எடுக்கும் காலத்தைக் காண்க.
4) இத்தாங்கியின் ஆரை உயரம் கொண்ட உருளை வடிவத் தாங்கியின் கொள்ளளவை லீற்றரில் தருக.


04. 1) கோழிப்பண்ணை ஒன்றில் 500 கோழிகள் வளர்க்கப்படுகின்றன அவற்றுள் 300 பேட்டு கோழிகளாகும். வெள்ளை நிறமான கோழிகளின் எண்ணிக்கை 225 ஆகும். வெள்ளை நிறமான சேவல்களின் எண்ணிக்கை 150 ஆகும்.
H= பேட்டுக்கோழி
W= வெள்ளை நிறமான கோழிகள்



1. வென்வரிப்படத்தை உமது விடைதாளில் பிரதிசெய்து பூரணப்படுத்துக.
2. வெள்ளை பேட்டுகோழிகளின் எண்ணிக்கை எவ்வளவு?


2) வகுப்பு ஒன்றில் இரு மாணவர்கள் மாணவத்தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட உள்ளனர் மாணவன் A தெரிவு செய்யப்படும் நிகழ்தகவு 1/3 ஆகவும். மாணவன் B தெரிவுசெய்யப்படும் நிகழதகவு 2/5 ஆகவும் உள்ளது.
1. இத்தகவலை மரவரிப்படம் ஒன்றில் காட்டுக
2. A மட்டும் தெரிவு செய்யப்படுவதற்கான நிகழ்தகவு யாது?
3. A.B இருவரும் தெரிவுசெய்யப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

05. உருவில் ABCD இணைகரம் ஆகும். CD இன் நடுப்புள்ளி E ஆகும். நீட்டப்பட்ட AD,DE என்பன F இல் சந்திக்கின்றன.



1. முக்கோணிகள் BCE, DEF என்பன் ஒருங்கிசையும் என நிறுவுக.
2. BCFD இணைகரம் என நிறுவுக.
3. இணைகரங்கள் ABCD, BCFD என்பன பரப்பளவில் சமன் என்பதற்கான காரணங்களை எழுதுக.
4. முக்கோணி DEF இன் பரப்பளவு 6CM எனின் இணைகரம் ABCD இன் பரப்பளவு யாது?

06. வட்ட நாற்பக்கள் ஒன்நின் எதிர் கோணங்கள்
1) மிகை நிரப்பி என நிறுவுக
2) ABCDEFG கள் ஒழுங்கான ஏழுகோணி. AC,AD ஐ BG x,y இல் வெட்டுகின்றன. கோணம் CDy=2x என்க.
பின்வருவனவற்றை x இல் காண்க.
1. கோணம் ABC
2. கோணம் BAC
3. கோணம் BCA
4. கோணம் AGB
5. கோணம் ABG
6. கோணம் AXG
7. கோணம் CxyD ஒரு வட்ட நாற்பக்கல் என நிறுவுக.





உதயன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும், பல்கலைக்கழகப் பளு தூக்கும் அணியும் இணைந்து நடத்திய பளு தூக்கும் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

2010ஆம் ஆண்டுக்கான சிறந்த பலம் கொண்ட வீரராகவும், சிறந்த பாரம்தூக்கும் வீரராகவும் தெரிவான யாழ்.பல்கலைக்கழகப் பளு தூக்கும் அணியின் தலைவர் எஸ். பிரசாத் விருந்தினர்களிடமிருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதை முதல் படத்திலும், சிறந்த கழகமாகத் தெரிவான ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் பொ. மகாதேவா, 2010ஆம் ஆண்டின் சிறந்த வலுக்கொண்ட வீரனாகத் தெரிவான இராஜரட்ணம் எட்வின் கிங்சாந் ஆகியோருக்கு உதயன் முகாமையாளர் தி.மகேஸ் வெற்றிக் கிண்ணங்களை வழங்குவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# பல்கலைக்கழகங்களில் இறுக்கமான நிதி நடைமுறை; அதனால் அனுசரணையாளர்களை நாடவேண்டிய நிலை

## பளுதூக்கும் போட்டிப் பரிசளிப்பில் பணிப்பாளர் கணேசநாதன்

யாழ்ப்பாணம், ஒக்.18

பல்கலைக்கழகங்களில் போதிய நிதிவசதி உண்டு. ஆனால் அதனைத் தேவைக்குப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளும், இறுக்கங்களும் அரச நிதிப் பிரமாணங்களில் கீழ் காணப்படுகின்றன. இதனால் அனுசரணையாளர்களை நாடவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் க.கணேசநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

உதயன் நிறுவத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பளு தூக்கும் அணியும் இணைந்து நடத்திய பளு தூக்கும் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு விரிவுரையாளர் இளம்பிறையன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரித்தவை வருமாறு:-

விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்கும் முகமாகவே அனைத்துப் போட்டிகளும் யாழ்ப் பாணப் பகலைக்கழக விளை யாட்டுத் துறையினால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. உதயன் நிறுவனம் ஆரம்பித்து இன்று 25 வருடத்தை கொண்டாடும் நிலையில் அன்று முதல் இன்று வரை விளையாட்டுத் துறைக்கு அது காத்திரமான பங் களிப்பைச் செய்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் உதயன் நிறுவனம் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்புகளை வழங்கியதுடன், விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கு கொண்டது.பல போட்டிகள் உருவாக்கப்படவேண்டும் . அறிமுகம் செய்யப்பட வேண்டும். கடந்த காலத்தில் பல்கலைக்கழக அணி தென்பகுதிக்கு செல்வதில் பல சிரமங்கள், இன்னல்களுக்கு உள்ளாகியது.

தென்பகுதிக்கு சென்றதன் மூலம் தான் நாம் விளையாட்டு உபகரணங்களைப் பற்றியும் தொழில்நுட்ப அறிவைப் பற்றியும் அறியக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் நாங்களும் பலத்த சிரமத்தின் மத்தியில் காலம் தாழ்த்தியேனும் அவற்றைப் பெறக்கூடியதாக இருந்தது.

பல்கலைக்கழகத்தில் நிதி இருந்தாலும் அதனைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள், கால தாமதங்களைக் கருத்தில் கொண்டே நாம் விளையாட்டுக்களுக்காக அனுசரணையாளர்களை நாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

தென்னிலங்கையில் நடைபெறும் போட்டிகளில் நாமும் கலந்துகொள்ள வேண்டும் என அங்குள்ளவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அழைப்புகளை அனுப்புகின்றார்கள். இத்தகைய அழைப்புகளை ஏற்று போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் கேரளா, இலங்கையில் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் வாழ்பவர்கள் பளு தூக்கும் போட்டிகளில் சிறந்தவர்களாக விளங்க முடியும் என விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் பெண்களும் பளு தூக்கும் போடிகளில் ஈடுபட முடியும். கலாசார விழுமியங்கள் காரணமாக எமது பகுதியில் பெண்கள் இத்தகைய செயற்பாடுகளில்ஈடுபட முன் வருவதில்லை என்றார்.

இதில் பிரதம விருந்தினராக உதயன் முகாமையாளர் எஸ். மகேஸ் கலந்துகொண்டு உரையாற்றினார். (த- 86)

## துரையப்பா விளையாட்டரங்கில் தசைநார் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.மாநகர சபை துரையப்பா விளையாட்டரங்கில் தசைநார் பயிற்சி நிலையம் ஒன் றைக் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பித்து வைத்துள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் இந்தப் பயிற்சி நிலையத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மாநகர சபை அதிகாரிகள் விளையாட்டு அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற முடியும் எனத் தெரிவிக்கபபட்டது. (த-26)




## தேசியப் போட்டிகளில் பங்குகொள்ளும் யாழ். வீரர்களுக்கான பயிற்சி முகாம்

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வீரர்கள், வீராங்கனைகளுக்கு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பயிற்சி முகாம் ஒன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று நாள்கள் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில் தேசிய மட்டத்தில் கரப்பந்தாட்டம், கராத்தே மெய்வன்மை, கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கான பயிற்சிகள் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட தேசிய பயிற்றுவிப்பாளர்களினால் வழங்கப்பட்டன.

எனினும் இந்தப் பயிற்சி முகாமில் எதிர்பார்க்கப்பட்டளவு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்ட வீரர்கள், வீராங்கனைகளுக்கு கட்டம் கட்டமாக இந்தப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-86)

### கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி:

# அரையிறுதிக்குள் நுழைந்தது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 18

"உதயன்" நாளிதழின் வெள்ளி விழாவையொட்டி நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஒன்றில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

"உதயனின்" வெள்ளி விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமாலை இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணிமோதியது.

ஆட்டம் தொடங்கியபோது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் ஆட்டத்தை வேகப்படுத்தி புள்ளிகளைப் பெற்றனர்.

இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணியினர் தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் எதிர் அணியினருடன் விறுவிறுப்பாக விளையாடி புள்ளிகளைப் பெற்றனர்.

எனினும் ஆட்ட முடிவில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 80 : 24 என்ற புள்ளி அடிப்படையில் சென்றலைட்ஸ் புளூஸ்விளையாட்டுக்கழகஅணியை வெற்றிகொண்டது. (ஒ-23)

## கூடைப்பந்தாட்டம்; இன்றைய ஆட்டங்கள்

"உதயன்" நாளிதழின் வெள்ளி விழாவையொட்டி நடைபெற்று வரும் இருபாலாருக்கும் இடையிலான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்களுக்கான கால் இறுதி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளன.

இதில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு :-

பி.ப. 3 மணிக்கு பற்றிசியன்ஸ் வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க-

பி.ப. 4 மணிக்கு கே.ஸி.ஸி.ஸி. சிவப்பு வி.க. எதிர் கே.ஸி.ஸி.ஸி வெள்ளை வி.க. (ஒ-23)



சென்றலைட்ஸ் புளூஸ் வி.க. அணிக்கும் ஜொனியன்ஸ் வி.க. அணிக்கும் இடையிலான ஆட்டத்தின் போது ...

# டோனியின் மனைவி படங்களால் சர்ச்சை





மும்பை, ஒக். 18

இந்திய அணித் தலைவர் டோனியின் மனைவி சிகரெட் புகைப்பது, கவர்ச்சியாக இருக்கும் படங்கள் பல இணையத் தளங்களில் வெளியாகியுள்ளமையால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான டோனி, சாக்ஷி சிங்ராவத்தை கடந்த ஜூலை மாதம் திருமணம் முடித்தார்.

23 வயதான சாக்ஷி. ஹோட்டல் முகாமைத்துவம் படித்தவர். பின்னர், கல்கத்தாவில் உள்ள தாஜ் ஹோட்டலில் சிறிது காலம் பணியாற்றினார். திருமணம் முடிந்த பின்னர், தன்னுடன் பணியாற்றிய நண்பர்களுக்காக தாஜ் ஹோட்டலில் விருந்து கொடுத்துள்ளார். இதற்காக அங்குள்ள 'டிஸ்கோ' அரங்கை ஏற்பாடு செய்திருந்தார்.

தற்போது, மும்பையிலிருந்து வெளியாகும் இணையத்தளம் ஒன்றில் வெளியாகியுள்ள படங்கள், கல்லூரி நாள்களிலேயே சாக்ஷி பல விருந்துகளில் (பார்ட்டி) கலந்து கொண்டு உற்சாகமாக இருந்துள்ளார் என்பதைச் சுட்டிநிற்கின்றன. ஒரு படத் தில், அவர் தமது தோழியுடன் சேர்ந்து சிகரெட் புகைக்கிறார். மற்றொரு படத்தில் நண்பருடன் காணப்படுகிறார். படத்தில் இருப்பவர் பார்ப்பதற்கு சாக்ஷி போலவே இருக்கிறார். இந்தப் படங்களை ஒரு வாசகரே வழங்கினார் என அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. இந்தப் படங்கள் உண்மையான வைதானா என்பது பற்றி டோனி தரப்பிலிருந்து கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆட்டம் அடை மழையின் காரணமாக நேற்றுக் கைவிடப்பட்டது



இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே கொச்சியில் நேற்று நடைபெறவிருந்த முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி, இடைவிடாத அடை மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது.

ஏற்கனவே நடந்து முடிந்த 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட, 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் மோதவிருந்தன.

எனினும், மைதானப் பகுதியில் இடைவிடாது பெய்த மழை காரணமாக, ஒரு பந்து கூட வீசப்படாமல் ஆட்டம் கைவிடப்பட்டது. இந்தத் தொடரில் இன்னும் இரண்டு போட்டிகள் மட்டுமே உள்ளன. இரண்டாவது போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி விசாகப்பட்டிணத்தில் நடைபெறவுள்ளது.




# நேற்றைய ஆட்டத்திலும் நியூஸிலாந்து தோல்வி!

பங்களாதேஷ் அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியிலும் நியூஸிலாந்து பரிதாபமாகத் தோல்வியடைந்தது.

5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் நியூஸிலாந்து-பங்களாதேஷ் அணிகள் மோதி வருகின்றன. ஏற்கனவே நடந்து முடிந்த 3 போட்டிகளிலும் பங்களதேஷ் அணி வெற்றிபெற்று, தொடரையும் கைப்பற்றியது.

இந்நிலையில் நான்காவது போட்டி நேற்று நடந்தது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 174 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாகத் துடுப்பாட்டத்தில் ஆகக்கூடுதலாக,சஹிப் அல் ஹசன் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பின்னர், 175 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, கடைசிவரை போராடியும் வெற்றிபெறமுடியவில்லை. இறுதியில் 49.3 ஓவர்களில் 171 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதேவேளை, பங்களாதேஷின் வெற்றிப்பயணம் தொடர்கிறது.



# இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்திருக்கும்!



## கர்பஜன் கருத்து

புதுடில்லி, ஒக். 18

"டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் முதலாவது இடத்தை இந்திய அணி, நீண்ட நாள்கள் தக்கவைத்திருக்கும்."

- இவ்வாறு ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய-ஆஸ்திரேலிய அணிகள் மோதிய 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைத் (130 புள்ளிகள்) தக்க வைத்துக்கொண்டது.

இது குறித்துக் கருத்துக் கூறும்போதே இந்திய அணியின் சுழற் பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2008ஆம் ஆண்டு முதல் இந்திய அணி, டெஸ்ட் தொடர்களில் அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்து வருகிறது. சமீபத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணி வெற்றிபெற்றுள்ளது. இது மகிழ்ச்சியான விடயம். இந்தத் தொடரில், 11 விக்கெட்டுகளை நான் வீழ்த்தியுள்ளேன். எனது செயற்பாடுகள் முழுத் திருப்தியளித்துள்ளன.

இந்திய அணி, தற்போது டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இந்த நிலை, நீண்ட நாள்களுக்குத் தொடரும் என எதிர்பார்க்கிறேன்.

அணியில் சச்சின், டிராவிட், லக்ஷ்மன் உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் இடம்பெற்றிருப்பது கூடுதல் பலம். இவர்கள்தவிர, ரெய்னா, முரளி விஜய், புஜாரா உள்ளிட்ட இளம் வீரர்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். அணியின் களத்தடுப்பு, பந்துவீச்சு என்பனவும் பாராட்டும்படியாக உள்ளன.

"இந்திய அணி அடுத்ததாக நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும், சிறப்பாகச் செயற்பட்டு வெற்றியை எட்டும்." - இவ்வாறு ஹர்பஜன் தெரிவித்தார்.

# ரோஜர் பெடரரை வீழ்த்தி சம்பியனானார் முர்ரே

ஷங்காயில் நடைபெற்று வந்த டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில், சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரரைத் தோற்கடித்து, பிரிட்டனின் அன்டி முர்ரே சம்பியன் பட்டத்தை வென்றார். நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், 6-3, 6-2 என்ற நேர் செற் கணக்கில் பெடரரை வீழ்த்தி முர்ரே வெற்றிபெற்றார். முர்ரேக்கு இது 16ஆவது ஏ.டி.பி. சம்பியன் பட்டமாகும். இந்த ஆண்டில் அவர் வெல்லும் இரண்டாவது சம்பியன் பட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. பெடரர் இன்று ஆரம்பம் முதலே தவறுகளை நிறையச் செய்தார். முர்ரேயை விடவும் முதல் சேர்வ் வெற்றிகளை இவர் குறைவாகவே பெற்றார். 6 முறை முர்ரேயை பரேக் செய்யும் வாய்ப்புகள் கிடைத்தும் பல சமயம் முர்ரேயின் அபார ஷாட்களினாலும் சில சமயம் தனது சொந்தத் தவறுகளினால் நெட்டில் அடித்தும் வாய்ப்புகளைக் கோட்டை விட்டார்.

# ஸிம்பாப்வே தோல்வி

புளூம்போன்டைன், ஒக்.18

ஆம்லா, இங்ராம் சதம் அடித்து அசத்த, ஸிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் தென் ஆபிரிக்கா 64 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தென் ஆப்ரிக்கா சென்றுள்ள ஸிம்பாப்வே அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் ஆட்டம் புளூம்போன் டைனில் நடந்தது. அபாரமாக ஆடிய ஆம்லா, ஒரு நாள் அரங்கில் 4ஆவது சதம் கடந்தார். இவர் 110 ரன்களுக்கு (14 பவுண்டரி) அவுட்டானார். மறுமுனையில் தனது முதல் ஒரு நாள் ஆட்டத்தில் களமிறங்கிய இங்ராம், சதம் அடித்து அசத்தினார். ஸிம்பாப்வே அணி 6 விக்கெட் இழப்புக்கு 287 ரன்கள் சேர்த்து தோல்வி அடைந்தது.

# விரைவில் களம் திரும்புவேன்- சல்மான் பட்



கராச்சி, ஒக். 18

" என் மீது சுமத்தப்பட்டிருக்கும் சூதாட்டப் புகார்களால் ஏற்பட்ட சர்ச்சைகளிலிருந்து மீண்டு, விரைவில் களம் திரும்புவேன்."

- இவ்வாறு பாகிஸ்தான் வீரரான சல்மான் பட் தெரிவித்துள்ளார். சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி விளையாடியது. இதில், லோர்ட்ஸில் நடந்த 4ஆவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமது ஆஸிப், முகமது ஆமிர் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் எனச் செய்திகள் வெளியாகின. இதனையடுத்து அவர்கள் மூவரையும், ஐ.சி.சி. இடைக்கால நீக்கம் செய்துள்ளது. இந்நிலையில், இவர்கள் மூவரும் தடையை நீக்குமாறு ஐ.சி.சியிடம் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இதன்படி இவர்கள் மீதான விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதி நடக்கவுள்ளது.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே சல்மான் பட் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இங்கிலாந்துத் தொடரின்போது, சூதாட்டப் பிரச்சினையில் சிக்கியமை மிகவும் துரதிஷ்டவசமானது. இதன்மூலம் புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டேன். எதிர்வரும் 30ஆம் திகதி நடக்கவுள்ள ஐ.சி.சியின் விசாரணையில் நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

தற்போது தினமும் 2 மணி நேரம் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். விரைவில் அணிக்குத் திரும்புவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

- இவ்வாறு சல்மான்பட் தெரிவித்தார்.

# மொழிப் பிரச்சினைக்கு ஆலோசனை வழங்க இந்திய அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு

கொழும்பு, ஒக். 18

மொழிப் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மும்மொழிக் கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது குறித்து இந்திய அரசிடம் இலங்கை அறிவுரைகளை கோரியுள்ளது.

சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ் மொழியைக் கற்பிக்கவும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மொழியைக் கற்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மொழிப் பிரச்சினையைப் போக்குவதற்கு ஆலோசனை வழங்குவதற்கு இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்தியாவின் மொழிக் கொள்கைகள் குறித்து அதிகாரிகள் தெளிவுபடுத்த உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சர் கபில் சிபிலுக்கும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்த விடயங்கள் குறித்து கலாந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆங்கிலம், தாய்மொழி மற்றும் மாநிலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் மற்றுமொரு மொழி ஆகியன கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹிந்தி மொழி பேசும் மாநிலங்களில் வேறும் ஓர் முக்கியமான அரச கரும மொழி கற்பிக்கப்படுவதுடன், ஏனைய மாநிலங்களில் ஹிந்தி மொழி மூன்றாம் மொழியாக கற்பிக்கப்படுகிறது.

இதேபோன்று சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகள் கற்பிப்பதற்கு இலங்கையில் திட்டமிடப்பட்டுள்ளது.

## சுஜீவா வைத்தியசாலையின் அறிவித்தல்

எனது உடன் பிறவா சகோதரி சுகந்தியின் கணவரும், எனது மைத்துனருமான பாலச்சந்திரன் ஜெயபாலன் (வெளிவாரி விநியோகப் பணியாளர், முன்னாள் செய்தியாளர், முன்னாள் சாரதி, உதயன் பத்திரிகை நிறுவனம், உரிமையாளர் - செல்வமாளிகை விடுதி, வெள்ளாந்தெரு) கடந்த 16.10. 2010 அன்று அகால மரணம் அடைந்தார். 19.10.2010 இற்குப் பின்னரே எமது வைத்தியசாலை இயங்கும் என்பதை முக்கியமாக வெளிமாவட்டத்திலிருந்து வருகைதரும் நோயாளர் இதனைக் கவனத்தில் எடுக்குமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

சுதேச மருத்துவர்,
ஜெ.ஜெயலன்
T.P. 0775594147

*சுஜீவா வைத்தியசாலை.*

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினரான
Rtr.மு.மைவிழி அவர்களின்
அன்புத் தந்தையான
**சின்னத்துரை முத்துராஜா**
அவர்களின் மறைவுச் செய்தியறிந்து நாம் வேதனையடைவதுடன், அன்னாரின் பிரிவில் துயருறும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகம்


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 65
திகதி - 16.10.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **N** அதிர்ஷ்ட இலக்கம் **08** வெற்றி இலக்கம் **3 9 4 5 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N | 08 | 3 | 9 | 4 | 5 | 5 | ரூ. 19,710,187.00 | பரிசு - |
| 1 பரிசு | | 08 | 3 | 9 | 4 | 5 | 5 | ரூ. 2,000,000.00 | பரிசு 01 |
| 2 பரிசு | | | 3 | 9 | 4 | 5 | 5 | ரூ. 100,000.00 | பரிசு 02 |
| 3 பரிசு | | | | 9 | 4 | 5 | 5 | ரூ. 10,000.00 | பரிசு 26 |
| 4 பரிசு | | | | | 4 | 5 | 5 | ரூ. 1,000.00 | பரிசு 269 |
| 5 பரிசு | | | | | | 5 | 5 | ரூ. 50.00 | பரிசு 2580 |
| 6 பரிசு | | | | | | | 5 | ரூ. 20.00 | பரிசு 24878 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 3 | 9 | 4 | 5 | | ரூ. 1,000.00 | பரிசு 27 |
| 8 பரிசு | | | 3 | 9 | 4 | | | ரூ. 100.00 | பரிசு 257 |
| 9 பரிசு | | | 3 | 9 | | | | ரூ. 50.00 | பரிசு 2607 |
| 10 பரிசு | N | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10175 |
| 11 பரிசு | N | 08 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1158 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,857,910.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெறுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.19,710,187.00


# அரசியலிலிருந்து ஓய்வா? மறுக்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஒக். 18

அரசியலிலிருந்து ஓய்வு பெறும் திட்டம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போகிறார் என ஊடகங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உடல் நலக் குறைவினால் சம்பந்தன் அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போகிறார் என சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

சம்பந்தனுக்கு பதிலாக இளம் தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் சில ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அண்மைக்காலமாக நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளில் சம்பந்தன் பங்கேற்கவில்லை எனவும், உடல் நலக் குறைவினால் இந்தியாவில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கட்சித் தலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை என்று சிரேஷ்ட உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

# மூனின் பேச்சாளர் மீது குற்றச்சாட்டு


கொழும்பு, ஒக். 18

இலங்கை தொடர்பாக கேட்கப்படும் கேள்விகளுக்கு ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கி மிகவும் தாமதமாக பதில்களை வழங்கி வருகின்றார் என்று இன்னர் சிட்டி பிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

செய்தியாளர் சந்திப்புகளின்போது இலங்கை தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க பேச்சாளர் 24 மணித்தியாலங்கள் கூட தாமதிக்கின்றார் என்று அது சுட்டிக் காட்டி உள்ளது. அத்தோடு உரிய பதில்களை வழங் காமல் சமாளிக்கின்றார் என்றும் அது சாடியுள்ளது.

(ஒ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பிரதேச செயலாளராகக் கடமையாற்றி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றதை பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலி.கிழக்கு (தெ.ப.)
ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி

## வாழ்த்தி வரவேற்கின்றோம்



கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவியேற்கும் மதிப்பிற்குரிய உயர்திரு.
**செ.ஸ்ரீநிவாஸன் (SLAS.I)**
அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இத் தன்னிகரில்லாச் சேவையாளன் மேன்மேலும் பதவிகளும் பட்டங்களும் பெற்று இம் மாவட்டத்திற்கு சீரிய பணி செய்ய காத்தல் கடவுளாம் கண்ணபிரானின் திருவருளை வேண்டிநிற்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
மல்வில் கிருஷ்ணன் கோயில்,
மல்வில் கிருஷ்ணன் அறநெறிப் பாடசாலை,
மல்வில் கிருஷ்ணன் இந்து இளைஞர் மன்றம்.

(சி/571994) மல்வில், இயக்கச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





06.10.2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்ற எமது கிராமத்தைச் சேர்ந்த

**மார்க்கண்டு மதியழகன்** B.A. (Hons) தொல்லியல்
**சந்திரன் ஜெகராசா** B.A. (Hons) வரலாறு

ஆகிய இருவரும் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: கொடிகாமம் தெற்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ப.பானுஜன்-159



ஜெ.பிரணவி-152



செ.டதுர்ஷிகா-150



ம.கிஷோபா-144



*யாழ்.கல்வியங்காடு இந்து தமிழ்கலவன் பாடசாலையில் 2010 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

இம் மாணவர்களை நெறிப்படுத்திய அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்

**பெற்றோர்,
யா/கல்வியங்காடு
இ.த.க.பாடசாலை**


## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

**இன்று (18.10.2010) திங்கட்கிழமை 8.30 மணியளவில் இல. 253, பிரதான வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள**

# J.R.M. TEXTILE

**புதுப்பொலிவுடன்**

திறந்து வைக்கப்படவுள்ளது. அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 253,
பிரதான வீதி, பருத்தித்துறை*

M.றாபேட் மரியதாஸ்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினபூபதி தம்பிராசா

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி தம்பிராசா அவர்கள் நேற்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை கத்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (18.10.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை வடக்கு அமெரிக்கன் இலங்கை மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை*

தகவல்:
**திருமதி சி.இரத்தினமலர்**
(மருமகள்)

### கிருஷ்ணர் பரமசிவம்



ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் பரமசிவம் கடந்த (15.10.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் அன்புக் கணவரும் தயாபரன் (சுவிஸ்), சூரியகுமார் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), ராம்குமார் (லண்டன்), ராஜ்குமார் (லண்டன்), ஷாமினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலங்காடு,*
*ஏழாலை தெற்கு.* (104802)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த போட்டிகள் நாவலப்பிட்டிக்கு மாற்றம்!

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த இளைஞர் சேவை விளையாட்டுப் போட்டிகள், நாவலப்பிட்டிக்கு மாற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் தென்னிலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள், துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியைப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும், இதனால், விளையாட்டரங்கப் பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும்,

இதன்காரணமாகவே விளையாட்டுப் போட்டிகளுக்கான இடம் மாற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நவம்பர் மாதம் 11, 12, 13, 14ஆம் திகதிகளில், நாவலப் பிட்டி ஜயதிலக விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முதலுதவிச் சங்கத்தின் பயிற்சிப் பட்டறை

இலங்கை முதலுதவிச் சங்கத்தின் தகுதிநிலை விரிவுரையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளையும், நாளை மறுதினமும் மு.ப. 10 மணிக்கு முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று கிளிநொச்சி ஆணையாளர் வி.மோகனதாஸ் அறிவித்துள்ளார். துணுக்காய் வலயப் பாடசாலைகளிலிருந்து தெரிவாகிய ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். (ஒ-16)


## தவறிவிட்டது

5ஆம் வட்டாரம், இரணைப்பாளை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவபாதம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 442652023V விசுவமடு சந்தைக்கும் விசுவமடு 12ஆம் கட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் விசுவமடு வாணி விலாஸில் ஒப்படைக்கவும். தகுந்த சன் மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

இந்தியாவைச் சேர்ந்த பெருமாள் கோபால் என்பவரின் இந்தியக் கடவுச் சீட்டு, நேற்று முன்தினம் 16.10.2010 தாவடிக்கும் - கோண்டாவிலுக்கும் இடையில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். **0774941425, 0775590492**

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: 0750410205


## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற ஓவசியரும், சமாதான நீதிவானும் நெழுவினி சித்தி விநாயகர் நெடுந்தீவு தேவஸ்தான பரிபாலனசபை முன்னாள் தலைவரும், மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தாக்களுள் ஒருவருமாகிய

### இராமலிங்கம் கந்தையா


அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற நெழுவினியானைப் பிரார்த்திப்போம்.

*நெடுந்தீவு.*

**பரிபாலன சபை**
**நெழுவினி சித்திவிநாயகர் தேவஸ்தானம்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை முத்துராஜா



மண்டைதீவு தெற்கு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அராலி வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை முத்துராஜா நேற்று (17.10.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - நித்தியலஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேந்திரராணியின் அன்புக் கணவரும் மைவிழி, உசாந்தன், சுரேந்திரன், நர்மதன், மஞ்சநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.10.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வீதி, ஓட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**மைவிழி முத்துராஜா (மகள்)**

## மரண அறிவித்தல்

### பாலச்சந்திரன் ஜெயபாலன் (றொனால்ட்)

**(செல்வமாளிகை விடுதி உரிமையாளர், வெளிவாரி விநியோகப் பணியாளர், முன்னாள் செய்தியாளர், முன்னாள் சாரதி - உதயன்)**



முதலைகுத்தி, உயிலங்குளம், மன்னாரைப் பிறப்பிடமாகவும் சிறிராமபுரம், மகாறம்பைக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் தற்போது இல.15, செல்வமாளிகை, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் ஜெயபாலன் நேற்றுமுன்தினம் (16.10.2010) சனிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா பாலச்சந்திரன் (குப்பிளான்) - அஞ்சலா சிறிமதி (உயிலங்குளம்) தம்பதியரின் சிரேஷ்ட மகனும் சுகந்தினியின் அன்புக் கணவரும் ஜெயதுவாரகன் (தரம்-4, ஆனைப்பந்தி மெ.மி.வி), ஜெயதுவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாலன் (குப்பிளான்), ஜெயதேவி (மடு), தேவபாலன் (தயா-சவுதி) ஆகியோரின் சகோதரரும் தம்பிப்பிள்ளை (Rtd. CTB - மன்னார்) - சிவகங்கை தம்பதியர் மற்றும் கணேஸ்வரி (AUS), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் சுபாசினி, சிறில் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் சிவறாஜி (UK), சிவறஞ்சி (Colombo), ஜெயலன் (Doctor), பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் யூட் அனுசியா, அஜந்தா, தயானி, கொலின்சன், அலஸ்ரின், விகாஸ், ஜரின், யுகன்யா ஆகியோரின் மாமனாரும் திருச்செல்வம் (இந்தியா), பாஸ்கரன் யூட் றொபின்சன் (முருங்கன்), அருந்தவம் ஆகியோரின் மருமகனும் சொக்கலிங்கம் (பிரான்ஸ்), கணேஸ், நகுலேஸ்வரன் (குப்பிளான்), சறோஜினி, ரோகினி, பஞ்சாட்சரம் (AUS), பத்மநாதன் (AUS) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

பூதவுடல் நாளை (19.10.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இறுதி ஆராதனைக்காக அஞ்சனந்தாழ்வு மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"செல்வ மாளிகை",**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**
**T.P. : 0772247481** *(ஓ/312010)*

தகவல் :
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தியாகராஜா (ஆச்சாரியார்)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தியாகராஜா கடந்த வெள்ளிக்கிழமை (15.10.2010) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தம்மா, சிவநாதன், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரதீபன், ஜெகதீபன், குகதீபன், நவதீபன் (இந்தியா), கஜதீபன், சசிதீபன், வினோதன் ஆகியோரின் பாசமிக தந்தையும் கந்தசாமி, கமலாம்பிகை, நிதிமலர், செல்வராணி, ஜெயராணி, சிவபாலன், தவபாலன், பத்மராணி, புஸ்பராணி, விஜயராணி, ஜெயபாலன், சண்முகபாலன் ஆகியோரின் மைத்துனரும் சியாமளா, அனுஷியா, வதனா, கேசலா ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக்ஷனா, ரிஷிகாந், பானுஜன், கபீர்த்தனா, சர்மிளா, விதுர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜ வீதி,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**
**T.P. : 0779173866** *(104797)*

தகவல் :
**குடும்பத்தினர்.**

# சுவிஸில் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் மீட்பு!

கொழும்பு, ஒக். 18

சுவிற்ஸர்லாந்தின் பேர்ண் மாநகரத்தில் உள்ள வீடு ஒன்றில் நண்பர்களுடன் வசித்து வந்தபோது கடந்த மாதம் 21 ஆம் திகதி காலையில் கடத்தப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் வைத்து மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெண் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒன்றின் பின்னணியில் இலங்கைத் தமிழர்கள் இருவர் இவரைத் துப்பாக்கி முனையில் காரில் ஏற்றி, கயிற்றால் கட்டி, பிரான்ஸுக்குக் கடத்திக் கொண்டு சென்றுள்ளனர்.

இவரைக் கண்டுபிடிக்க சுவிற்ஸர்லாந்து, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அந்த அந்த நாட்டுப் பொலிஸார் தீவிர புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தனர்.

பின்னர் இவர் பாரிஸுக்குத்தான் கடத்திக் கொண்டு வரப்பட்டிருக்கின்றார் என்று கண்டுபிடிக்கப்பட்டது. பாரிஸ் பொலிஸார் கடந்த 2 ஆம் திகதி இவரைக் கண்டுபிடித்து மீட்டுள்ளனர்.

அத்துடன் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சட்டவிரோதத் தடுத்து வைப்பு குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இளைஞர் சுவிஸுக்கு பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு மாதம் ரூ. 10 கோடி செலவிடுகிறது அரசு

கொழும்பு, ஒக். 18

புலிகள் இயக்க முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்காக மாதம் தோறும் 10 கோடி ரூபாவை அரசு செலவிட்டது என இராணுவத்தின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

கடந்த 2009 மே மாதம் தொடக்கம் அரசு முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்காக மாதம் தோறும் 10 கோடி ரூபாவை செலவிட்டது. ஆனால் தற்போது இந்தச் செலவினம் 6 கோடி 50 இலட்சம் ரூபாவாகக் குறைந்துள்ளது. காரணம் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 4500 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 1500 பேர் இந்த மாத இறுதியில் விடுவிக்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓசியன் லேடி கப்பல் குறித்த விவரத்தை அறிய முடியாமல் தடுமாறுகிறது கனடா

கொழும்பு, ஒக். 18

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி 76 இலங்கைத் தமிழர்களுடன் கனடாவைச் சென்றடைந்த ஓசியன் லேடி கப்பல் எங்கிருந்து வந்தது? எங்கெல்லாம் தரித்து நின்றிருக்கின்றது போன்ற விவரங்களை ஊர்ஜிதப்படுத்த முடியாமல் கனேடியப் புலனாய்வு அதிகாரிகள் தடுமாறுகின்றனர்.

ஏனெனில் பயணப் பாதையை அறிந்து கொள்ளக் கூடிய உபகரணம் அக்கப்பலில் இல்லை. அது காணாமல் போயிருக்கின்றது அல்லது அகற்றப்பட்டிருக்கின்றது.

இக்கருவியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கரையோரக் காவல் படையினர் தீவிரமாக ஈடுபட்டும் உள்ளனர்.

ஆனால் எம்.வி.சன்.சி கப்பலில் இக்கருவி இருக்கின்றது. அதை வைத்து சன்.சியின் பூர்வீகத்தையே அறிந்து கொண்டனர்.

# ஒற்றைத் தண்டவாள ரயில் சேவை: ஆலோசனை நடத்துகிறது அமைச்சு

கொழும்பு, ஒக். 18

ஒற்றை தண்டவாளத்தில் பயணிக்கக் கூடிய நவீன ரயில் சேவைகளை இலங்கையில் அறிமுகப்படுத்துவது குறித்து போக்குவரத்து அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

இந்த ரயில் சேவையை ஆரம்பத்தில் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நிர்மாணிக்கலாமா என ஆராயப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ரக ரயில் சேவையை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதியுதவியை வழங்க பல நாடுகள் ஏற்கனவே முன்வந்துள்ளன என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஒற்றைத் தண்டவாள ரயில் சேவை சாத்தியப்படும் பட்சத்தில் ரத்மலானை மற்றும் பத்தரமுல்லைக்கு இடையே ஏற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போக்குவரத்துச் சேவையை ஸ்தாபிப்பதற்கு ஆரம்பச் செலவீனம் பெரும் தொகையாக இருக்கும். அண்மையில் இந்த நவீன சேவை குறித்து நேரடியாகத் தகவல்களைச் சேகரிக்க தாம் கொரியா சென்றிருந்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# மீளக்குடியேற்றப்பட்ட மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவத் தயார்

## பதில் தூதர் விக்ரம் மிஸ்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளை இந்திய அரசு தொடர்ந்தும் வழங்கவுள்ளது என்று இலங்கைக்கான இந்தியப் பதில் தூதுவர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற யாழ். இந்து பழைய மாணவர் சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக ஒரு தொகை உழவு இயந்திரங்கள் அடுத்த வாரமளவில் கொழும்பில் உள்ள இந்தியத் தூரகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இடம்பெயர்ந்து நிரந்தர வீடுகள் இன்றி வசிக்கும் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள 50ஆயிரம் வீடுகளின் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள பயணிகள் படகு தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

- இப்படி அவர் கூறினார். (சி)

# 2,600 சிறுவர்களைப் பிக்குகளாக்கும் பிரதமரின் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 18

அடுத்த வருடம் மே மாதத்திற்குள் 2600 சிறுவர்களை பௌத்த பிக்குகளாக்கும் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் திட்டத்தை சிறுவர் உரிமை ஆர்வலர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

புத்த சாசனத்தை ஊக்குவிக்கவும் சிறுவர்களை வறுமையிலிருந்து காக்கவும் இந்தத் திட்டம் வழிவகுக்கும் என பிரதமர் கருதுகின்றார்.

புத்த பகவான் ஞான நிலையை அடைந்த 2600 ஆவது வருடபூர்த்தி அடுத்த மே மாதம் அனுஷ்டிக்கப்படுகிறமையை முன்னிட்டு இந்தத் திட்டத்தை பிரதமர் முன்வைத்துள்ளார். (சி)

## இந்திய வெளிவிவகார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வகிப்பார் என்று இலங்கை வெளிவிவகார அமைச் சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கிருஷ்ணா இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் உள்ள பல இடங்களுக்குச் செல்வார் என்றும் இந்திய அரசின் உதவியின் கீழ் இடம்பெறும் அபிவிருத்தித்திட்டங்களைப் பார்வையிடுவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக எதிர்வரும் 29 ஆம் திகதி கிருஷ்ணா இலங்கை வருவதாக இருந்தது. இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்படவுள்ள காங்கேசன்துறை - ஓமந்தை இடையிலான ரயில் பாதை தொடக்க நிகழ்வில் அவர் கலந்து கொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சரின் பயணம் பிற்போடப்பட்டுள்ளது. (உ-சி)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உப தலைவர், சைவ வித்தியா விருத்திச்சங்கம், திருநெல்வேலி, (முன்னாள் தலைவர், ப.நோ.கூ.ச., சாவகச்சேரி)



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (16.10.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து கணபதிப்பிள்ளை-அன்னலஷ்மி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான Hindu Board இராஜரட்ணம்-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற யோகாம்பாளின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் யசோதா, தயாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணமூர்த்தி (பொறியியலாளர், கொழும்பு), நவக்குமாரன் (கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளை) ஆகியோரின் மாமனாரும் உபேந்திரன், மாதங்கி, கிருத்திகன், தாரங்கி, தனுரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி ஞானசௌந்தரி கந்தையா மற்றும் திருமதி ஞானபூங்கோதை வைரவிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் சரசாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அயோத்தியா",
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
ந.நவக்குமாரன் (மருமகன்).

(104772)


## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளப்பிய பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்கையிலேயே இப்படிக் கூறினார்.

வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வுப் பணிகளுக்கு அந்தப்பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால், அக்கூட்டங்களில் பங்குபற்ற கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதுகுறித்தே சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பினார். ''வன்னி மாவட்ட இணைப்புக்குழுத் தலைவரான உங்களது உத்தரவுப்படியா அல்லது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் உத்தரவுப்படியா கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை'' என்று சிவசக்தி ஆனந்தன் அமைச்சரிடம் கேட்டார்.

அதற்குப் பதில் அளித்த அமைச்சர், கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பாமைக்கும் தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றார். அழைப்பு அனுப்பப்படாமைக்கு என்ன காரணம் என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனால் கூட்டமைப்பினரைக் கூட்டங்களுக்கு அழைத்தால் அவர்கள் தெரிவிக்கும் விடயங்களுக்கும் அரசின் செயற்பாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும். அதன் காரணமாக மக்களின் பணிகள் தாமதமாகும். இதனால் கூட்டமைப்பினரைக் கூட்டங்களுக்கு அழைப்பதில்லை'' - என்றார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் -

''எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் ஜனாதிபதி கூட்டும் அபிவிருத்தி தொடர்பான கூட்டத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்புக் கிடைக்கவில்லை. அழைப்புக் கிடைத்தால், எமது மக்களின் நன்மை கருதிப் பங்குபற்றுவோம்'' - என்றார் சிவசக்தி ஆனந்தன். (உ-ஐ)

## வடக்கு அபிவிருத்திக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கில்லை எனத் தெரிவித்த திருமதி சார்ள்ஸ் அந்தப் பொறுப்பு ஜனாதிபதி செயலகத்திடமே இருக்கின்றதெனவும் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கூட்டமைப்பில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து எம்.பிக்களும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று எம்.பிக்களும் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் வட மாகாணத்தில் ஒரு எம்.பியைக் கொண்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் இப்போது அரசுக்கு ஆதரவளிக்கின்றது. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு எம்.பிக்களையும், ஈ.பி.டி.பி மூன்று எம்.பிக்களையும் கொண்டுள்ளன. வட மாகாணத்திலுள்ள 15 எம்.பிக்களில் மொத்தம் ஆறு எம்.பிக்கள் அரசின் பக்கமுள்ளனர். யாழ் மாவட்டத்தில் வெற்றி பெற்ற ஒரே ஐ.தே.கட்சி எம்.பியான விஜயகலா மகேஸ்வரன் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ளார்.

இந்த நிலையில் பெரும்பான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்புக்கு, இக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பப்படவில்லை. இது தமிழ் மக்களை அரசு திட்டமிட்டு புறக்கணிக்கும் ஒரு செயல் எனக் குற்றஞ்சாட்டினார் பிரேமச்சந்திரன். (உ-சி)

## பொலிஸ் வன்முறையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் திணைக்களம் வழங்கியுள்ள ஊடக அடையாள அட்டையைக் காண்பித்த பின்னரும் பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டனர் என தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸாரின் இந்த அடாவடித்தனமான நடவடிக்கையை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (சி)


SHAAM PRIVATE HOSPITAL
ஷாம் தனியார் மருத்துவமனை

புலோலி மேற்கு, பருத்தித்துறை
(தும்பசிட்டி பாடசாலை முன்பாக)

மேற்படி வைத்தியசாலையில் பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.
உடன் தொடர்புகொள்ளவும்.

1) ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் (Nursing officer)
2) ஓய்வுபெற்ற ஆய்வுகூட உத்தியோகத்தர் (MLT)

தொடர்பு : தொ.பே.0772845175 (104758)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.